

# உணர்வுகள் கொன்று விடு

சிறுகதைகள்

நிவேதா உதயராயன்

# உணர்வுகள் கொன்று விடு

நிவேதா உதயராயன்

ஜீவநதி வெளியீடு
2019

## உணர்வுகள் கொன்றுவிடு
(சிறுகதைத் தொகுதி)


| | |
|---|---|
| ஆசிரியர் | : நிவேதா உதயராயன் |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| வெளியீடு | : ஜீவநதி, கலைஅகம், அல்வாய் |
| வடிவமைப்பு | : க.பரணீதரன் |
| அச்சகம் | : பரணி அச்சகம், நெல்லியடி. |
| பக்கங்கள் | : viii + 126 |
| முதலாம் பதிப்பு | : தை 2019 |
| விலை | : 400 ரூபா |
| ISBN | : 978-955-4676-91-6 |

ஜீவநதி வெளியீடு - 117

யாழ் இணையத்தின் அறிமுகத்தினால்
எழுத ஆரம்பித்த எனக்கு, என் எழுத்துக்களை ஊக்குவிக்கும்
தளமாக இருந்தது யாழ் இணையமும் அதன் உறவுகளும்.
அதனால் இந்நூலை யாழ் இணையத்துக்கு
சமர்ப்பணமாக்குகின்றேன்.

# பதிப்புரை

ஜீவநதியின் 117 ஆவது வெளியீடாக நிவேதா உதயராயனின் 'உணர்வுகளைக் கொன்றுவிடு' சிறுகதைத் தொகுப்பு வெளி வருகின்றது. இவர் பல இலக்கியவாதிகளை எழுத்துலகத்திற்கு தந்த ஈழத்தின் புகழ் பூத்த இணுவில் என்னும் ஊரில் பிறந்தவர். பிரித்தானியாவில் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி நிவேதா உதயராயனின் 'வரலாற்றைத் தொலைத்த தமிழர்' - ஆய்வு நூல், 'நிறம் மாறும் உறவுகள்' - சிறுகதைகள், 'நினைவுகளின் அலைதல்' - கவிதைத் தொகுதி ஆகிய மூன்று நூல்களை முன்னர் வெளியிட்டு பலரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார். இத்தொகுப்பு புலம் பெயர் தமிழர்களின் வாழ்வை பிரதிபலித்துக் காட்டும் பல கதைகள் நிறைந்த நிறைவான தொகுதி. ஈழத் தமிழர்களின் வாழ்க்கையை 'புலம் பெயர் தேசம் - ஈழம்' என்ற இரு தளங்களில் மிக நுண்ணிய அவதானிப்பு மூலம் சிறுகதைகளாக தந்துள்ளார். இத்தொகுப்பும் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்னும் நோக்கோடு வாழ்த்தி இந்நூலை வெளியிடு கின்றோம்.

க.பரணீதரன்
பதிப்பாசிரியர்

# அணிந்துரை

புலம்பெயர் எழுத்தாளரென்ற விதத்திலே ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த, மூத்த தலைமுறை சார்ந்த சிறுகதை எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், அடுத்த தலைமுறை சார்ந்த சுமதி ரூபன், தமிழ்நதி முதலானோரைத் தொடர்ந்து வந்த அடுத்த தலைமுறை எழுத்தாளராக இத்தொகுதிக்குரிய நிவேதா உதயராயன் அவர்களைக் கருதலாம்.

முன்னைய தலைமுறையினருக்கும் இவருக்குமிடையேயான "கால வேறுபாடு" காரணமாக புலம்பெயர் நாட்டிற்குரிய முற்பட்ட காலப் பிரச்சினைகளோடு புதிய பிரச்சினைககள் சிலவற்றையும் இவர் எழுதியிருக்கிறார். நிவேதாவின் 14 சிறுகதைகளுள் 11 சிறுகதைகள் புலம்பெயர் நாட்டிற்குரியனவாக அமைய, 02 சிறுகதைகள் ஈழத்தில் நிகழ்கின்றனவாகவுள்ளன. ஈழம் சார்ந்து நிகழ்கின்ற சிறுகதைகளிலும் புதியதும் பழையதும் உள்ளன என்பது கவனிக்கத்தக்கது. "கால மென்பது கறங்குபோற் சுழல மேலதுகீழாய் கீழதுமேலாய் மாறுவதற் கேற்ப, புலம்பெயர் நாட்டுத் தமிழ் மக்களது வாழ்வியற் கோலங்களும் மாற்றமடைந்து வருகின்றன என்பதற்குச் சான்றாக இத்தொகுப்பி லுள்ள சிறுகதைகளில் ஒன்றான "உணர்வுகள் கொன்றுவிடு" அமைந் துள்ளது. முகப்புத்தகம் ஏற்படுத்தப்போகின்ற பண்பாட்டு அதிர்ச்சி யின் அறுவடையாக இச்சிறுகதை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கோவிலூர் செல்வராஜன் எழுதிய சிறுகதையொன்று புலம்பெயர் நாட்டுக் குடும்பவாழ்க்கைச் சூழலில் பெற்றோர் இருவரும் வேலை செய்வது காரணமாக, தனிமை நிலைமை யில் பொழுதுபோக்காக தொலைக்காட்சி பார்க்கின்ற தமிழ்ச் சிறுவன் ஒருநாள் ஆபாசப்படமொன்றைப் பார்ப்பதாக முடிவடையும்!

தமிழ்ப் பண்பாட்டுச் சீரழிவின் ஆரம்பமொன்றை அது குறித்து நிற்பது போலவே இன்னொருவகைப் பண்பாட்டுச் சீரழிவை இச்சிறுகதை இனங்காட்டுவது குறிப்பிடத்தக்கது. அ. முத்துலிங்கம் எழுதிய அமெரிக்காக்காரி எதிர்காலப் பண்பாட்டு ரீதியில் இன்னொரு அதிர்ச்சிதர, நிவேதாவின் இச்சிறுகதை மற்றோரு கோணத்தில் அதைச் செய்துள்ளது.

புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதத் தயங்குகின்ற மேற்கூறிய வாறான பிரச்சனை போன்றே இத்தொகுப்பிலுள்ள "வரம் வேண்டினேன்", "முடிவாகிப்போனது", "இஞ்சினியர்", "வாழ்வு வதை யாகி", "உறவுகள்", "ரயில் பயணம்" என்பனவும் பேசாப் பொருளை பேசுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சில சிறுகதைகள், உதாரணமாக "வேப்பங்காய்கள், ஆசை மன தளவு, விதியின் சதி" முதலியன முன்னர் பேசியபொருள் பேசினாலும் எடுத்துரைப்பு முறைமை காரணமாக கவனத்துக்குரியனவாகின்றன. இறுதியாகக் குறிப்பிட்ட சிறுகதைகளின் பேசுபொருள்கள் பற்றி விரிவஞ்சி எதுவும் கூறவில்லை. வாசகர்கள் அவற்றை ஆழமாக வாசித்து அறிந்துகொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

ஈழத்தமிழரது வாழ்க்கைபற்றி எழுத்தியுள்ள சிறுகதைகளில் ஒரு சிறுகதை குறிப்பாக, சமகால வாழ்க்கை (அலங்)கோலங்களை வரைய முற்பட்டுள்ளது என்ற விதத்தில் முக்கியமான அவதானிப்புக்குரியது. "எப்போதும் இரவு" என்ற அச்சிறுகதை போருக்குப் பிற்பட்ட காலத்து தமிழ்ப் பெண்களது வாழ்க்கையைப் பேச முற்பட்டுள்ளது. குறியீட்டுப் பாங்கிலான தலைப்புக்கொண்ட இச்சிறுகதையும் அதிர்ச்சிதரும் ஒன்றே. பேசாப் பொருளே. சிறுகதையில் பேசப்படுகின்ற பிரச்னைக்கு மாற்றுவழி காணமுடியாத நிலையில் ஜீரணித்தே ஆகவேண்டிய கசப்பான உண்மையே.

புலம்பெயர் தமிழ்ப் பெண்களின் நிலையை "உணர்வுகள் கொன்றுவிடு" ஒருவிதத்தில் வெளிப்படுதத்துவது போன்று இச்சிறுகதை ஈழத்துத் தமிழ்ப் பெண்களின் பரிதாபகரமான நிலையை இன்னொரு கோணத்திலே வெளிப்படுத்தி வாசகரைச் சிந்திக்க வைத்துள்ளது என்பது மிகைக் கூற்றன்று! மேலும் பெரும்பாலான

சிறுகதைகள் ஓஹென்றி பாணியில் எதிர்பாராத முடிவுகளைக் கொண்டிருப்பினும் அவை தவிர்க்கவியலாத இயல்பான முடிவுகளே என்பதையும் மனங்கொள்வது அவசியமாகின்றது.

என் பார்வைக்கு இறுதியாகக் கிடைத்த மனம் என்னும் மாயம், விடுதலை ஆகிய இரு சிறுகதைகள் பற்றியும் ஒரு சிறு குறிப்பு கூற வேண்டும். புலம்பெயர் வாழ்க்கைச் சூழலில், தாய் பிள்ளைகளுக்கு இடையிலான, கணவன் மனைவிக்கு இடையிலான, உறவுகள் கேள்விக் குள்ளாவதை - தவிப்புக்குள்ளாவதை - அந்தரிப்புக்குள்ளாவதை - அவசர முடிவுகளுக்குள்ளாவதை மோசமான முறையில் சித்தரிப்பதில் அவை வெற்றி கண்டுள்ளன என்பேன்.

ஆக, பதினான்கு சிறுகதைகள் கொண்ட இத் தொகுப்பில் இரு சிறுகதைகள் நீங்கலாக ஏனைய அனைத்தும் எதிர்காலத்தில் முக்கிய மான கவனிப்பைப் பெறவுள்ள எழுத்தாளரொருவரை இனங்காட்டச் செய்துள்ளது என்பது மனநிறைவளிக்கின்றது; எனினும் நிதானமான மேலதிக வாசிப்பும் பெண்ணிலைவாத நோக்குப்பற்றிய தேடலும் இவரது எதிர்காலத்துக்கு அவசியமானவை என்பதையும் கூறியே ஆகவேண்டும்.

இறுதியாக ஒன்று

புலம்பெயர்ந்து வாழ்கின்ற பெண்களது சமகால வாழ்க்கை சார்ந்த நல்லதொரு நாவலை நிவேதா உதயராயன் தரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்! அதற்கான சமூகப் பார்வையும் அவதானிப்பும் எழுதாற்றலும் இவரிடமுள்ளது என்று துணிந்து கூறுவேன். கனவு மெய்ப்படுவதாக!

வாழ்த்துக்களுடன்

பேராசிரியர் செ .யோகராசா
மேனாள் மொழித்துறைத் தலைவர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

- ஆசை மனதளவு
- இஞ்சினியர்
- உணர்வுகள் கொன்றுவிடு
- உறவுகள்
- எப்போதும் இரவு
- பெண் மனது
- முடிவாகிப் போனது
- ரயில் பயணம்
- வரம் வேண்டினேன்
- வாழ்வு வதையாகி
- விதியின் சதி
- வேப்பங்காய்கள்
- மனம் என்னும் மாயம்
- விடுதலை

# ஆசை மனதளவு

காலை இள வெயில் எங்கும் இருள் விரட்டி ஒரு கத கதப்பைத் தந்துகொண்டிருந்தது. கடந்த ஆறு மாதக் குளிரின் பின் இன்றுதான் வெப்பநிலை இருபது பாகை செல்கியசுக்கு வந்துள்ளது. மரங்களில் தளிர்களின் பசுமை இங்கொன்றும் அங் கொன்றுமாயும் பார்க்கவே மனதிலும் ஒரு உற்சாகத்தையும் புன்னகையைத் தந்திருக்க வேண்டும். ஆனால் இனியாள் எதை யுமே பார்க்கப் பிடிக்காது படுக்கையிலேயே சுருண்டு கிடந்தாள். மனிதர்கள் ஏன் இப்படி இருக்கின்றனர். மனிதாபிமானமும் மனச்சாட்சியும் அற்றுப்போய் எல்லாம் பணமாகி, கூச்சம் எதுவு மற்று... அவளுக்கு நினைக்கத் தன்மேலேயே கூச்சம் எழுந்தது.

நான் கூடக் கூச்சமற்றவள் தானே. உயிருக்காக இப்படி ஒன்றைச் செய்யப் போய்த் தானே இப்படி ஒரு சுழலில் மாட்டி நிற்கிறேன். அங்கேயே இருந்திருக்க வேண்டும். இத்தனை ஆயிரம் மக்கள் இன்னும் இருக்கிறார்கள் தானே போரின் வடுச் சுமந்து, காயங்களை இன்னுமே ஆற்ற முடியாது, மீண்டு எழவே முடியாத சகதிக்குள் சிக்கி... ஒருவிதத்தில் நானும் சுயநலம் கொண்டவள் தான்... எண்ணிக்கொண்டு இருக்கும் போதே கைத்தொலைபேசி ஒலிக்க எடுத்துப் பார்த்தவள், தமக்கையின் எண் என்றதும் கோபத்துடன் தொலைபேசியை முற்றிலும் அணைத்துவிட்டு மேசையில் வைத்தாள்.

இவள் எப்பிடி எனக்கு அக்காவாகப் பிறந்தாள் என்று கோபம் எட்டிப் பார்த்தது. தான் தவறு செய்ததுமல்லாமல் என்னையும் செய்யும்படி தூண்டுவது எத்தனை தவறு. என்னால் முடியாது என்று எத்தனை தடவை அழுத்தம் திருத்தமாகக் கூறிய பின்னும் சீச் சீ... வெளிநாடு வந்து கொஞ்சம் பணமும் சேர்ந்தால் இப்படியா நடப்பது என்று எண்ணியவள், உடனேயே அந்த எண்ணமே தவறு என்றும் எண்ணிக் கொண்டாள். ஒருத்தியை வைத்து மற்றவர்களையும் அப்படி எண்ணுவது தவறு என்று எண்ணிய மாத்திரத்தில் ஜீவா அண்ணா தான் மனதில் வந்தார். அவரும் இல்லை என்றால் நான் சிலவேளை தற்கொலைதான் செய்திருப்பேன் என எண்ணிக்கொண்டே படுக்கையை விட்டு எழ மனமின்றி மறுபுறம் திரும்பிக் குறுகிக் கொண்டாள் இனியாள்.

***

எங்கும் ஒரே புகை மூட்டமாகக் காட்சியளிக்க ஓடிக் கொண்டிருக்கும் மற்றவர்களுடன் அவளும் சேர்ந்து ஓடிக் கொண்டே இருக்கிறாள். அங்கங்கே குண்டுகள் பட்டு எரிந்து கொண்டிருக்கும் கட்டடங்களும் நிலம், செடிகொடிகள் எல்லாம்... ஐயோ... அவள் பின்னால் பிணங்கள் எல்லாம் எழுந்து ஓடிவருவதுபோல் இருக்க அவற்றிலிருந்து தப்பிப்ப தற்காய் இன்னும் வேகமாக ஓடியோடி கால்கள் ஓய்ந்துபோக, அத்தனையும் இவளை வந்து மூடியதில் மூச்சே விடமுடியாது இவள் கத்திய சத்தத்தில் நந்தினி ஓடிவந்து இவளை உலுக்கியதில் இவளுக்கு தான் எங்கிருக்கிறோம் என்ற நினைவு வந்தது. இப்பிடித்தான் கடந்த ஆறுமாதமாக போர் தந்த சுழலில் சிக்கி வெளிவர முடியாது தவிப்பவளைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு வந்து வெள்ளவத்தையில் வைத்திருக்கிறாள் நந்தினி.

இனியாளின் சகோதரி ஒருத்தி லண்டனில் இருக்கிறாள். அவள் எப்பிடியும் இனியாளைக் கூப்பிடுவதற்கு ஒழுங்கு செய்வ தாகக் கூறி அவள் செலவுக்கு கொஞ்சப் பணமும் அனுப்பி யிருக்கிறாள். பணம் அனுப்பாவிட்டால் கூட நந்தினி அவளிடம் அதை எதிர்பார்த்திருக்க மாட்டாள் தான். கொழும்பில் ஒரு

பத்திரிக்கை நிருபராக இருப்பதனால் இயல்பாகவே நந்தினி யிடம் இருக்கும் துணிவுதான் அவளைத் தன்னுடன் வைத்திருக்க உதவியது. இயக்கத்தில் இருந்த ஒருத்தியை, காம்பில் ஆட் களோடு ஆட்களாய் தப்பிப் பிழைத்து வந்தவளை தன்னுடன் கூட்டிக்கொண்டு வர அவளாக ஆசைப்படவில்லைத்தான். ஆனாலும்" நந்தினி இவள் இனியாளை உன்னோட கூட்டிக் கொண்டு போய் வச்சிருந்து பாஸ்போட்டும் எடுத்துக் குடுத்தால் மூத்தவள் எப்பிடியும் வெளியில எடுத்துப் போடுவள். இங்க இருந்தால் இவள் யோசிச்சு யோசிச்சே செத்துப்போவள். வெளி யில சனத்தை நம்பிப் போகவும் ஏலாது. இந்த உதவியை மட்டும் செய் நந்தினி" என்று பெரியம்மா கெஞ்சிய கெஞ்சில் இப்ப நான்கு மாதங்கள் இனியாள் நந்தினியுடன் தான்.

எப்போதும் எங்கோ வெறித்தபடி படுத்துக் கிடப்பதே இனியாளின் நிலையாக இருக்க, அவள்மேல் இரக்கப்பட்டு நந்தினியும் எதுவும் சொல்வதில்லை. இவளாவது எத்தனை குடுத்து வைத்தவள். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமல் தப்பிப்பிழைத்து வந்துவிட்டாளே. பிடிபட்டிருந்தால் என்ன கதி. பாவம் எமது பெண்போராளிகள் என மனதுள் மற்றவர்களுக்காக கவலை கொண்டு பெருமூச்சை மட்டும் தான் விட முடிந்தது நந்தினியால்.

இத்தனை மிருதுவானவள் எப்பிடி இயக்கத்தில் சேர்ந்தாள் என்று நந்தினிக்கு இன்றுவரை வியப்பாகவே இருந்தது. அதிர்ந்து ஒரு வார்த்தை கூடப் பேசாதவள். கடிதம் எழுதி வைத்து விட்டு பதினாறு வயதில் இயக்கத்துடன் இணைந்து விட்டாள். பெரியம்மா அழுதழுது எத்தனையோ காம்பில் கேட்டும் அவளைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. இறுதி யுத்தத்தம் நடந்துகொண்டிருந்தபோது நான்கு நாட்களுக்கு முன் தாயாரி டம் வந்து சேர்ந்தபோது, ஒரு நிமிடம் தாய்க்கே அவளை அடை யாளம் தெரியவில்லை. ஐந்து ஆண்டுகளில் இனியாளிடம் நிறைய மாற்றங்கள். நந்தினி அவள் இயக்கத்தில் இருந்தது பற்றி எத்தனையோ தடவை கேட்டும் வாயே திறக்கவில்லை அம

சடக்கி. இவளிடம் தமக்கை நேற்றுக் கூறியதை எப்படிக் கூறுவது என்று யோசனையோடுதான் நந்தினி நேற்றிலிருந்து இருக் கிறாள். எப்படியும் இன்று இவளுடன் கதைத்துவிடவே வேண்டும் என்று முடிவு கட்டியபடி "இனியாள் எழும்பிச் சாப்பிடும். உம்மோட முக்கியமாய் ஒரு கதை கதைக்கவேணும்" என்றபடி தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

இரண்டு ஆண்டுகள் எப்பிடி ஓடிப்போனது என்று வியப்பாக இருந்தது இனியாளுக்கு. இந்த இரண்டு ஆண்டுகளில் அவள் தன் இழப்புக்களையும் வேதனைகளையும் மறந்தாள் என்று சொல்ல முடியாவிட்டாலும் லண்டன் வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டு விட்டாள். ஜீவா அண்ண னின் கடையில் வேலை கிடைத்தது தான் செய்த அதிட்டம் தான் என்று அவள் வலுவாக நம்பியதற்கிணங்க அவர் தான் அவளின் விசா அலுவல் தொடக்கம் லோயரிடம் கதைப்பதுவரை செய் கிறார். எத்தனையோ நாட்கள் விசாவும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று திரும்பிப் போய் விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தவளை, திரும்பிப் போனால் அவள் மட்டுமல்ல அவள் தாயும் சந்திக்க நேரும் துன்பங்களைத் திரும்பத்திரும்பச் சொல்லி அவள் மனதை மாற்றியவரும் அவர் தான்.

பெண்கள் என்றாலே படுக்கை மட்டுமே லண்டனில் வசிக்கும் தமிழ் ஆண்களுக்கு நினைவுவரும் என்று அவள் நூறு வீதமாக நம்பியதை, இல்லை நல்லவர்கள் தான் பலரும் என்று நிரூபித்தவர் ஜீவா அண்ணனும் அவர் நண்பர்களும். இவளை லோயரிடம் அழைத்துப்போய் இவள் கேசை இத்தனை தூரம் கொண்டு வருவதற்கு உதவிய பலரை அவள் மனம் நினைத்துப் பார்க்கிறது.

உண்மைக்குப் புறம்பாக எப்படிப் பேசுவது என்று அவள் முரண்பட்ட நேரம் எல்லாம் நன்மைக்காகப் பொய்யும் சொல்லலாம் என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். அவனின் பேராசைக்குத்தானே இத்தனையும் என்று ஜீவா அண்ணா பல தடவை சொல்லித்தான் அவள் கோட்டில் சாட்சி சொன்னது.

அன்றைய நாளை நினைத்தால் இப்பகூட அவளுக்குக் குலை நடுங்குகிறது. சிவா என்னும் அந்த மிருகத்திடமிருந்து தான் தப்பியது தான் செய்த புண்ணியம் தான் என்று அவள் கடவுளை நம்பத் தொடங்கியதும் அதன் பின்னர் தான்.

சிவா இனியாளைப் பதிவுத் திருமணம் செய்யக் கொழும்பு வந்திருந்தான். காலையில் இனியாளை எழுப்பி, வேண்டா வெறுப் பாக அவள் குளித்து சேலை உடுத்து,... இனியாளைத் தயார் செய்யவே நந்தினிக்கு போதும் போதும் என்றாகி விட்டது. உதுக்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டன் என்று அடம் பிடித்தவளை எவ் வளவோ சொல்லித்தான் சம்மதிக்கவைக்க வேண்டியிருந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தமக்கை கூறிய விபரங் களின்படி லண்டனிலிருந்து வந்து சேர்ந்தவனுக்கு ஒரு நாற்பது வயதாவது இருக்கும். அவனைப் பார்த்ததும் நந்தினிக்கு அவனை நம்பலாம் போல் தான் இருந்தது. இனியாள் அவனுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுபோல் எதுவும் பேசாமலே இருந்தாள். கடைசி இருவருக்கும் இருபது வயதாவது இடைவெளி இருக்கும். தமக்கைக்குத் தெரிந்தவன் என்று இவனை நம்பி இவளைக் கூட அனுப்ப முடியுமா என்று யோசித்த படியே அவனை அளக்கப் பார்த்தாள் நந்தினி. தன் தாயிடம் கூட இந்த விடயம் பற்றிக் கூற வேண்டாம் என்று தமக்கை கூறியதில் காதும் காதும் வைத்ததுபோல் இதை முடிக்க வேண்டி இருந்தது.

சிவாவுடன் கதைத்த மட்டில் நன்றாகத்தான் கதைக்கிறான். பெண்கள் என்று எம்மிடம் வழியவும் இல்லை. நேர்ப் பார்வை யுடனும் இருக்கிறான். தமக்கை லண்டனில் தானே இருக்கிறாள். இவள் போய் இறங்கியவுடன் தமக்கையுடன் தானே இருக்கப் போகிறாள். இங்கு வைத்து இவளை நெடுகப் பாதுகாக்க முடி யாது என எண்ணியபடியே சாதாரணமாக அலங்கரித்து முடிக் கவே பெரும்பாடானது. எதுக்கு அலங்காரம்? என்று அடம் பிடித்தவளை "நாங்கள் சாதாரணமாப் போய் நின்றால் நொத் தாருக்கே சந்தேகம் வந்திடும்" என்று கூறி ஒருவாறு சமாதானப் படுத்திக் கூட்டிப்போய் திருமணப் பதிவை முடித்து சரியாக

ஒன்றரை மாதத்தில் அவளுக்கு விசாவும் கிடைத்தது இனியாளின் அதிட்டம் என்றுதான் நந்தினி எண்ணினாள்.

லண்டன் வந்து ஒரு மாதம் வரை அவள் சகோதரியின் வீட்டில் தான் தங்கியிருந்தாள். ஒவ்வொருநாளும் அந்த சிவா, இவளின் வெளிநாடு வருகைக்காக மட்டும் என்று திருமணப் பதிவு செய்து இவளை லண்டன் அழைத்து வந்தவன், பல்லிளித்துக் கொண்டு அடிக்கடி தமக்கை வீட்டுக்கு வர ஆரம்பித்தான். அவன் வரும்போதெல்லாம் இவள் உடனேயே அறைக்குள் சென்று இருந்துவிடுவாள். தமக்கை அவனை விழுந்துவிழுந்து உபசரிப்பது கேட்கும். அதன்பின் இருவரும் எதோ குசுகுசுப்பதும் கேட்கும். அத்தானும் கூட எதுவும் சொல்லாதது இவளுக்கு இன்னும் கோபத்தை வரவழைக்கும். சொந்த அக்காவே இவள் வாழ்வில் மண் அள்ளிப் போட எண்ணுகையில் அத்தான் பாவம் என்ன செய்வார் என்று அவர் மேலும் இரக்கம் எழும்.

தமக்கை அன்று வெளியே சென்று சிறிது நேரத்தில் கதவு தட்டுப்பட, தமக்கை தான் வந்து தட்டுகிறாள் என்று இவள் எழுந்து சென்று கதவைத் திறந்தால் அந்த சிவா இவளைத் இடிப்பதுபோல் உங்களோட கதைக்க வேண்டும் என்று உள்ளே வந்துவிட்டான். அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்க முன் "என்னை ஏன் உமக்குப் பிடிக்கேல்லை. என்னட்டை அழகு இல்லையோ, காசுபணம் இல்லையோ, உம்மை நான் சந்தோசமா வச்சிருப்பன்" என்று அவன் ஏதேதோ பினாத்த, எல்லாம் தன் தமக்கையின் சதி தான் என்று அவளுக்குத் தெளிவாகப் புரிய கோபம் வார்த்தைகளாய் வந்து விழுந்தது. "வெளியில போடா. பெண்டில் பிள்ளையோட இருக்கிற உனக்கு நான் கேட்குதோ. விசாவுக்கு எண்டு சொல்லித்தானே என்னை கூட்டி வந்தனி. அக்கா காசு தந்திட்டாள் தானே. உடனடியா வெளியில போகாட்டிப் போலீசைக் கூப்பிடுவன்" என்று கத்தியவளை அவன் சிரிப்பு நிறுத்த, யோசனையோடு அவனைப் பார்த்தாள் இனியாள்.

உன்ர அக்கா எனக்கு இன்னும் காசு தரேல்லை. நீ சட்டப் படி என்ர மனிசி. நான் மனம் வச்சா உன்னை உடனே திருப்பி

அனுப்பலாம். நான் மனம் வச்சாத்தான் நீ தொடர்ந்து இங்க இருக்க விசாவும் தருவாங்கள். எதோ சுத்தபத்தமான ஆள்போல நல்லாத்தான் பிறியம் விடுறாய். ஆமிக்காரர் உன்னைச் சும்மாவே விட்டிருப்பாங்கள்" என்றபடி எழுந்து அவளருகில் வர, எப்பிடித் தான் அவளுக்கு அந்தக் கோபமும் பலமும் வந்ததோ அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு அவனிடம் அகப்படாமல், கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடி, ஜீவா அண்ணன் வீட்டு வாசல் மணியை அடித்துக்கொண்டே நிக்க, கதவைத் திறந்த ஜீவா அண்ணனின் மனைவி சுகி வீட்டு உடுப்போடு காலில் செருப்பும் இல்லாமல் இவள் நின்ற நிலையைப் பாரத்து "உள்ள வாரும்" என்று இவள் தோளைப் பிடித்து அழைக்க "என்னைக் காப்பாத்துங்கோ அக்கா" என்று அவள் தோழில் சாய்ந்து குளறி அழுபவளை அழுது முடியும் மட்டும் அணைத்து முதுகு தடவி அசுவாசப்படுத்திவிட்டு சோபாவில் அமரச் செய்தார் சுகி. வெறுங்காலுடன் ஓடி வந்ததில் காலில் எதுவோ குத்தி இரத்தம் வடிந்ததைக் கூட சுகிதான் கண்டு காலைக் கழுவிவித்து மருந்து போட்டுக் கட்டி, கணவனின் வருகைக்காகக் காத்திருக்க வாரம் பித்தார்.

கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்குப் பின் தமக்கை தேடி வந்த போது இவள் பார்க்க மறுத்துவிட்டாள். அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என ஜீவா அண்ணன் எச்சரித்து இருந்ததை யும் மீறி இப்ப வந்து நிற்கும் தமக்கையை எந்தவித சலனமும் இல்லாமல் பார்த்துக்கொண்டு எதுவும் பேசாமல் இருக்கும் அவளைப் பார்க்க தமக்கையின் வாயும் தன் வேலையை ஆரம்பித்தது. உனக்கு விசரோடி. சிவா உனக்கு விசா எடுத்துத் தராட்டி நீ சிலோனுக்குத்தான் போகவேணும். அங்க போய் என்ன செய்வாய். ஒரே ஒருக்கா அவனுடன் நீ இருந்தாப் போதும். அவன் விசா எடுத்துத் தருவான் என்று சொன்னதுதான் தாமதம்," நீ எல்லாம் ஒரு பொம்பிளையோ? இந்த இரண்டு வருசமா வேலை செய்து உன்ர காசு தந்திட்டன். உனக்கு வேணும் எண்டா நீயே அவனோட படுத்து காசைக் கழிச்சுக் கொள்" என்றதும்

தான் தாமதம்" எளிய நாயே, எனக்குச் சொல்லிறியோ. ஜீவா அண்ணா தான் உன்னை வச்சிருக்கிறார் போல என்று சொல்லி முடியும் முன்பே தமக்கையின் கன்னத்தில் இனியாள் அடித்த அடி இடியாய் இறங்க, விதிர்த்துப் போய்க் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்ற தமக்கையை பிடித்துத் தள்ளிக் கொண்டு போய் கடையின் வெளியே விட்டு, "உனக்கும் எனக்கும் இனி எந்த உறவுமில்லை. இந்தப் பக்கம் வந்தால் அக்கா என்று பார்க்க மாட்டன்" என்று உறுமும் இனியாளைப் பயத்துடன் பார்த்தபடி நகரும் தமக்கையை எப்படி நீ எனக்குத் தமக்கை யாகப் பிறந்தாய் என்று வெறுப்புடன் பார்த்துக் கொண்டே நின்றாள் இனியாள்.

***

இன்று தீர்ப்புச் சொல்லும் நாள். இருவருக்கும் விவாகரத் துக்கு பதிவுசெய்து அவனின் சொத்துக்களிலும் இவளுக்குப் பங்கு தரவேண்டும் என்று இவள் பக்கம் வாதாடும் லோயர் வழக்குப் போட்டபின் தான் அடித்துப்பிடித்துக்கொண்டு ஓடி வந்தான் சிவா. அப்ப கூட அவனின் தடிப்பும் கோபமும் குறைய வில்லை. "நீ என்னோட ஒண்டா இருக்கேல்லை எண்டு கோட்டில சொல்லுவன்" என்றதற்கு, "அப்பிடிச் சொன்னால் உன்னைத்தான் முதலில் உள்ளே பிடித்து ஏழு வருடம் போடுவார்கள். தாராளமா உள்ள போய் இருக்கலாம்" என்று இவள் தனக்கும் சட்டங்கள் பற்றித் தெரியும் என்று அவனுக்கு உணர்த்தக் கூறியவுடன் அவன் எதுவும் கூறாமல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு போனதை நினைக்க இப்பவும் சிரிப்பு வந்தது இனியாளுக்கு. ஜீவா அண்ணன் சொல்லியிரா விட்டால் இவளுக்கு இந்த நாட்டுச் சட்டங்கள் பற்றி எப்பிடித் தெரிந்திருக்கும்.

லோயர் சொன்னபோது இனியாளுக்குக் கூட அவனின் சொத்தில் பங்கு கேட்பதில் எந்தவித உடன்பாடும் இல்லை. நீங்கள் சும்மா இருங்கோ பிள்ளை. உப்பிடியான ஆண்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேணும் எண்டு லோயர் சொன்னதில் அவளும் பேசாமல் இருந்துவிட்டாள். அவனின் ஐந்து அறைகள் கொண்ட வீட்டின் பெறுமதியில் அரைவாசியை அவளுக்கு

வழங்கவேண்டும் என்று தீர்ப்பானதும் அவன் எரித்து விடுவது போல் பார்த்த பார்வை இவளை ஒன்றுமே செய்யவில்லை.

"அவர் எதோ தெரியாமல் செய்துபோட்டார் பிள்ளை. எங்களுக்கும் மூண்டு பிள்ளைகள். இப்பிடிச் சொத்தைக் கேட்டால் எப்பிடி" என்று சிவாவின் மனைவி வந்து அழுது மாய்மாலம் விட்டும் இவள் மசியவில்லை. "கேவலம் காசுக்காக இப்பிடி புருஷனை விவாகரத்துச் செய்துவிட்டு ஒண்டா இருக்கிறதாலதான் மற்றப் பெண்களையும் உங்கள் கணவன் கேவலமாக நினைக்கிறான். நான் ஒண்டும் செய்ய ஏலாது " என்று முகத்திலடித்தாற் போல அறைந்து கதவைச் சாற்றிய பின் அப்படிச் செய்ததனால் தானே நீ இன்று இங்கு நின்று கொண்டிருக்கிறாய் என்று கேள்வி கேட்ட மனதை அலட்சியம் செய்தபடி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

இரண்டு மாதங்களின் பின் அவனிடமிருந்து இன்னும் இரண்டு மாதகால அவகாசம் கேட்டு அவளுக்கு வந்திருந்த கடிதத்தை லோயரிடம் கொடுக்கும் போது "தங்கச்சி கவலைப் பட வேண்டாம். இரண்டு மாதத்தில அவர் உங்களுக்குக் காசு தராட்டால் கோட் அவற்றை சொத்தை தானே வித்து உங்களுக்கு வரவேண்டிய காசைத் தரும்" என்று கூறி ஒன்றரை மாதத்தின் பின்னர் லோயர் இரண்டு லட்சம் பவுன்சை இவள் வங்கிக் கணக்குக்கு மாற்ற, அடுத்த நாளே சிவாவின் வீட்டுக்கு ஜீவா அண்ணனுடன் இவள் சென்று அவனின் மனைவியின் வங்கிக் கணக்கு இலக்கத்தை வாங்கி வந்ததோடு அல்லாமல் அத்தனை பணத்தையும் சிவாவின் மனைவியின் பெயருக்கு மாற்றியபின் தான் அவளால் நின்மதியாக மூச்சே விட முடிந்தது.

"கொஞ்சக் காசை வச்சுக்கொண்டு மிச்சத்தைக் குடுத்திருக் கலாம்" என்று ஜீவா அண்ணா கூறியதையும் அவள் ஏற்றுக் கொள்ளவே இல்லை. "அவனின் காசை நான் எடுத்தால் நானும் விபச்சாரி ஆகிவிடுவன் அண்ணா. இப்ப நான் சுதந்திரமான வளாய் சுத்தமானவளாய் ஆனது போல இருக்கண்ணா. நானே உழைச்சுச் சாப்பிட எனக்குத் தெம்பும் இருக்கண்ணா" என்று கூறி விட்டுச் செல்பவளை பெருமையாகப் பார்த்தபடி நின்றார் ஜீவா.

# இஞ்சினியர்

மழை வரப் போவதுபோல் மேகங்கள் எல்லாம் கருங் குன்று களாகி ஒன்றுடனொன்று மோதுவதுபோல் செல்வதும் பின்னர் விலகுவதுமான விண்விளையாட்டைப் பரணி யன்னலினூடே பாத்துக்கொண்டே நின்றான். இப்ப சில வாரங்களாக இப்படித் தான் கடும் புழுக்கம் இவன் மனதிலும் வெளியிலும்.

என் மனதைப் போலத்தான் மேகங்களுமோ??? இன்னும் முடிவை எடுக்க முடியாது அலைந்துகொண்டு திரிகின்றன. குளிர் காற்று வீசுகிறது. கருமேகங்களும் தெரிகின்றன. ஆனால் இன்னும் ஒருசிறு மழைத்துளி கூட விழாது ஏன் எல்லோரையும் எதிர்பார்த்தே காத்திருக்க வைக்கின்றது என மனதில் எண்ணிக் கொண்டே, என்னால் கூட ஒரு மாதமாகியும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லையே என்று சமாதானமும் சொல்லிக்கொண்டான்.

அவர்கள் லண்டனில இருந்து வந்திருக்கினம். இரண்டே இரண்டு பெட்டையளாம். மூத்தது ஒரு கோடீஸ்வரனைக் கலியாணம் செய்து வசதியா இருக்கினமாம். இது இரண்டாவது பெட்டை. லண்டனில பெரிய வீடும் இங்கை முப்பது லட்சம் காசும் தரீனமாம். நல்ல சம்பந்தம். பொருத்தமும் எண்பது வீதப் பொருத்தம். அம்மா சொல்லிக்கொண்டே போக இவன் இடை நிறுத்தி "ஏனம்மா மூத்த மகளுக்குக் கோடீஸ்வரனைக் கட்டிக் குடுத்தவை. ஏன் இரண்டாவதுக்கு என்னைக் கட்ட விருப்பப்

படினம்" என்று கேட்டவுடன் தாய்க்குக்கூட ஒரு நிமிடம் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"அதைப்பற்றி எங்களுக்கு என்ன தம்பி. இண்டைக்குப் பின்னேரம் இங்க அவை வரீனம். நீ எங்கையாலும் போனாலும் எண்டுதான் சொல்லுறன். எதுக்கும் அவை வந்து போகட்டும் அப்பன். பிறகு மிச்சத்தைக் கதைப்பம்" என்று தாய் அந்தக் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு மிகுதிக் காரியங்களைச் செய்யக் கிளம்ப, சரி வரட்டும் பார்ப்பம் என்று நினைத்த வுடனேயே ஆண் பார்க்க வருகிறார்கள் என்று மனதில் எழுந்த எண்ணம் கூச்சப்பட வைத்தது.

அவன் கடந்த ஆண்டுதான் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியுள்ள பொறியியலாளர். ஒருவாறு கடனை உடனை வாங்கி அம்மா படிப்பிச்சு முடிச்சிட்டா. அதுக்காக அம்மாவை எதிர்த்துக் கதைக்கப் பயந்து பேசாமல் இருக்கிறதோ என்று மனம் எதிர்த்தாலும், உண்மையில் அம்மா சொல்வதை எப்ப தான் எதிர்த்துள்ளான் வாழ்க்கையில் இப்ப மட்டும் எதிர்க்க என வகையற்றுத் தவித்தது மனம்.

எதிர்க்க முடியாது என்று இல்லை. இவனின் பன்னி ரண்டாவது வயதில் தந்தை விபத்து ஒன்றில் இறந்துபோக, அவனையும் தங்கையையும் எந்தக் குறையும் இன்றி ஒரு பட்டம் பெறுமளவு வளர்த்து விட்டதற்கு கைமாறு இதைவிட வேறென்ன செய்யமுடியும் என்று நினைத்து மனதைச் சமா தானம் செய்து கொண்டான்.

மாலையில் நான்கு மணிக்கு அவர்கள் பெரிய பென்ஸ் காரில் வந்து இறங்க இவனுக்கு வாங்கோ என்று வெளியே போய்க் கூப்பிட கூச்சமாக இருந்ததில் அம்மா என்று தாய்க்கு அவர்கள் வருவதைத் தெரியப்படுத்திவிட்டு என்ன செய்வது என்று தெரியாது யன்னலூடு வெளியே பார்த்தபடி வெளியே நின்றான்.

தாய் ஓடாத குறையாகச் சென்று அவர்களை வரவேற்க, முதலில் பின் கதவைத் திறந்துகொண்டு ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி இறங்க அவரைத் தொடர்ந்து ஒரு

சின்னப் பெண்ணும் இன்னொரு நாற்பதுக்குள் வயதுள்ள பெண்ணும் இறங்க, மறுபக்கத்திலிருந்து இரண்டு ஆண்கள் இறங்கினர்.

ஒருவரைப் பார்த்ததுமே அவர்தான் பெண்ணின் லண்டன் அப்பா என அவரின் ஆடையிலும் பளபளப்பிலும் இவன் ஊகித்துக் கொண்டான். பெண்கள் மூவருமே தலை முடியை ஓட்ட வெட்டியிருந்தனர். வயது கூடிய பெண் தலைக்கு மண்ணிறம் அடித்திருந்தது பார்க்க அவனுக்கு எதோ போல் இருந்தது.

எல்லோரும் உள்ளே வந்ததும் அவன் வேறு வழியின்றி வாங்கோ இருங்கோ என்று சொல்லிவிட்டு நின்றான். இரண்டு ஆண்களும் இவனுக்குக் கிட்ட வர இவனுக்கு ஒரே குழப்பம் ஒரு நொடி. ஆனால் நீட்டிய அவர்களின் கையை கண்டதும் அவனின் குழப்பம் மறைந்து அவனும் கைகுலுக்கிக் கொண்டான். அவர்களின் கைகுலுக்கலில் கை இலேசாக நோவெடுத்தது.

முதலில் கை குலுக்கியவர், கமோன் தட்சா என்று கண்ணைக் காட்ட அந்தச் சின்னப் பெண் எழுந்து வந்து இவனுக்கு முன்னால் கை நீட்டியது. இவன் வேறு வழியின்றிக் கை குலுக்கிவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க, அம்மா அதை விளங்கிக் கொண்டு பரணி நீயும் இரு என்று சொல்ல, அவன் நுனிக் கதிரையில் அமர்ந்தான்.

அந்தப் பெண் இவனையே குறுகுறுவெனப் பார்த்தபடி இருக்க, இவனும் துணிவாய் நிமிர்ந்து பார்த்தான். நல்ல வெள்ளை தான். ஆனாலும் அழகி என்று சொல்ல முடியாது. நெற்றியில் பொட்டுமின்றித் தலை முடியையும் ஓட்ட வெட்டி, ஒரு ஆண் தனம் இருந்தது அப்பெண்ணிடம். ஒரு அழகிய பெண் தான் தன் மனைவியாக வரவேண்டும் என்று அவன் எப்போதுமே எண்ணியதுமில்லை. ஆயினும் தன் மனைவி இவளா என்று எண்ணவே, இல்லை என்று அவன் மனம் அழுத்திக் கூறியது.

பல்கலைக் கழகத்தில் படிக்கும் போது இவனை விரும்புவ தாகக் கூறிய நிசா கண் முன் வந்து சிரிப்பதுபோல் இருந்தது. தாயின் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்வதில்லை என்ற

கட்டுப்பாடு கொண்டதால் அவன் யாரையும் தன் மனதில் எண்ணாமல், எண்ணியவரையும் சுலபமாக விலத்தி வர முடிந்தது. ஆனால் என் விதி இப்படியாகி விட்டதே என மனதில் எழுந்த பச்சாதாபத்தை ஓரம் தள்ளியபடி அவர்கள் கதைப்பதில் தன் மனதைப் பதித்தான்.

***

பெண்ணின் தாயார் தம்பட்டம் அடிப்பதைப் பார்க்க எரிச்சலாக வந்தாலும் அடக்கிக்கொண்டு இவர்கள் யார் என்று மற்ற இருவரையும் பார்த்துக் கேட்டான். இது என் அக்காவின் மகளும் கணவரும். இரண்டு பேருமே டொக்ரேஸ் என்று ஆங்கிலத்தில் கூற, அம்மாவுக்கு ஆங்கிலம் விளங்காது என்று விட்டு இவையும் லண்டனிலை இருக்கினமா என்றான் பரணி. இவை இங்க கொழும்பில்தான் வேலை செய்யினம். இங்கதான் இருக்கிறது. வருசத்தில ஒருமாதம் அங்க கொலிடேக்கு வாறவை என்று கூறிவிட்டு மகளைப் பார்த்து "தட்சா இவரைப் பிடிச் சிருக்கோ" என்று எல்லார் முன்னாலும் கேட்டார்அந்தத் தாய்.

இவனுக்குத் தன்னையும் அதேபோல் கேட்டாலும் என்ற பயம் எழ, என்ன குடிக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு உடனே எழுந்தான். டீ ஒன்றும் வேண்டாம். ஏதாவது கூல் ட்ரிங்க்ஸ் தாங்கோ என்று தந்தை கூற, தம்பி நீ இரு நான் கொண்டு வாறன் என்று தாயார் எழமுயல, அம்மா நீங்கள் இருந்து கதையுங்கோ நான் கொண்டுவாறன் என்றுவிட்டு குசினிக்குள் சென்றபின் தான் இவனுக்கு நின்மதி வந்தது.

அங்கு சென்ற பின்னும் காது வெளியே என்ன கதைக்கிறார் கள் என்பதிலேயே நிக்க, அவர்களுக்கும் மகளிடம் அப்படிக் கேட்டதால்த்தான் பெடியன் எழுந்து சென்று விட்டான் என்று புரிந்ததால் மேற்கொண்டு அதுபற்றிக் கதைக்காமல் பொது வாகக் கதைக்கவாரம்பிக்க, இவனும் மனதை இலகுவாக்கியபடி கடையில் வாங்கிய பற்றிசையும் வடையையும் எடுத்துக் கொண்டு போய்த் தாயிடம் கொடுத்துவிட்டு மீண்டும் வந்து ஊற்றி வைத்த நெக்டோச் சோடாவை கிளாசில் ஊற்றி தாய் ஏற்கனவே எடுத்து

வைத்திருந்த தட்டில் வைத்துக் கொண்டுபோய் மேசையில் வைத்துவிட்டு அமர்ந்தான்.

***

இவன் மனம் இன்னுமே அமைதியாகவில்லை. பணம் கொட்டிக் கிடந்தால் எதுவும் கதைக்கலாமோ? நாங்களா அவை யிட்டை பெண் கேட்டு ஓடினோம். கஷ்டப்பட்டனாங்கள் என்று தெரிந்தும் இன்சினியர் எண்டதும் பல்லைக் காட்டிக் கொண்டு வந்தது அவர்கள். சீதனம் தந்தாப்போல அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு ஒண்டும் தெரியாத பெண்ணுக்கு புருஷன் வேலை பார்த்ததும் இல்லாமல் உணர்வு களையும் எல்லாம் அடக்கிக் கொண்டு இருக்க வேண்டும் என்று எப்பிடி எதிர் பார்ப்பார்கள்? எல்லாம் பணக் கொழுப்பு. நினைக்க நினைக்க பரணியின் மனதில் கொதிநிலை கூடிக் கொண்டு சென்றதே யன்றிக் குறையவில்லை.

இனி அம்மாவுக்காகவோ ஆருக்காகவோ பார்க்க முடி யாது. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டுதானே என மனம் சொன்னது. அம்மாவுக்கு அவன் முடிவாகச் சொல்லிவிட்டான். இனியும் நான் தட்சாவுடன் சேர்ந்து வாழ முடியாது என்று. தாய் இரண்டு மூன்றுதரம் அழுது ஆர்பாட்டம் செய்து இவனை மசிய வைக்கப் பார்த்தாலும் இவன் கடைசியில் தன் வெக்கத்தை விட்டு நடந்தவற்றைத் தாயாரிடம் சொன்னதன் பின்னர் தாய் எதுவும் கதைக்கவே இல்லை.

அவர்கள் கொடுத்த சீதனம் பதினைந்து இலட்சத்தில் பட்ட கடன்கள் அடைத்ததுபோக தங்கைக்குச் சீதனம் கொடுக்க என்று பத்துலட்சம் வங்கியில் வட்டி போட்டபடி இருக்கிறது. அதை எடுத்து அவர்கள் மூஞ்சியில் தூக்கி எறிவோம் என்றால் "நீ அந்தப் பயித்தியத்தோட வாழ்ந்ததுக்கு அதுசரியாப் போச்சு. அவை கேட்டாலும் அந்தக் காசைக் குடுக்கிறேல்லை" என்று தாயார் கறாராகக் கூறிவிட்டார். அவன் மனமும் கொஞ்ச நாட்கள் கொடுப்போமா விடுவோமா என்று இரு பக்கமும் ஆடியபடி இருந்தது. இப்ப கொடுப்பதில்லை என்று அவனும் முடிவுக்கு

வந்துவிட்டான்.

இன்னும் அவர்கள் மகளின் பெயரில் வாங்கிய வீட்டிலேயே தங்கியிருக்கிறான். தாய் கூறியது போல் தட்சா பைத்தியம் எல்லாம் இல்லைத்தான் எனினும் அவன் எத்தனையோ விடயங்களை சமாளித்து அவளுடன் வாழ்க்கை யைக் கொண்டு போனான். சோறுகறி சமைப்பது எப்படி என்று தெரியாது, இடியப்பம் புட்டுக் கூட... தமிழர்களின் உணவே சமைக்கத் தெரியாது அவளுக்கு. எத்தனை நாட்களுக்குத்தான் கடையில் எடுத்து உண்பது?

அவனாவது லண்டன் வந்து தட்டுத்தடுமாறி இறைச்சிக்கறி வைக்கப் பழகிக் கொண்டான். தட்சாவுக்கோ சொல்லிக் கொடுத் தாலும் வர மறுத்தது. சரி தன் விதி என்று மனதைத் தேத்திக் கொண்டாலும் கடைசியாக அவளுடன் நடந்த வாக்குவாதம் நினைவில் வந்து இரக்கம் என்பதையே அவன் மனதிலிருந்து தூக்கிப் போட, இன்னும் தன் மனநிலையைப் பாதித்துக் கொண்டிருக்கும் அவள் பேச்சுக்களே மீண்டும் மீண்டும் நினைவு களை எல்லாம் வளைத்துப் போட்டது.

திருமணப் பேச்சு முற்றாகி எழுத்தும் இலங்கையில் எழுதிவிட்டு அவர்கள் லண்டன் சென்று ஆறு மாதங்களிலேயே இவனுக்கு விசாவும் கிடைத்தது. இவனை உடனே அங்கு வரும்படி தட்சாவின் பெற்றோர் அழைக்க, பரணி பிடிவாதமாக இலங்கையில் தான் கலியாணவீடு செய்யவேண்டும் என்று முடி வாகக் கூறிவிட்டான். தாயும் தங்கையும் பார்க்காது என்ன கலி யாணம் என்று ஒரு பிடிவாதம். அவர்களும் வேறு வழியின்றி அங்கு போய்க் காசை அள்ளி எறிந்து மிக ஆடம்பரமாக திரு மணத்தை நடத்தினர். தாய்க்குத் தங்கைக்குக் கூட அவர்களே சேலைகள் எடுத்து, கூறைச் சேலை கூட இவர்களை எடுக்க விட வில்லை. தாயோ பரணியோ அது பற்றிக் கவலை கொள்ளவு மில்லை.

திருமணம் நடந்த அடுத்த நாளே அவர்கள் எல்லோருட னும் இவனும் லண்டன் வந்துவிட்டான். மருமகள் தன் வீட்டில்

நிக்கவில்லையே என்னும் கவலை பரணியின் தாய்க்கு இருந்தாலும், உதைப் பெரிசு படுத்தக் கூடாது என்று ஒன்றும் கூறவில்லை.

எல்லாரும் போல லண்டனும் அவனைப் பிரமிக்க வைத்து மனதை ஒருசஞ்சரிப்புக்கு ஆட்படுத்தியது. வந்த அடுத்த நாளே இருவரையும் தட்சாவுக்கு வாங்கிய வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்ட பின்னர் தான் அவனுக்கு தட்சாவுடன் தனிய இருக்கவே சந்தர்ப்பம் கிடைத்தது.

தனிமை அவனுக்குக் குறுகுறுப்பை ஏற்படுத்த அவளுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்து தட்சா என்றான் ஆசையுடன். "வெயிட் பரணி ப்ரோக்ராம் முடியட்டும்" என்றுவிட்டு அவள் தன் பாட்டுக்கு சிறுவர்களின் நிகழ்வொன்றைப் பார்த்துக் கொண்டு இருக்க இவன் வேறு வழியின்றி மேசையில் கிடந்த மகசின் ஒன்றைப் புரட்டியபடி அமர்ந்தான். அப்படியே கதிரையில் சாய்ந்து தூங்கிவிட்டவன் கண் விழித்தபோது அவள் சான்விச் ஒன்றை உண்டுகொண்டிருந்தாள்.

என்ன நீர் என்னை விட்டுவிட்டுச் சாப்பிடுகிறீர். எழுப்பி இருக்கலாமே என்று இவன் ஆதங்கத்துடன் சொல்ல, நான் அதை யோசிக்கவில்லை என்று கூறிவிட்டு மீண்டும் தொலைக் காட்சியில் முகம் பதிக்க ஏற்பட்ட எரிச்சலை அடக்கியபடி இண்டைக்கு வெளியே போய் இரண்டுபேரும் சாப்பிடலாம் என்று நினைத்தேன் என்றான் இவன். நீங்களும் இப்ப சான்விச் சாப்பிடுங்க. இரவு போகலாம் என்றுவிட்டு அதுபற்றி வேறெதுவும் கதைக்காது சாப்பிடுபவளை எதுவும் சொல்ல முடியாது தானே எழுந்து சென்று பிறிச்சில் இருந்த ஒரு பாணைக் கொண்டுவந்து அவளுக்கு அருகிலிருந்து உண்ண ஆரம்பித்தான். அவனுக்கு அரை வயிறுதான் நிரம்ப மீண்டும் எழுந்து பிரிச்சைத் திறந்து பார்த்தவன், அது காலியாக இருக்கவே எரிச்சலுடன் அடித்துச் சாற்றிவிட்டு வந்து அமர்ந்தான். வீட்டில் அம்மா காலையில் மட்டும் தான் பாண் தருவது. அதுவும் அந்த அரைத்த சம்பலோ அல்லது இடித்த சம்பலுடன் சாப்பிடும்போது கால் றாத்தல் பாணுடனேயே வயிறு நிறைந்துவிடுமே.

இத்தனை பணம் இருந்து என்ன. இவர்களுக்கு அடிப்படை அறிவு கூட இல்லையே என சினம் கூடியது. நானும் அம்மா விடம் வேண்டாம் என்று கூறியிருக்க வேண்டுமோ என்று முதல் முறையாக அவனுக்குத் தன்மேல் கோபம் எழுந்தது. மாமியார்க் காரி ஒரு வாரமாவது தம்முடன் எங்களை வைத்திருந்திருக்கலாம் என்று எழுந்த கோபத்தில் தட்சா எனக்குப் பசிக்குது வாரும் ஏதாவது வாங்கிக் கொண்டுவந்து சமைப்பம் என்றவன், அவளின் கையைப் பிடித்து கதிரையிலிருந்து அவளை எழுப்பினான். அவள் உடை மற்ற அறைக்குள் செல்ல சிறுநீர் கழிக்கச் சென்றவன் வெளியே வரும்போது தட்சா யாருடனோ போனில் கதைத்துக் கொண்டிருந்தாள்.

இந்தாங்க மம்மி என்றுவிட்டு இவனிடம் போனைக் கொடுத்தவள், மீண்டும் இருக்கையில் அமர்ந்து தொலைக்காட்சி பார்க்க ஆரம்பித்தாள்.

பரணி, அங்க வெட்டிங் நடந்ததால இங்க பிரெண்ட்ஸ் எல்லாரையும் கூப்பிட்டு நெக்ஸ்ட் சனி ரிசெப்சன் வச்சிருக்கு. அதால நீங்கள் வெளியில பெரிசா திரியாமல் இருக்கிறது பெட்டர். நான் ஒரு மணித்தியாலத்தில பூட் கொண்டு வாறன் என்று மாமியார் ஆங்கிலமும் தமிழும் கலந்து சொல்ல இவனுக்கு பசி குறைந்துவிட்டாற்போல் உணர்வு ஏற்பட, சரி என்றுவிட்டு அவளுக்கு பக்கத்தில் அமர்ந்தான். அவளுக்கு அவனிடம் எந்த ஈர்ப்பும் ஏற்படாதது அவனுக்கு வியப்பையும் ஒருவித ஏமாற் றத்தையும் கூட அளித்தது. அவளின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுப்போமா என்று எண்ணியவன் அவளைப் பயப்படுத்தக் கூடாது என்று எண்ணியவனாய் அவள் கைகளுடன் தன் கை களைக் கோர்த்துக் கொண்டு அவளைப் பார்த்தான். அவளோ எந்தவித உணர்வும் அற்றவளாக தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரையும் போல அவனும் எதிர்பார்ப்புடன் இரவுக் காகக் காத்திருக்க, தனது அறையினுள் சென்று ஆடை மாற்றிக் கொண்டு வந்தவள் கையில் ஒரு சிறிய பெட்டியை எடுத்து

நீட்டினாள். இவன் பெட்டியை வாங்காது திடுமென அவளை அணைத்துத் திக்குமுக்காட வைத்தபோதும் அவள் பெரிதாக உணர்ச்சிவசப்படாது "மம்மி பெட்டியை குடுக்கச் சொன்னவ" என்றபோது உச்சத்துக்குச் சென்றுகொண்டிருந்த அவன் உணர்வுகள் தடைப்பட்டுக் கீழே விழுந்தன. அதன்பின் அதை வாங்கிப் பார்த்தவனுக்கு கோபமும் எரிச்சலும் ஒன்றாய் எழுந்தன. மம்மி தந்துவிட்டவவா? என்றபடி பெட்டியைப் பார்த்தவனுக்கு "கொண்டம்" என்று எழுதியிருந்ததைப் பார்த்தவன் புரிந்ததும் "உம்மட மம்மிக்கு விசரா" என்று அதைத் தூர ஏறிந்தான். சின்னப் பிள்ளைபோல் அதை ஓடிப்போய் எடுத்துவந்த தாட்சா இதை கட்டாயம் யூஸ் பண்ணட்டுமாம் மம்மி என்றவள், அக்கா கூட கோல்சேல் கடையில் பெரிய பண்டல் வாங்கி வச்சிருக்கிறா. நெக்ஸ்ட் டைம் அவவிட்டை இது ஓகே என்றால் அவவே எமக்கும் வாங்கித்தருவா என்றவளை என்ன செய்வது என்று தெரியாமல் மனக் குழப்பத்துடன் பார்த்துக்கொண்டு நின்றான் பரணி.

***

ஒருவாறு அவன் லண்டன் வந்து ஆறுமாதங்கள் ஆகிவிட்டது. நல்ல வேலையும் சம்பளமும் கொம்பனிக் காருமாக இருந்தாலும் தட்சாவின் போக்கும் குணமும் செயல்களும் அவனுக்குப் பெரும் சவாலாகவே இருந்தன. காசுக்காக அம்மா என்னை விற்க நான் அம்மாவுக்காக என்னை விற்றுவிட்டேன் என்று மனம் ஓலமிடத்தான் செய்தது. உண்மையைச் சொல்லு அம்மாவுக்காக மட்டும் தானா நீ இந்தக் கலியாணத்துக்குச் சம்மதித்தது?? லண்டன் போகும் உன் ஆசையாலும் தானே என மனம் இடித்துரைத்ததை ஏற்கமறுத்த மனதை வலுக்கட்டாயமாக ஏமாற்றியபடி கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். வீடு வைத்தது வைத்தபடி அப்படியே இருந்தது. தட்சாவும் இவன் வரவை ஆவலின்றி எதிர்கொண்டு கடமைக்காகச் சிரித்து விட்டு தன்பாட்டில் டிவி பார்த்தது.

இவன் முகம் கழுவி உடை மாற்றி வர,தாட்சா எழுந்து சாப்பாடை சூடாக்கவோ என்று கேட்க இவன் ஆம் என்று தலை

யசைத்தான். தாய் விருந்து சமைக்காவிட்டாலும் ஒருகறியோ இரண்டோ சுடச்சுடச் சமைத்து வைத்து உண்பதற்காய்க் கூப்பிடு வார். அந்தச் சுவையே இரண்டாம்தரமும் போட்டு உண்ண ஆவலை ஏற்படுத்தும். இங்கு பணமிருந்து என்ன? தாயின் சமை யல் போல் இல்லாவிடாலும் சாதாரணமாகக் கூடச் சமைக்கத் தெரியாத மனைவியை வைத்துக்கொண்டு மாமியார் சமைத்துத் தரும் உணவை இரண்டு நாளுக்கொருதடவை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்துச் சூடாக்கி உண்ணவே பசி பறந்து போகும். நல்ல காலம் மதியம் இவன் வேலை செய்யும் அலுவல கத்துக்கு அண்மையில் ஒரு இலங்கைத் தமிழரின் உணவகம் இருந்ததனால் இவன் சமாளிக்கக் கூடியதாக இருந்தது.

இங்கே பிறந்து வளர்ந்தபடியால் தட்சாவுக்கு சோறு கறியில் பெரிதாக நாட்டமே இல்லை. சான்விச்சும், பொரித்த உருளைக்கிழங்கும், இறைச்சிப் பொரியல்களும் - நினைக்கவே இவனுக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. ஆனாலும் நல்ல காலம் இடியப்பம், அப்பம், இட்லி போன்ற எம்மூர் உணவுகள் சிலதும் அவளுக்குப் பிடித்ததால் பக்கத்தில் இருக்கும் தமிழ் கடையில் அவற்றை வாங்கி உண்டும், அப்பப்ப வெளியே சேர்ந்து சென்று உணவகங்களில் சாப்பிட்டும் தன் ஏமாற்றத்தைத் தீர்த்துக் கொண்டான் பரணி. இப்படியே எத்தனை காலம் தான் ஓட்ட முடியும் என்ற யோசனையும் அவனை அலைக்கழித்தபடியே இருக்க, முடிவே தெரியாதவனாய் வாழ்ந்துகொண்டிருந்தான் அவன்.

***

அன்று சாதாரணமாக வேலைக்குச் செல்ல வேண்டியவன் சிறிது காச்சல்க் குணமாக இருக்க, போன் செய்து அன்று வர வில்லை என்று சொல்லிவிட்டு, என்னை எழுப்பவேண்டாம். இண்டைக்கு படுத்து நித்திரை கொள்ளப் போறன் என்றுவிட்டு உண்மையிலேயே தூங்கியும் போனான். தற்செயலாகக் கண் விழித்தவன் தட்சா யாருடனோ போனில் கதைத்துக் கொண்டிருப் பதைக் கேட்டதும் தன் காதை அங்கு விட்டபடி கவனித்தான்.

இல்லை டாடி. நேற்று ஒன்றும் நடக்கவில்லை. நேற்று

முதல் நாள்தான் இரண்டுபேரும் ஒன்றாய் இருந்தது. எனக்கு பரணி கிஸ் பண்ணினாலும் எந்த பீலிங்கும் இல்லை டாட். டோன்ட்வொறி டாட். நான் கட்டாயம் சொல்லுவன் என்று கூறிப் போனை வைக்க இவனுக்கு கோபத்தில் உடல் கொதிக்க உடனே எழுந்து யாருடன் கதைத்தீர்? என்றான். அப்பாதான் என்றுவிட்டு எந்தவிதக் கூச்சமும் இன்றி அவள் இருக்க, "எங்கடை பேசனல் விஷயத்தைப்பற்றி அதுவும் உம்மட அப்பாவுக் குச் சொல்லிக்கொண்டு இருந்தீரா. உமக்கு என்ன விசரா என்றான். "அம்மாவும் டெய்லி போன் செய்து கேக்கிறவ. நான் சொல்லுறனான்" என்றுவிட்டு அதுபற்றிய அவமான உணர்வு எதுவுமற்ற படி அவனைப் பார்த்தாள் தட்சா.

"உன்ர குடும்பத்துக்கு விசரா? ஒரு அப்பா பிள்ளை யிட்டைக் கதைக்கிற கதையா இது? லூசா நீ" என்று இவன் கோபமாக் கூறியபடி கையை ஓங்க, "என்னை நீங்க அடிக்க முடியாது என்று அம்மா சொன்னவ. நாங்க நிறையக் காசு தந்திருக்கிறம் உங்களுக்கு. பொறுங்கோ டாடிக்குச் சொல்லு றன்" என்று போனை அவள் எடுக்க, இவனுக்கு வந்த கோபத்தில் கண்மண் தெரியாமல் அத்தனை மூர்க்கமாக அவளை அடித்தான் என்று அவள் உணர்வற்றுக் கிடக்கத்தான் உணர்ந்தான். பத்து நிமிடத்தில் அவள் கண்விழித்தபோது இவன் குற்ற உணர்வுடன் சொறி தட்சா என்றபடி அவளருகே செல்ல, பேயைக்கண்டவள் போல் இவனைப் பார்த்துப் பயந்த தாட்சாவைப் பார்க்கப் பரணிக்குப் பாவமாக இருந்தது.

அவள் பயப்படுவது தெரிந்ததும் அவன் மீண்டும் சென்று படுக்கையில் விழ, சிறிது நேரத்தில் வந்துசேர்ந்த தாயும் தந்தை யும் இவனை பார்த்துக் கேட்ட கேள்விகள் கொஞ்சமல்ல. இவனும் விடவில்லைத்தான். எல்லாம் உங்களாலத்தான். பிள்ளையோட என்ன கதைக்கிறது எண்டு தெரியாத நீங்கள் எல்லா ஒரு மனிசரா என்று வாக்குவாதம் முற்றி அவர்கள் தாட்சாவைத் தம்முடன் கூட்டிக்கொண்டு போக இவனால் தடுக்கவே முடியாது போய் விட்டது.

"இப்பவே பொலிசுக்குச் சொன்னால் உன்னை உள்ளே போடுவாங்கள். ஆனால் எமக்குத்தான் அது கேவலம் என்று தான் பேசாமல் போறம்" என்று இவனை மிரட்டிவிட்டுத்தான் மாமியார் போனார்.

தாட்சாவைக் காரில் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு சென்று அவளுக்குக் கோப்பி ஒன்று போட்டுக் கொடுத்து படுக்க வைத்த பின் தாயார் திலகா கணவனிடம் வந்து அடுத்து என்ன செய்வது என்றபோது "எல்லாம் உம்மால்த்தான். எத்தன தடவை சொன்ன னான் தட்சாவுக்குக் கலியாணம் வேண்டாம் எண்டு. தட்சா சாதாரண ஆட்கள் போல் இருந்தாலும் சில பிரச்சனை களும் இருக்கிறதால நீங்கள் எப்பவும் உங்கட கண்காணிப்பில வச்சிருக் கிறதுதான் நல்லது எண்டு அவளின் டொக்ரர் உனக்கு வடிவாத் தானே சொன்னவர். உனக்குப் பேராசை. நல்ல காலம் எக்குத் தப்பா ஏதும் நடந்து போலிசுக்குப் போயிருந்தால் எங்களுக்குத் தான் பிரச்சனை வந்திருக்கும்" என்று திட்டிக் கொண்டே போக, "நான் என்னப்பா செய்ய. கலியாணம் செய்தால் எல்லாம் சரியா யிடும் என்று நினைச்சன்" என்று அழத் தொடங்கும் மனைவியை தொடர்ந்தும் திட்ட மனமின்றி ஏதும் செய்ய வகையற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தார் தட்சாவின் தந்தை கண்ணன்.

அடுத்தநாள் இவன் போன்செய்தும் யாரும் இவனிடம் கதைக்க முன்வரவில்லை. தட்சா இனி உன்னோட இருக்க விரும் பேல்லை. மரியாதைய வீட்டை விட்டு வெளியே ஒரு மாதத்தில போவிடவேணும். இல்லாட்டால் வீண் பிரச்சனை தான் என்றும் இவனை மிரட்டி இன்றுடன் மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. இந்த மூன்று மாதங்களில் அவன் மனம் நன்றாகவே தெளிந்து விட்டது.

அவன் ஒரு முடிவோடு அவர்கள் அனுப்பிய பத்திரத்தைக் கிழித்துப்போட்டுவிட்டு தட்சாவின் போன் இலக்கத்தை அழுத்தி விட்டுக் காத்திருக்க, நீண்ட நாட்களின் பின் மனம் முழுதும் ஒரு நிம்மதி பரவுவது போல் இருந்தது.

# உணர்வுகள் கொன்றுவிடு

முன்பெல்லாம் வானத்தில் நட்சத்திரங்கள் தெரியா விட்டாலும் கூட நீலமற்ற வெண்சாம்பற் புகைகளாய்த் தெரியும் வானத்தைப் பார்த்தபடி இருப்பது அருணாவுக்கு எப்போதும் சலித்ததில்லை. எமது ஊர் போல் வௌவ்வால்களும் பறப்ப தில்லைத்தான். ஒரு குருவி கூடவா பறக்கக் கூடாது என்னும் ஆதங்கம் இன்று அவளுக்கு எழத்தான் செய்தது. மனதில் எழுந்துள்ள சோர்வின் வெளிப்பாடுதானோ இது என்று அவள் மனம் எண்ணியது. அங்குகூட இப்போதெல்லாம் வௌவ் வால்கள் பறப்பதில்லை என்று அங்கு சென்றபோது பக்கத்து வீட்டு ஜீவா கூறியது நினைவில் வந்தது. எல்லாமே கொஞ்சக் காலத்துக்குத் தானோ? மனிதர்கள் போல் பறவைகளும் மாற்றிடம் தேடிக் கொண்டு செல்ல ஆரம்பித்துவிட்டன என எண்ணிக் கொண்டாள்.

நிர்மலன் இப்பொழுதெல்லாம் நன்றாகவே மாறி விட்டான். வேலை முடிந்து ஆவலாக வீடு வருபவன் இப்போ தெல்லாம் பிந்தியே வருகிறான். கேட்டால் வேலை அதிகம் என்கிறான். இரண்டு வயதாகும் ஆரணியுடன் கூடக் கொஞ்சிப் பேசுவதில்லை. எதோ கடனுக்கு அதன் தலையைக் கைகளால் தடவி விட்டபடி நிற்பான். பின் தன் அலுவல் பார்க்கப் போய் விடுவான். மகளும் தூக்கக் கலக்கத்துடன் அப்பா அப்பா என்று

சொல்லிவிட்டுத் தூங்கிவிடும். அவள் அவனுக்கு உணவை எடுத்து வைக்க, அவளுடன் எதுவும் பேசாது ஹோட்டலில் உண்பதுபோல் உண்டுவிட்டு நல்லதா இல்லையா என்று கூடக் கூறாது எழுந்துவிடுவான்.

முன்பு சிறிது நாட்கள் அவன் வேலையால் வந்தவுடன் அவனுக்கு உணவு பரிமாறியபடியே அன்று நடந்த விடயங்கள் எல்லாம் இவள் சொல்ல அவனும் ஆர்வமாகக் கேட்டபடி உண்பான். போகப்போக அவள் ஏதும் சொன்னாலும் அதை அக்கறையுடன் கேட்காது "தொண தொணக்காதே. நான் களைச்சுப்போய் வந்திருக்கிறன்" என்று எரிந்து விழுந்தபின் இவள் அவனுக்கு எதுவும் சொல்வதை நிறுத்திவிட்டாள். இருவரும் படுக்கையைப் பகிர்ந்து கொண்டும் நிறைய நாட்களாகி விட்டன. இத்தனைக்கும் இருவரும் காதலித்துத் தான் திருமணம் செய்து கொண்டவர்கள்.

இவளின் அண்ணனுடன் தான் இவள் டொராண்டோவில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்துவந்தாள். அண்ணனும் இவளுமே குடும்பத்தில். அதனால் அண்ணன் பாசத்துடன் தங்கையை கனடாவுக்கு எடுத்துத் தன்னுடனேயே வைத்திருந் தான். இவள் கணணித்துறையில் நன்றாகப் படித்துச் சித்தி யெய்தி வங்கிக் கணக்காளராக வேலைக்கும் சேர்ந்து ஒரு வருடத்தின் பின்னரே நிர்மலனை முதல் முறை வங்கியில் சந்திக்க வேண்டி வந்தது. வேறொரு வங்கியின் கிளையிலிருந்து இவளது வங்கிக்கு மேலாளராக மாற்றலாகி வந்தவனை எல்லோரும் போலத்தான் இவளும் எதிர்கொண்டது. அனாலும் முதல் சந்திப்பிலேயே இவளை அவன் பார்த்த பார்வையில் ஒரு வசீகரம் அவனிடம் இருப்பதை அவள் அவதானித்ததுதான். இவளைக் காணும் நேரங்களில் எல்லாம் அவனது கண்ணில் தோன்றும் பிரகாசத்தையும் அவதானித்தபடி இருந்தவளை அவன் தான் முதலில் கேட்டான் என்னை உனக்குப் பிடிச்சிருக்கா என்று.

இப்படி அவன் நேரே கேட்டது அவளுக்கு மகிழ்வாக இருந்ததுதான் என்றாலும் எதற்குப் பிடிக்கவேண்டும் என்றாள்

இவள் தன்னை வெளிக்காட்டாது. பிடிக்காவிட்டால் எப்படித் திருமணம் செய்வது என்று அவன் கேட்ட உடனே இவளுக்கு பதைப்புடன் மகிழ்ச்சியும் எட்டிப் பார்த்தது. முகம் உடனே செம்மை படர்ந்து தன் பூரிப்பைக் காட்டியபோதும் இவள் உடனே தன் சம்மதத்தைக் கூறாது அண்ணாவைக் கேட்க வேண்டும் என்றாள். மச்சான் மாட்டன் என்றால் என்னை கலியாணம் கட்ட மாட்டீரோ என்று அவன் கேட்டது மகிழ்வாக இருக்க, இவள் சிரித்தபடி அண்ணாவை கேளுங்கள் என்று கூறிவிட்டு நகர்ந் தாள். மச்சானின் போன் நம்பர் தராமல் எப்பிடிக் கேக்கிறது என்று அவன் சிரிக்க, இவள் ஒரு தாளில் அதை எழுதி தமையனின் பெயரையும் தாசன் என்று எழுதிக் கொடுத்தாள்.

அடுத்த நாளே அவன் தாசனுடன் போனில் என்ன கதைத்தானோ தாசன் மாலை வீட்டுக்கு வரச் சொல்லிவிட்டான். இவளுக்கு மனம் நிறைந்து யாருக்கும் அதைப் பகிரவும் முடியாது கால்கள் நிலத்தில் நிற்கமுடியாது தாவின. உனக்கு நிர்மலனைப் பிடிச்சிருக்கா அருணா என்று தமையன் கேட்க ஓமண்ணா என்று வார்த்தைகள் தொண்டையில் சிக்கி வெளிவந்தன.

இவளுக்கு நண்பிகள் கிடையாது. படிக்கும் காலத்திலேயே பெரிதாக யாருடனும் பேசாது பொம்மை போல தன் படிப் புடன் இருப்பாள். கனடா வந்த பின்னும் மற்றவருடன் பெரி தாகத் தமையனும் பழகுவதில்லை. அதுவே அவளுக்கும் பழகி விட்டது. மாலை நிர்மலன் இவளுக்கு ஒரு கொத்துப் பூக்களுடன் வந்து இவள் கையில் கொடுத்துவிட்டு என்னையே நினைத்தபடி இருக்கிறாயா என்று கேட்டவுடன், என் முகம் மகிழ்வைக் காட்டிக் கொடுக்கிறதா எனத் தன்னையே கேட்ட படி வாங்கோ என்று அவனை உள்ளே இருத்திவிட்டு அண்ணனின் அறைக்குள் எட்டிப்பார்த்து அவர் வந்துவிட்டார் அண்ணா என்றுவிட்டு குசினிக்குள் சென்று ஒரு வாசில் நீர் நிரப்பி அவன் கொண்டுவந்த பூக்களை அதில் அழகாக வைத்து வரவேற்பறையில் அவன் முன் இருந்த மேசையில் வைத்தபடி தாங்ஸ் என்று கூறிவிட்டு உள்ளே செல்ல இருந்தவளை, இரு அருணா

என்று தமையன் கூற அவனுக்கெதிரில் கதிரையில் அமர்ந்தாள்.

முதல் நாளே தாசனும் அவனும் எல்லாம் கதைத் திருப்பார்கள் போல. முன்பே எல்லாம் தெரிந்தவர்கள் போல் கதைத்துச் சிரித்ததில் தன் திருமணம் நிட்சயமாகிவிட்டது புரிந்தது. ஒரே நாளில் எப்படி அண்ணன் ஒருவனை நம்பினான் என்று இவளுக்கு ஆச்சரியம் ஏற்பட அண்ணனை நிமிர்ந்து பார்த்த பார்வையில் அண்ணனும் இவள் மனம் புரிந்து "நிர் மலனை என் நண்பன் அகிலன் குடும்பத்துக்கு நல்லாத் தெரியு மாம். நேற்றே எல்லாம் விசாரிச்சுப்போட்டுத்தான் இண்டைக்கு இவரை வரச்சொன்னனான்" என்றுவிட்டு இருவரையும் பார்த்துச் சிரித்தான். அதன்பின் ஒரு மாதத்திலேயே திருமணம். நிர்மலனுக்கு தாய்தந்தை இல்லை. தமக்கை மட்டும் இலங்கை யில். இங்கும் பெரிதாக யாரும் இல்லாததால் மிகச் சிக்கன மாகவே திருமணம் முடிந்தும் விட்டது. அவனின் நண்பர்கள் கொஞ்சமும் தாசனின் நண்பர்களும் இரண்டு மூன்று உறவினர் களும் மட்டுமே திருமணத்துக்கு. கோவிலிலேயே எல்லா ஏற்பாடுகளும். அதனால் இவர்களுக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் திருமணம் முடிந்தது.

இவளின் திருமணம் நடந்து ஒரு வாரத்தின் பின்னரே தான் அமெரிக்காவில் இருக்கும் ஒரு பெண்ணை விரும்புவதாகவும் தானும் அங்கேயே போய்விடப்போவதாகவும் தாசன் கூற, ஓ இத்தனை நாள் ஒழித்துவிட்டீர்களே அண்ணா என்று அண்ணனும் வாழ்க்கையில் இணையப்போகிறான் என்னும் மகிழ்வில் பூரிப்புடன் அருணா கூறினாள். அதன்பின் நிர்மலனுட னான அவளது வாழ்வு சொர்க்கமாகவே இருந்தது. இவளைத் தாங்கினான் என்றுதான் சொல்லவேண்டும். வயிற்றில் ஆரணி உருவானவுடனேயே வேலையை விடச் சொல்லிவிட்டான் அன்புக் கணவன். அவளுக்கும் அலைந்துகொண்டு வீட்டுக்கும் வேலைக்குமாகத் திரிய அலுப்பாகத்தான் இருந்தது.

குழந்தை பிறந்தது ஒருமாதம் லீவு எடுத்துவிட்டு இவளை ஒன்றும் செய்யவிடாமல்... இப்ப நினைக்க கண்களில் நீர் எட்டிப்

பார்த்தது. அண்ணன் திருமணமாகி அமெரிக்காவில் வசிக்க ஆரம்பித்த பின்னர் நிர்மலன் இரண்டு வார விடுமுறையில் அவளையும் அழைத்துக்கொண்டு அங்கு சென்றுவந்தான். அண்ணனின் வீட்டின் பிரமாண்டத்தைப் பார்த்து இவளுக்கு வாய் அடைத்தது. அண்ணா கட்டடக் கலைஞன் என்பதனால் திட்டமிட்டு அழகாக வீட்டைக் கட்டியிருந்தான். அண்ணி சுபத்திரா கூட நன்றாகத்தான் பழகுகிறாள். இவளுக்கு அண்ணனை எண்ணப் பெருமையாக இருந்தது. அண்ணா நன்றாக இருக்கிறது வீடு என்றாள் கள்ளங்கபடம் இன்றி. எல்லாம் உன் அண்ணியின் விருப்பப்படிதான். அவளே எல்லாம் தெரிவு செய்தாள். என் காதல் பரிசு இது அவளுக்கு என்று தாசன் சொல்ல பெருமிதமாய்ச் சிரித்துக்கொண்டு அண்ணி நின்றாள்.

அண்ணனின் நினைவு வந்து அவளுக்கு இன்னும் கண்ணீரைப் பெருக்கியது. அண்ணனிடம் மனம்விட்டுச் சொல்லிப் பார்ப்போமோ என்று எண்ணியவள், வேண்டாம் இன்னும் கொஞ்ச நாட்கள் பார்ப்போம் என்று மனதை அடக்கிக் கொண்டு படுக்கை அறைக்குச் செல்ல எழுந்தாள். அடுத்த அறையில் கணவன் கணனியில் மும்மரமாக இருக்க, துவண்ட மனதுடன் சென்று தூங்க ஆரம்பித்தாள்.

கணவன் சொன்னவற்றைக் கேட்டு அதிர்ச்சியில் நின்றாள் அருணா. அவனுக்கு இங்கு வேலை செய்வது பிடிக்கவில்லை யாம். அதனால் வேறொரு வேலை தேடிக்கொண்டு அமெரிக்கா வுக்குச் செல்கிறானாம் என்றவுடன் ஏன் இங்கு உங்களுக்கு என்ன பிரச்சனை என்று இவள் ஆரம்பிக்க முன்னரே எனக்கு இங்கு பிடிக்கவில்லை. கொஞ்சநாள் அங்க இருந்து பார்க்கப் போறன் என்று கத்துமாப்போல் சொல்பவனை வாயடைத்துப் பார்க்க மட்டுமே இவளால் முடிந்தது. நீயும் பிள்ளையும் இங்க இருங்கோ. நான் போய் பிறகு உன்னைக் கூப்பிடுறன் என்பவனை எதுவும் சொல்லாது பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவன் வேலைக்குச் சென்றதும் தமையனுக்குத் தொலைபேசி எடுத்து தன் உள்ளக்கிடக்கையை எல்லாம் கொட்டி அழுது தீர்த்தாள்.

தமையனும் யோசனையுடன் நான் நிர்மலனுடன் கதைக்கிறன் என்று விட்டு போனை வைக்க, தனியாகக் காட்டில் அகப்பட்டவளாய் கலங்கும் மனதுடன் ஏதுமற்று இருக்க மட்டுமே அவளால் முடிந்தது.

அடுத்த நாள் தாசன் போன் செய்து, மச்சான் எதோ குழப் பத்தில இருக்கிறார். கொஞ்சநாள் விட்டுப்பிடிப்பம். இங்க வந்து என் வீட்டிலேயே நீங்கள் தங்கலாம் என்று சொல்ல அவர் சம்மதித்துவிட்டார். ஆனபடியால் பெரிதாக ஏதும் இருக்காது நின்மதியாய் இரு என்று அண்ணனின் ஆறுதல் வார்த்தைகள் மனதுக்குத் தெம்பூட்டின.

அவன் அமெரிக்கா சென்ற பின்னர் கூட விழுந்துகட்டி இவளுடன் போனில் பேசவோ அன்றி சுகம் விசாரிக்கவோகூட இல்லை. இவள்தான் அண்ணனுக்குப் போன் செய்து தன் ஆதங் கத்தைக் கொட்டுவாள். தாசனும் தான் என்ன செய்வது. கொஞ்ச நாளைக்கு நீ பேசாமல் இரு. என்ன செய்கிறான் பார்ப்போம் என்று கூறியபின் இவள் அண்ணனையும் தொந்தரவு செய்வ தில்லை.

முன்பு அண்ணனும் பின்னர் கணவனும் இவளின் தேவை களை எல்லாம் பூர்த்திசெய்வதால் இவள் பெரிதாக எதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதில்லை. இப்போ எல்லா வேலை களையும் இவளே செய்ய வேண்டியதாகிவிட்டதில் இவளது நேரங்கள் அதில் கரைந்தனதான் எனினும் இரவில் மகள் தூங்கியபின் இவள் தூங்காது பலதையும் எண்ணி குமைந்ததில் உடல் இளைத்து பார்ப்பதற்கு நோயாளி போலானாள். தங்கையை ஆறுதல்ப் படுத்த வந்த அண்ணன் இவள் நிலை கண்டு கலங்கித்தான் போனான். அருமைத் தங்கை. யாருக்கும் கேடு எண்ணாதவள். ஏன் நிர்மலன் இவளிடம் பிடிப்பற்றுப் போனான் எனக் குழம்பியதில் தான் திரும்பிச் சென்றவுடன் அவனிடம் தெளிவாகவே பேசி இதுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று எண்ணினான்.

உணர்வு மழுங்கி உயிர்த்துடிப்பு அடங்கி யாருமற்ற உலகில்

தன்னந்தனியனாக நிற்கும் உணர்வு ஏற்பட்டது தாசனுக்கு. இன்னுமே கூட எதையும் கிரகித்துக்கொள்ள அவனால் முடிய வில்லை. ஐயோ அருணா இதை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறாள்? எப்பிடி இதை நான் அவளிடம் சொல்வேன் என்று எண்ணி அழுதபடி எத்தனை நேரம் இருந்தானோ தெரிய வில்லை. ஆண்கள் அழுவதில்லை என்றும் அழக்கூடாது என்றும் சொல்வார்கள். ஏன் ஆண் மனிதன் இல்லையா? அல்லது மனமே இல்லாதவனா? என மனதில் எழுந்த நினைவில் அழுகையில் சிரிப்பும் வந்தது. தொடர்ந்து அவனது தொலைபேசி அடித்ததில் மனம் கலைந்து சிரமத்துடன் எழுந்து சென்று போனை எடுத்தான். வேலை இடத்திலிருந்து இவனைக் காணவில்லை என்ற விசாரிப்பு. எனக்கு எழும்பவே முடியாது வருத்தம். ஒருவாரம் விடுப்பு வேண்டும் என்றுவிட்டுத் தொலைபேசியை வைத்தபின்னும் என்ன செய்வது என்றே தெரியாத நிலை.

முந்தநாள் கனடாவில் இருந்து வந்ததும் தங்கை கணவனை இருத்தி வைத்து அவன் அப்படி இருப்பதற்கான காரணத்தைக் கேட்டான். என்னால் உடனே பதில் சொல்ல முடியாது. நாளை கூறுகிறேன் என்று மேற்கொண்டு இவனுடன் பேசாது எழுந்து செல்லும் நிர்மலனை எதுவும் கூறாது பார்த்துக்கொண்டு இருக்கவே இவனால் முடிந்தது. அடுத்தநாள் எப்போது விடியும் என்று சிறுபிள்ளை போல் காத்திருக்க மட்டுமே அவனால் முடிந் தது. அடுத்த நாள் காலை விடியாமலே இருந்திருக்கக் கூடாதா என்று இப்ப எண்ணம் எழ, பெருமூச்சு மட்டுமே பதிலானது.

நேற்றுக் காலை அவன் வேலைக்கு வெள்ளனவே செல்ல வேண்டிய தேவை இருந்ததில் நிர்மலன் எழும்ப முதலே சென்று விட்டான். மாலை இருந்த வெளி வேலைகளை எல்லாம் ஒரத்தில் வைத்துவிட்டு தங்கையின் கணவன் என்ன சொல்லப் போகி றானோ என்ற பதைப்பில் வெள்ளனவே வீட்டுக்கு வந்து விட்டான். சுபத்திராவும் அன்று வெள்ளனவே வந்துவிட்டாள் என்பதை அவள் படுக்கைஅறையில் படுத்திருந்ததிலே தெரிந் தது. என்னப்பா ஏதும் வருத்தமே என அக்கறையாக அருகில்

சென்று விசாரித்தவனை, "சரியான தலையிடி. அதுதான் குளிசையைப் போட்டுக்கொண்டு படுத்திருக்கிறன்" என்று கண்ணைக் கூடத் திறக்காது அவள் சொன்ன விதம் அவளின் தலை வலியின் அளவை அவனுக்கு உணர்த்த, அவள் பாவம் படுக்கட்டும் என்று எண்ணியபடி உடைகளை மாற்றிக்கொண்டு வரவேற்பறைக்கு வந்து நிர்மலனுக்காகக் காத்திருக்கவாரம்பித்தான்.

இவனுக்குப் பசித்ததுதான் எனினும் நிர்மலனும் வரட்டும் சேர்ந்து சாப்பிட்டபடி கதைத்தால் இறுக்கம் குறையலாம் என்ற நப்பாசை எழவே மேசையில் கிடந்த ஒரு மகசினைப் புரட்டியபடி காத்திருந்தான். நிர்மலானோ வழமையாக வரும் நேரத்துக்கு வரவே இல்லை. தொலைபேசி எடுத்துப் பார்ப்போமோ என்று எண்ணியவன், அவன் என்ன சின்னப் பையனா ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்பதற்கு என எண்ணி அந்த நினைப்பைத் தள்ளி வைத்துவிட்டு தொலைக் காட்சியை இயக்கிவிட்டு அதில் தன் மனதைச் செலுத்தத் தொடங்கினான்.

எத்தனை நேரம் தூங்கினானோ தெரியவில்லை நிர்மலன் இவன் தோளைத் தொட்டு உலுப்ப திடுக்கிட்டு விழித்தான். வாங்கோ சாப்பிடுவம் என்று அவன் அழைக்க இவனுக்கும் அப்போது தான் பசி தெரிய அவனைத் தொடர்ந்து உணவு அறைக்குள் வந்து இருக்கையில் அமர்ந்தான்.

சுபத்திராவும் எழுந்து உணவுகளைச் சூடாக்கிக் கொண்டிருந்தாள். தலையிடி குறைஞ்சிட்டுதே என இவன் அக்கறையாகக் கேட்க, ம்... என்பதே அவளின் பதிலாக வந்தது. மூவருமே பசியுடன் இருந்தவர்கள் போல் உண்பதிலேயே கவன மாக இருந்தனர். யாரும் யாருடனும் பேசவில்லை. சுபத்திரா வழமையாக ஏதாவது பேசியபடி தான் சாப்பிடுவாள். அவளின் கதைகளுக்கு நிர்மலன் சிரித்துப் புரையேறியதும் உண்டு. இன்று தலைவலியின் தாக்கம் அவளுக்கு என எண்ணியபடி அவளுடன் இவனும் எதுவும் பேசாது சாப்பிட்டு முடித்தான்.

மூவரும் வரவேற்பறையில் வந்து அமர்ந்ததும் நிர்மலன் தான் பேசவாரம்பித்தான். தாஸ் நான் சொல்லுறது உங்களுக்கு

விளங்கும் எண்டு நினைக்கிறன். எனக்கு அருணாவோட வாழ இனிச் சரி வராது என்று நிர்மலன் முடிக்கும் முன்னரே ஏன் சரிவராது என்று இவன் சிறிது கோபத்துடனேயே கேட்டான். எனக்கு சரிவராது. என்றான் நிர்மலன் எதுவுமே நடக்காதது போல். நீங்கள் தானே வலிய வந்து அருணாவைச் செய்யப் போறன் எண்டு கேட்டுக் கலியாணம் செய்தநீங்கள். ஒரு குழந்தையும் பிறந்தபிறகு... யோசிச்சுத்தான் கதைக்கிறீங்களோ நிர்மலன் என்றான் இவன் குரலை உயர்த்தி.

நானும் சுபத்திராவும் வடிவா கதைச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறம் என்று நிர்மலன் சொல்ல, சுபத்திராவோட என்ன கதை? நான் தானே அவளிண்ட அண்ணன். என்னோட கதையும் என்று மரியாதையிலிருந்து ஒருமைக்கு மாறினான் தாசன்.

I am so sorry. நானும் நிர்மலனும் ஒரு வருடமா முகப் புத்தகத்தில பழக்கம். நானும் அவரும் சேர்ந்து வாழப்போறம். எங்களை மன்னிச்சிடுங்கோ என்று கூறும் சுபத்திராவை அதிர்ச்சி யுடன் வானே இடிந்து தன்மேல் விழுந்ததான எண்ணத்துடன் அவமானம் மேலிட வார்த்தைகளின்றிப் பார்த்துக் கொண்டிருந் தான் தாசன்.

இவ்வளவு கேவலமானவளா நீ. உன்னாலத்தான் என் குடும்பத்தில் இருவரின் வாழ்வில் இடியா என அவன் மனம் அலறியபடி இருக்க, ஐயோ என்ன செய்வது என்ன செய்வது என்று அலறும் மனத்தை எதுவும் செய்ய முடியாது என்ற உண்மை அழுத்த, வேறு வழியேயின்றி வரும் அழுகையை வெப்பியாரத் தோடு அடக்கிக்கொண்டு எழுந்து தோட்டத்துக்கு நடந்தான் தாசன்.

# உறவுகள்

சிவாவுக்கு இன்னும் தூக்கம் கலையவில்லை. இரவு அடித்த வொட்காவின் தாக்கம் தலையிடியாய் மாறி அவனை எழுப்பியிராவிட்டால் இன்னும் அதிக நேரம் அவன் தூங்கி யிருப்பான். அப்பவும் எழும்ப மனமின்றிப் புரண்டே படுத்தான். இதமாக இளங்காலையில் வீசிய காற்றினால்கூட அவனை எழுப்ப முடியவில்லை. அதற்காக அவன் இரசனை அற்றவனும் அல்ல. மதுவையும் பெண்களையும் எப்படி இரசிக்கின்றானோ அது போல் இயற்கையின் விந்தைகளையும் தன்னை மறந்து இரசித்து மிருக்கிறான்.

வேலை அற்ற நாட்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஏனோ அவனுக்கு வெள்ளனவே விழிப்பு வந்துவிடும். அந்த நாள் முழுவதையும் அமைதியாக வீட்டிலிருந்தபடியே கரைப்பதான அவனின் அந்தத் தீர்மானத்தை யாராலும் கலைக்க முடியவே இல்லை இன்றுவரை.

தொலைபேசி அழைப்புத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது. அம்மாவாகத்தான் இருக்கும். இப்படித் தொடர்ந்து வேறுயாரும் போன் செய்துகொண்டே இருக்க மாட்டார்கள். இருதடவை கண்களையே திறக்காது கிடந்தவன், மூன்றாவது தடவையாக போன்சத்தம் தொடர்ந்ததில் கைகளை மட்டும் நீட்டி போனை எடுத்துக் காதில் வைத்தும் என்றான்.

பத்மாவின் மனம் இன்று கொந்தளித்தபடி இருந்தது. எத்தனை எண்ணியும் ஆறுதல் கொள்ளமுடியாது தவிப்புடன் கூடவே கோபமும் எழுந்ததுதான் எனினும் எதுமே செய்ய முடியாத கையாலாகாத் தனத்தில் தன்மீதே எரிச்சல் வந்தது. இந்த நாற்பத்தெட்டு வயதில் கூட மற்றவர் திரும்பிப் பார்க்கும் அழகுடனும் சுறுசுறுப்புடனும் இருக்கும் தனக்கு, தன் கணவனைத் தன்னுடன் கட்டி வைக்கும் கலை வாய்க்கவில்லையே என தன்மீதே பச்சாதாபம் எழ, ஏதும் செய்ய முடியாத தன் நிலையை எண்ணிப் பெருமூச்சைத்தான் விடமுடிந்தது.

வயதுக்கு வந்து எத்தனையோ ஆண்டுகளான தன் பெண்ணைப் பற்றிக்கூட ஒரு தந்தை கவலை கொள்ளாது இருக்க முடியுமா என்று அவள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

தன் மகளை மட்டுமல்ல தன் குடும்பத்தைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் இந்த ஐம்பத்து ஐந்து வயதிலும் வாலிப நினைவுடன் திரியும் கணவனைப் பற்றிய கவலையிலேயே அவளுக்கு தன் மற்றைய துன்பங்கள் மறந்துவிட்டன. மூத்தவன் அசுவத்தாமா கூட உரித்துவைத்து அப்பனைப் போலத்தான். குடும்பத்தில் எந்த ஈடுபாடுமின்றித் தன் காரியங்களை மட்டும் சாதித்துக்கொண்டு போவதில் வல்லவனாக இருந்தான். ஆனாலும் அவனையும் குறை சொல்ல முடியாது. இப்படி ஒரு அப்பாவுக்கு மகனாகப் பிறந்துவிட்டு... எதோ தன் படிப்பைத் தானே கவனித்து இன்று அமெரிக்காவில் நல்ல ஒரு வேலையில் இருக்கிறான். ஆனால் என்ன என் சம்மதத்தைக் கேட்காமலே ஒரு வெள்ளை இனப் பெண்ணை மணந்து... சரி என் விதி என்று நொந்தபடி கணவனின் விடயத்தை நினைவில் கொண்டுவந்தாள் மீண்டும்.

இப்ப மூன்று மாதங்களாக கணவனிடமிருந்து எந்தக் கடிதமும் வரவில்லை என்றதும் அவளுக்கே கொஞ்சம் பயம் ஏற்பட்டது. அத்தோடு நேற்று முன்தினம் மகளின் சாதகத்தைக் கொண்டு இணுவிலில் உள்ள சாத்திரம் சொல்லும் ஒருவரிடம் சென்றபோது, உன் மகளுக்கு மூன்று ஆண் சகோதர்களும்

இன்னொரு பெண் சகோதரியும் இருக்கிறார்கள் என்று சொன்னதும், "இல்லை அம்மா எனக்கு இரண்டு ஆணும் ஒரு பெண்ணும் தான்" என்றாள் பத்மா. அவர் மீண்டும் கண்ணை மூடியபடி "என் வாக்குப் பலிக்காமல் விட்டதில்லை. இப்ப மூன்று என்றால் இன்னும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இவள் சாதகத்தில் சகோதர பலன் உண்டு" என்று கூறிவிட்டு, "அடுத்த ஆண்டுதான் திருமணப் பலன் உண்டு. கவலை கொள்ளாமல் போய் வா" என்று கூற இவள் எதை எல்லாமோ எண்ணியபடி வீடுவந்து சேர்ந்தாள்.

இந்த வயதில் பிள்ளைகளைப் பற்றிய கவலை தான் இருக்கவேண்டுமே தவிர முப்பது வருடத் தாம்பத்தியத்தில் கணவனைப் பற்றிப் பயம் கொள்வது, கணவனின் அரவணைப்பு தனக்கு கிடைக்காத காரணத்தினால்த்தானோ என்று குழப்பம் ஏற்பட, இரண்டாவது மகனுக்கு தொலைபேசி எடுத்து அவனின் சுக நலன்களைக் கேட்ட பின்னர், ஒருக்கா அப்பாவைப் போய்ப் பார்த்துக்கொண்டு வருகிறாயாடா கண்ணா. அம்மாவுக்காக போடா என்று இறைஞ்சுவதுபோல் கேட்டாள்.

***

சிவாவுக்கு தந்தை மேல் அலாதிப் பிரியம். அதற்காகத் தந்தையும் இவனுடன் நல்லமாதிரி என்று சொல்ல முடியாது. ஆனால் ஆண் சிங்கங்கள் இரண்டைப் பெத்திருக்கிறேன் என்று அது பெரிய சாதனைபோல் கூறும் தந்தையை அவனுக்கு மட்டு மல்ல பெரும்பாலானவர்களுக்கும் பிடிக்கும்தான். நல்ல உயர மாக நிறமாக நீண்ட மூக்குடன் பார்ப்போரை வசியம் செய்வது போன்ற பார்வையும் கண்ணும் கொண்டவரை, யாருடனும் தானாக வழிந்து பேசாமல் திமிராய் இருப்பதனால்த்தானோ அவனுக்கு அப்பாவைப் பிடிக்கும் என்று கேட்டால் தெரியாது என்பதாய்த்தான் அவன் பதில் இருக்கும். ஆங்கிலம் சரளமாக அப்பா பேசும்போது, கணக்கைப் புரியும்படியாக இவனுக்கு விளங்கப்படுத்தும்போதும் அவர் மற்றைய அப்பாக்களை விட உயர்ந்தவராகவும் சிவாவின் மனதிலிருந்து எந்த நிலையிலும்

கீழே இறக்கமுடியாதவராகவும் ஆகிப்போனார்.

மற்றைய பிள்ளைகள் என்றால் தம்மைக் கவனிக்காத அப்பாக்கள் மேல் வெறுப்பைத்தான் வளர்த்துக் கொள்வார்கள். முன்பு எங்கேயாவது தந்தையுடன் செல்ல முடிந்த வேளைகளில் அப்பாவின் கைகளைப் பிடித்தபடி வீதியில் போவது இவனுக் குப் பெருமையாக இருக்கும். வீதியில் பலர் அப்பாவுக்குக் கொடுக்கும் மரியாதையில் இவன் தனக்குமானதாக எண்ணித் தலை நிமிர்த்திக்கொண்டு போவான். பல தடவைகள் யாழ்ப் பாணத்தில் சந்திரா அன்டி அப்பாவுடன் கதைத்துக்கொண்டே வருவா. இவனுக்குச் சினமாக இருந்தாலும் அப்பா தன் கையை விடாமல்ப் பற்றி இருப்பதும், சுபாஸ் கபேயில் வாங்கித்தரும் ஐஸ்கிரீமும் ரோல்சுமே அப்பாவின் மேலுள்ள எரிச்சலையும் குறைத்து, அடுத்த தடவையும் அப்பாவுடன் செல்வதான ஆசையையும் கிளறிவிடும்.

அம்மா எப்போதும் அப்பா பற்றி சிவாவிடம் தூண்டித் துருவிக் கேட்டது கிடையாது. அந்த விடயத்தில் அம்மாவைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை அவனால். இப்பொழுது வளர்ந்து இருபத்தாறு வயதாகிய பின்னும் கூட, அப்பா தம்மை எல்லாம் ஏழு ஆண்டுகளாகப் பிரிந்து கென்யாவில் ஆங்கில ஆசிரியராகச் சென்றதன் பின்னரோ, சிவா லண்டனில் காலூன் றித் தன் வாழ்வை ஆரம்பித்ததன் பின்னரோகூட, அப்பாவில் எந்தவித வெறுப்பும் ஏற்படாமல் எப்படி இருக்கிறது என்பது அவனை அடிக்கடி வியப்பில் ஆழ்த்தும் விடயம்.

பாவம் அம்மாதான் எம்மை வளர்ப்பதற்கே தன் வாழ்வைத் தொலைத்தவர் என்னும் இரக்கமும், தாயின் மேல் உண்மை யாகவே அவனுக்கிருந்த அன்பும், தாயின் வேண்டுகோளை நிறைவேற்றுவதான முடிவைக் கொடுக்க, எழுந்து முகம் கழுவி ஒருகோப்பியைப் போட்டுக்கொண்டு வந்து கணனியின் முன் அமர்ந்தான் விமானச் சீட்டைப் பதிவு செய்வதற்காக.

***

அவன் கென்யாவில் இருந்து வந்து ஒரு வாரமாகிவிட்டது.

இன்னும் தாய்க்குத் தொலைபேசி எடுக்கவே இல்லை. நான் இன்னும் கென்யாவில் இருக்கிறேன் என்றே அம்மா எண்ணிக் கொண்டு இருப்பா. எடுப்போமா விடுவோமா என்று இரண்டு மூன்று தடவைகள் எண்ணிவிட்டு பிறகும் அம்மாவுடன் கதைக்கும் எண்ணத்தைத் தள்ளிப்போட்டான்.

அப்பா முந்தைய கம்பீரத்தோடு இல்லை ஆயினும் இப் போதும் முப்பது முப்பத்தைந்து மதிக்கத் தக்கவர் போலவே இளமையாக இருந்தார். இவனை எயாப்போர்ட்டில் வந்து கூப் பிடும் போது இவனுக்குத் தந்தையைக் கட்டி அணைக்க வேண்டும் போல இருந்தது. ஆனாலும் தந்தை தோழில் கைபோட்டு எப்பிடி இருக்கிறாய் மை சண் என்றபோது அவனின் ஏமாற்றம் அளவிட முடியாததாக இருந்தது. அத்தோடு வந்ததும் வராததுமாய் எத்தனை நாள் நிப்பாய் இங்கே என்றதும் கூட ஒரு ஏமாற்றத் துடன் கூடிய வலியையும் தந்தது தான் எனினும் சமாளித்தபடி ஒரு வாரம் தான் அப்பா என்றான்.

தூரத்தில் இருக்கும் போது தந்தை பற்றி எண்ணியதற்கும் இப்போது கண்முன்னே நடப்பவைக்குமான வித்தியாசத்தை மனம் கிரகித்துக்கொள்ள மறுக்க, அவன் எதிர்பார்த்து வந்த அப்பா இவர் இல்லை என்பதும் உறைக்கத் தன் மனதைச் சமநிலைப்படுத்துவதர்க்காய் வீட்டுக்குப் போகும் வரை இவன் எதுவுமே பேசாமல் அமர்ந்திருந்தான். இவன் முதல்த்தடவை கென்யா வந்தபடியால் இவனுக்கு ஒவ்வொன்றையும்காட்டி சிறுவன் ஒருவனுக்கு விளங்கப்படுத்துவது போல் கூறிக் கொண்டே அப்பா வர, இவனும் ம் போட்டபடியே வந்தான். பச்சைகளும் கட்டடங்களும் அங்காங்கே தெரிந்தனதான் எனினும் ஒருவித வெறுமை பார்க்கும் இடமெங்கும் தெரிந்தது. சன நெரிசல் கூடிய லண்டனை தன் மனம் ஒப்பிட்டுப் பார்க்கிறது எண்ணிக் கொண்டான்.

அப்பா இருந்த வீடு சிறிய பங்களோ போன்று இருந்தது. அப்பா டாக்சியை அனுப்பிவிட்டு உள்ளே போக, சிவா வெளியே நின்றபடியே சுற்றிவரப் பார்வையால் அளந்தான். அங்காங்கே

சில பூஞ்செடிகள் இருந்தனதான் எனினும் பூக்கள் இன்றி குளிர்ச்சியின்றி இவன் மனது போல இருப்பதாகவே இவனுக்குப் பட்டது. அத்தோடு சுட்டெரிக்கும் வெயிலும், வியர்வையில் நனைந்துபோன இவனின் உடைகளும், காற்றே அற்ற அந்தச் சூழலும் ஒருவித வெறுப்பைத் தோற்றுவித்தன.

வாடா உள்ளே என அப்பா அழைத்ததும் மனதில் ஒரு சந்தோசம் துளிர்க்க உள்ளே சென்று கதிரையில் பாக்கை வைத்து விட்டு அமர்ந்தான். என்னடா குடிக்கிறாய் என்று அப்பா உரிமை யுடன் கேட்க அப்பாமேல் இருந்த கோபம் காணமற் போன தாக உணர்ந்து மனதில் ஒரு நின்மதி பரவியது. அதன் பின் தந்தை தனக்காகச் சமைத்து வைத்தது என சோறு பருப்பு மரவள்ளிக் கிழங்கு மீன் பொரியல் என நாவுக்குச் சுவை இல்லா விடினும் தந்தை தனக்காகச் செய்தது என்னும்போது அமிர்த மாகத்தான் இருந்தது.

ஏன் அப்பா இங்கே இருக்கிறீர்கள். அம்மாவும் தங்கச்சியும் பாவம். எங்களிடம் சொத்துப்பத்தா இல்லை. இனியாவது வேலையை விட்டுவிட்டு அங்கே போய் இருங்களன் என்றான். போகத்தான் வேணும். இன்னும்கொஞ்சக்காலம் இருந்து விட்டுப் போகலாம் என்று இருக்கிறேன். அசுவன் எப்படி இருக் கிறான் என்று தன் மூத்த மகன் பற்றி இந்த மகனிடம் கேட்டார். ஏனப்பா நீங்கள் அண்ணனுடன் கதைப்பதே இல்லையா என்றிவன் ஆச்சரியமாகக் கேட்டான். எங்கடா அவன் என்னுடன் முன்பே உன்போல் இல்லைத்தானே என்று ஒருவித மனத்தாக்கலோடு அவர் சொல்வதுபோல் இருந்தது.

அந்த நிலையை நீடிக்கவிடாது அண்ணா நன்றாகத்தான் இருக்கிறான் என்றான். நீ US போயிருக்கிறாயா என்றுவிட்டு இவனைப் பார்த்தார். நான் இன்னும் போகவில்லை. அண்ணா போன வருடம் லண்டன் வந்திருந்தான் அண்ணியுடன் என்று விட்டு இவனும் மேற்கொண்டு எதுவும் கதைக்கத் தோன்றாது இருந்தான். தந்தைக்கு என்ன தோன்றியதோ அல்லது பிள்ளை யிடம் பிள்ளை பற்றி விசாரிக்கும் குற்ற உணர்வு ஏற்பட்டதோ

அவரும் மௌனமாகவே உண்டு முடித்தார்.

ஐந்து நாட்கள் எப்படிப் போனது என்றே தெரியவில்லை. இத்தனை நாள் தந்தையிடம் இழந்தவைகளை மீளப்பெறுவது போல அவன் தந்தையுடன் ஐக்கியமாகிவிட்ட நிலையில், அவன் மனதில் உறுத்திக்கொண்டிருந்த கேள்வியை தந்தையைக் கேட்டான். "இந்த வீட்டில் நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்" என்று. தந்தையின் முகத்தில் ஒரு திடுக்கிடல் தோன்றி உடனே மறைந்ததை இவன் கவனித்துவிட்டு அவரின் பதிலுக்காகக் காத்திருந்தான். "இங்கு இன்னொரு குடும்பம் இருக்கிறது. தன் சகோதரி வீட்டு விசேடத்துக்கு அவர்கள் சென்றிருக்கிறார்கள். நாளை அல்லது மறுநாள் வந்துவிடுவார்கள். நீ நாளை மறுநாள்த் தானே கிளம்புகிறாய்" என்று கேள்வியோடு இவனைப் பார்த்தார்.

இவனும் யோசனை ஒருபக்கமும் தந்தையுடன் இன்னும் சிறிதுநாள் நிற்போமா என்னும் சிந்தனையுடன் "வேண்டுமானால் இன்னும் ஒருவாரம் டிக்கற்றை மாற்றிப் போட்டு நிற்க முடியும்" என்றான். எனக்கு வேலையேடா நான் லீவு எடுக்க இயலாது என்று கூறுபவரை, மீண்டும் அந்நியமாகிவிட்ட மனதோடு பார்த்துவிட்டு அப்ப நான் நாளை மறுநாள் கிளம்புகிறேன் என்றுவிட்டு எதுவும் பேசாது அமர்ந்திருந்தான்.

அடுத்தநாள் இவன் தந்தையுடன் வெளியே சென்றுவிட்டு வரும்போது அந்தப் பெண் வீட்டிலிருந்தாள். கருப்பாக இருந்தாலும் பார்க்கக் களையாக இருந்தாள். என்ன என் வயது தான்வரும் போல என மனதுள் எண்ணியதை வெளியே சொல்லவில்லை. ரீற்ரா என்று தந்தை அறிமுகம் செய்து வைக்க கலோ என்று கை நீட்டிக் குலுக்கிக் கொண்டான். அவளின் கண்களில் ஒரு தெளிவும் கூர்மையும் இருந்தது. பெரிய மார்பும் அளவான இடையும்... அவளைப்பற்றி எண்ணத் தொடங்கிய மனத்தைக் கட்டுப் படுத்தியபடி எப்படி இருக்கிறீர்கள் என்றான் ஆங்கிலத் தில். ரீட்டா தன் மொழியில் அப்பாவிடம் எதோ சொல்வதும் பின்னர் தந்தையும் எதோ சொல்லிய பின் பைன் என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு மேற்கொண்டு நின்று இவனுடன் உரையாட

விருப்பம் அற்றவளாய் உள்ளே இருந்து வந்த இரண்டு பிள்ளைகளையும் மீண்டும் தன்னறைக்கு அழைத்துக்கொண்டு சென்றுவிட, சிவா கேள்விக்குறியுடன் தந்தையைப் பார்த்தான். "அவளுக்கு சரியாக அங்கிலம் பேச வராது என்று தந்தை கூறி விட்டு நகர இவன் வெளியே இருந்த கதிரையில் வெறுமையாய்த் தெரியும் வெட்டைவெளியில் எதையாவது இரசிப்பதற்கு முனைந்தான்.

அடுத்தநாள் இவன் கண் முன்னால் அந்தக் குழந்தைகளும் ரீட்டாவும் வந்தனர் தான் எனினும் அதிக நேரம் அவனுக்கு முன்னே நடமாடவில்லை. அப்பா இந்த வீட்டில் தங்கி இருப்பத னால் அவர்கள் என்னுடன் காட்டாயமாகக் கதைக்க வேண்டு மென்று இல்லையே எனத் தன் மனதை சமாதானம் செய்து கொண்டான். ரீட்டாவின் கணவன் கூடக் கண்ணில் பட வில்லை. காலையில் மேசையில் இவனுக்காகத் தேநீரும் பாண், யாம், பட்டர் போன்றனவும் கொண்டு வந்து வைத்துவிட்டு கடமைக்குச் செய்யும் செர்வன்ட் போல் அவள் போக, அவளை நிறுத்திக் கேள்வி கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை உடனே மாற்றி ஒன்றும் கூறாமல் தேநீரை எடுத்துப் பருகியபடி சிந்தனை யில் ஆழ்ந்தான்.

நாளை இந்நேரம் அவன் விமானத்தில் பறந்துகொண்டிருப் பான். அடுத்த நாளில் இருந்து அவனது வழமையானவை அவனை ஆட்கொண்டுவிடும். அப்பாவிடம் வரும்போது இருந்த மகிழ்ச்சி இப்போது இல்லை. ஆனால் அது அவரை விட்டுப் பிரிகிறேன் என்பதற்காக இல்லை என்று அவனுக்கே தெரிந்துதான் இருந்தது. அவர்மேல் அடிமனதில் கோபம் இருந்ததுதான் எனினும் அதை அவர்முன் காட்ட அவனுக்கு மனம்வரவில்லை. அது அவர் அவர்களைப் பிரிந்து அதிகநாள் இருந்ததனால் ஏற்பட்ட நிலையா அல்லது எல்லாம் தமது கைமீறிவிட்ட நிலையா என்று கூட அவனுக்குப் புரியாது மனத்தில் எழுந்து தாண்டமாடிய சஞ்சலத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு தூக்கக் கலக்கத்துடன் வந்த தந்தையைப்

பார்த்து குட் மோர்னிங் என்றபடி சிரிக்க, எனக்கு முன்னரே எழுந்துவிட்டாயா என்றபடி பல்விளக்கச் சென்றார் அவர். எங்கேயப்பா என்னை இரவு தூங்க விட்டீர்கள் என்று மனம் அப்பாவைச் சத்தமாய்க் கேள்வி கேட்டது.

***

இன்று எப்படியும் அம்மாவுடன் கதைக்க வேண்டும் என எண்ணியவன் மனதைச் சமநிலைப்படுத்தியபடி தாயின் பக்கத்துவீட்டுக்காரரின் இலக்கத்தை அழுத்தித் தாயின் வரவுக்கு வழிசெய்துவிட்டு வரும்வரை காத்திருந்தான். கிட்டத்தட்ட ஐந்து நிமிடங்களின் பின் போன் செய்தபோது பத்மாவே போனை எடுத்தார். எடுத்த உடனேயே "அப்பா எப்படியடா இருக்கிறார்" என்றுதான் கேட்டார். அப்பா நால்லா இருக்கிறார் அம்மா என்று இவன் முடிக்க முதலே "எப்ப இங்க வருகிறாராம்?" என்று ஆவலுடன் கேட்கும் தாயை கலவரப்படுத்தாது அப்பாவுக்கு இன்னும் ஐந்து ஆண்டுகள் கொன்றாக்ட் இருக்காம் அம்மா அது முடிய வருவார் என்றான்.

இன்னும் ஐந்து வருடங்களா என்று தொய்ந்த குரலுடன் கேட்கும் அம்மாவை மேலும் தந்தையுன் கதை கேட்க விடாது தங்கச்சி என்ன செய்யிறாள் என்றான். அவளுக்குத்தான் உன் மாமாமார் ஒரு கலியாணம் பொருத்தி இருக்கினம். அது சரி வந்தால் கொப்பா இல்லாமல் என்னண்டு கலியாணம் செய்யிறது என்று வினவும் அம்மாவுக்கு என்ன பதில் தருவது என்று யோசித்தவன், நான் கட்டாயம் வருவன் அம்மா. மாமா ஆட்கள் இருக்கினம் தானே. ஒரு மாதமா வது லீவு எடுத்துக்கொண்டு அப்பாவையும் வரச் சொல்லுறன் என்றுவிட்டு வேறு கதைகளைப்பேசி முடித்துத் தொலை பேசியை வைத்தவனுக்கு ஒரு வாரத்தின் முன் நடந்தது கண் முன்னே காட்சியானது.

இவனுடனேயே நிழலாகத் திரிந்த தந்தை, இன்று எதோ அலுவல் காரணமாக வெளியே சென்றுவிட, இரண்டு மணிநேரமாகத் தனியே நத்தைப்போல் தன்னறையில் இருக்கும் ரீட்டாவிடம் சிறிது தூரம் வெளியே நடந்துவிட்டு வருவதாகக்

கூறிச் சென்றவன், கன தூரம் நடந்தபின்னரே தான் எதையுமே இரசிக்காமல் சிந்தனையில் ஆழ்ந்தபடி வருவது உறைக்க, இங்கு இரசிப்பதற்குத்தான் என்ன இருக்கிறது எண்ணியபடி மீண்டும் வீடுக்குத்திரும்பி நடந்தான்.

தூரத்தில் அவன் பார்க்கும்போது தந்தையின் ஸ்கூட்டர் வாசலில் தெரிந்தது. தந்தையைக் காணும் ஆவலுடன் விரைந்து நடந்தவன், டாடி என்று அந்தச் சிறுவன் அழைப்பதும் சொறி மை சன் என்றபடி அந்த ஐந்து வயதுச் சிறுவனைத் தந்தை கட்டியணைத்துத் தூக்கிக் கொஞ்சுவதையும் கண்டவன் அதிர்ந்துபோய் அடுத்த அடிகூட எடுத்து வைக்காது அப்படியே நின்றான். திரும்பி ஓடு என மூளை கட்டளை பிறப்பிக்க அதைப் பிடிவாதமாக நிராகரித்தபடி நடந்து அப்பாவுக்கு அருகில் வந்தான். இவனைப் பார்த்து அதிர்ந்த தந்தையைச் சிரிப்புடன் பார்த்தபடி எனக்கு ஒரு குட்டித் தம்பியும் சித்தியும் இருக்கிறார் களா அப்பா? ஏன் நீங்கள் என்னிடம் முதலிலேயே சொல்ல வில்லை என்றபடி அந்தச் சிறுவனை வாங்கக் கை நீட்டிய சிவாவை அதிர்ச்சியும் திகைப்புமாகப் பார்த்தார் அப்பா.

# எப்போதும் இரவு

அமலி வேலைக்குச் சேர்ந்து இரு வாரங்களாகிவிட்டன. இப்போதுதான் மனது கொஞ்சம் இலேசாகி இருக்கிறது. இளம் பெண்களுக்கு எங்கு சென்றாலும் ஆண்களால் பிரச்சனை தானோ? என எண்ணிய மனதை அப்படி இருக்காது. யாரும் இல்லை என்னும் நினைப்பே மற்றவர்களை அத்து மீற வைக்கிறது என்று எண்ணிக்கொண்டாள்.

அவளே எதிர்பார்க்கவில்லை. இதனை விரைவில் அவளுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு நல்ல வேலையும் பாதுகாப்பா கத் தங்குவதற்கு ஒரு நல்ல வீடும் கிடைக்குமென்று. இவள் கேட்ட உடனேயே கடை முதலாளி வேலையைக் கொடுத்து தங்குமிடத்தையும் ஒழுங்குசெய்துவிட்டார். அவள் இங்கு வந்தது நல்லதாகப் போய்விட்டது என்று மனதில் நின்மதி ஏற்பட்டது.

இன்று வெள்ளனவே வந்து புதிதாக வந்து இறங்கிய உடுப்பு மூட்டையைப் பிரித்து அடுக்கியவள், அந்த நீல நிறச் சுடி தாரை எடுத்து ஆவலுடன் தடவிப் பார்த்தாள். எத்தனை வேலைப்பாடுகள். முன்பெனில் இவளுக்குப் பிடித்திருந்தால் பெற்றோர் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். இப்ப யாருமற்று எதுவுமற்று அனாதையாகியபின் வாழ்வை மூன்று நேர உணவுடன் கொண்டு செல்வதற்கே பெரும்பாடு பட

வேண்டி இருக்கு என்று எண்ணிக்கொண்டு நிமிர்ந்தவள், முதலாளி இவளையே பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டு ஒருகணம் தன்னுள்ளே கூனிக் குறுகியபடி அந்தச் சுடிதாரை மடித்து அந்தப்பக்கம் வைத்தாள்.

"என்ன அமலி உடுப்புப் பிடிச்சிருக்கே" என்று முதலாளி கேட்கமுதலே பதட்டத்துடன் இல்லை, நான் சும்மா தான் போட்டுப் பாத்தனான். இப்ப என்னட்டைக் காசும் இல்லை இதை வாங்க என்று கூறிக்கொண்டு எழுந்தாள். உமக்குப் பிடிச்சிருந்தா எடும் பிறகு காசைத் தாரும் என்றார் முதலாளியும் விடாமல். இல்லை முதலாளி. நான் காசு சேர்த்துப் பிறகு வாங் கிறன் என்று கூறிவிட்டு தொடர்ந்து அந்த இடத்தில் நிற்காது உடைகளை முன்பக்கமாகக் கொண்டு சென்றாள்.

எத்தனை பேருக்கு வேலை கொடுத்தார் அப்பா. எல் லோரும் இவள் தந்தையை ஐயா என்று மரியாதையாக அழைப் பதைக் கேட்டு இவளுக்கும் பெருமிதமாக இருக்கும். இப்போ யாரோ ஒருவரை முதலாளி என்று அழைக்க வேண்டிய கொடுமையில் தன் வாழ்வு இருப்பதை எண்ணி நெஞ்சு அடைப்பது போல் இருந்தது. இந்தப் போர் எத்தனை பேரின் வாழ்வை இப்படிப் புரட்டிப் போட்டுவிட்டது என எண்ணிய வாறே வேலையுள் புதைந்து போனாள்.

***

மாலை வேலை முடிய வீடுக்குச் செல்லும் போது அடுத்த நாள் சமைக்க சில மரக்கறிகளை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தாள். அங்கு இருக்கும் மற்றைய மூன்று பெண்களும் சேர்ந்து சமைத்துச் சாப்பிடுகின்றனர். இவளையும் சேர்ந்து தம்முடன் சாப்பிடும்படி அவர்கள் கூறினார்கள் தான். ஆனால் ஒரு வாரம் அவர்களுடன் சேர்ந்து உண்டதில் குறைவான பணமே செலுத்த வேண்டி இருந்தது. ஆனாலும் மாறிமாறி அவர்கள் சமைக்கும் போது அதில் ஒருத்தி சமைப்பது வாயிலும் வைக்க முடியாமல் இருந்தது. பெண்ணாகப் பிறந்துவிட்டு சுவையாகச் சமைக்கக் கூடத் தெரியாமல் எப்படி இருக்கமுடியும் என்று மனதுக்குள்ளே

எண்ணினாள். முகாமில் இருந்தபோது இதைவிடக் கேவலமாக உண்டாய் தானே என மனம் இவளை இடித்தது. அங்கு வேறு வழியே இருக்கவில்லை என்று சமாதானமும் சொன்னது.

இப்போது அவள் தானே தனக்குப் பிடித்ததைச் சமைத்து உண்பது நின்மதியாகவும் சந்தோசமாகவும் இருந்தது. இவள் எத்தனை செழிப்பாக வாழ்ந்த வாழ்வை எண்ணியபடியே சமை யலைச் செய்து முடித்து, சுடச்சுடச் சுவையாக உண்டு, பாத்திரங் களையும் கழுவி வைத்துவிட்டு திண்ணையில் வந்து அமர்கிறாள்.

இவள் தம்முடன் சேர்ந்து சமைக்காததில் இருவருக்கு இவளில் கோபம். அதற்கு இவள் என்ன செய்யமுடியும். மூன்றாம வள் கோகிலா மட்டும் கொஞ்சம் நாகரீகமானவள். இவளைப் புரிந்துகொண்டு வழமைபோல் இவளுடன் கதைத்தாள். அவளை நினைக்க அவள் தூரத்தில் வருவது தெரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் இவர்களுடன் தன்னை இணைத்துக்கொள்ள வேணும். ஒரே வீட்டில் இருந்துகொண்டு முகத்தைத் திருப்பி வைத்துக்கொள்வதில் மனச் சங்கடம் தான் மிஞ்சும் என எண்ணிக்கொண்டிருக்கும்போதே கோகிலா இவளருகே வந்து விட்டாள்.

வந்தவள் ஒரு சிரிப்புடன் இவளுக்கு ஒரு பையை நீட்டினாள். இவள் வாங்காமலேயே என்ன என்றாள். பிடியும். முதலாளி உம்மட்டைக் குடுக்கச் சொன்னவர் என்றபடி இவளின் கைகளில் திணித்தபடி எடுத்துப் பாரும் என்றாள். பையைத் திறந்து பார்த்தவளுக்கு ஒரு செக்கன் மகிழ்ச்சி ஏற்பட்டு அடுத்த கணமே ஒரு திடுக்கிடலும் ஏற்பட்டது. இதை ஏன் தந்து விட்டவர் என்று வாய் கோகிலாவைக் கேட்டாலும் இவளுக்கே காரணம் தெரிந்துதான் இருந்தது.

காலையில் அவள் ஆசையோடு பார்த்த சுடிதாரை முத லாளி கோகிலாவிடம் குடுத்துவிட்டிருந்தார். கடைசி மூவாயிரம் ரூபாயாவது வரும் அது. எனக்கேன் அவர் தர வேணும் என்று கோகிலாவைக் கோபத்தோடு கேட்டாள் அமலி. "அமலி கோபப்படாதையும். நீர் முதலாளியின் ஆசைக்குச் சம்மதித்தால்

உமக்கு வீடும் வேலையும் நிரந்தரம். நாங்கள் மூண்டுபேரும் கூட அப்பிடித்தான். என்ன செய்யிறது? ஆமியிட்டை இருந்து வந்தனாங்கள் என்ட உடனேயே எல்லா நாயளும் எங்களை படுக்கையில பாக்கத்தான் ஆசைப்படுறாங் கள். நானும் எத்தினை கடையா ஏறி இறங்கி பசிக்கொடுமை தாங்காமல் சரி பாதுகாப்பான ஒரு இடமும் சாப்பாடும் வேலை யும் இருக்கு என்று வேற வழியில்லாமல் சம்மதிச்சன். ஆரம்பத் தில கொடுமையாத்தான் இருந்தது. இப்ப பழகிட்டுது. ஏன் நீர் கூட ஆமியிட்டை அகப்பட்டுத்தானே இருப்பீர் என்று கோகிலா சாதாரணமாகக் கூற, நான் ஆமியிட்டை அகப்படேல்லை என்று இவள் கத்திய கத்தில் கோகிலா திடுக்கிட்டாள்.

எல்லாரும் உப்பிடித்தான் சொல்லுறது என்று நக்கலாகச் சிரித்தபடி கோகிலா எழுந்து நடக்க, இவள் கோபத்துடன் அந்தச் சுடிதாரை சுழற்றி எறிந்தாள். உள்ளே சென்று தன் பொருட்களை எடுத்தவள் வாசல்வரை சென்றுவிட்டு மீண்டும் வந்து எறிந்த சுடிதாரையும் எடுத்துக்கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு சுவரில் சாய்ந்து அழத் தொடங்கினாள். காலை விடியட்டும் இந்த நேரம் கடையில் முதலாளியும் இருக்கமாட்டார். ஐயோ நானும் செத்திருந்தால் நின்மதியாய் இருந்திருக்குமே. அதுக்குக் கூடத் துணிவு இல்லையே என்று அழுது முடித்து தீர்மானமும் எடுத்து பாயை விரித்து படுத்தபடி அடுத்த நாள் செய்ய வேண்டியதை வரிசைப்படுத்திக் கொண்டாள்.

***

காலை எழுந்து பல்லை மட்டும் விளக்கிவிட்டு அமலி கிளம்பத் தயார் ஆனாள். கோகிலாவிடமாவது சொல்லிவிட்டுப் போவோமா என எண்ணியவள் பின்னர் அந்த நினைப்பைக் கைவிட்டு தன் பொருட்களையும் சுடிதாரையும் எடுத்துக் கொண்டு கடைக்குக் கிளம்பினாள்.

இவளைப் பார்த்ததும் முதலாளியின் முகத்தில் ஒரு ஒரு சந்தோசச் சிரிப்புத் தோன்றியது. இவளுக்கு வந்த கோபத்தில் சுடிதாரை எடுத்து அவர் முகத்தில் வீசி எறியவேண்டும் போல்

இருந்த நினைப்பை உடனே அடக்கிக் கொண்டாள். சுடிதார் பையை அவர் முன் வைத்துவிட்டு எதுவும் கூறாமல் திரும்பி நடப்பவளை "நில்லும் அமலி.நான் சொல்லுறதைக் கேள் பிள்ளை" என்று அவர் கூறுவது தேய்ந்துகொண்டே வர, சிறிது நேரத்தில் பேருந்து நிலையத்தை அடைத்து வன்னி போகும் பேருந்தில் ஏறி அமர்ந்தாள். சிறிது நேரத்தில் பேருந்து கிளம்ப இவள் மனதும் முன்னர் தான் வாழ்ந்த வாழ்வை எண்ணி ஊர்வலம் போனது.

***

மரங்கள் அடர்ந்த, வீடுகள் அற்ற அந்தப் பரந்த பிர தேசத்தில் வானத்து நட்சத்திரம் போல் தெரியும் வீடுகளில் ஒன்றே அமலியின் வீடும். பாலை மரங்களும் நாவல் மரங்களும் ஆங்காங்கே இருந்தாலும் சுற்றவரக் கட்டப்பட்டிருந்த மதில்கள் எல்லாம் உடைந்தோ அல்லது யாராலோ உடைத்து கற்கள் எடுக் கப்பட்டு வீட்டின் பாதுகாப்பையும் அழகையும் குறைத்தது.

வீட்டின் முன்னால் நின்ற மல்லிகைப் பந்தலும் வெய்யிலில் நீரின்றி வாடி இலைகள் கருகியபடி பந்தலில் காய்ந்து கிடந்தன. குரோட்டன்கள் ஒன்றிரண்டு தப்பிப் பிளைத்திருந்தனதான் என்றாலும் கவனிப்பாரற்றுக் கண்டபடி வளர்ந்திருந்தன. ஒற்றை மாமரமும் பின் வளவில் இருக்கும் தென்னைகளும் அவள் வீட்டதுதான் என்றாலும் உயிருடன் நடமாடிய ஐந்து பேர் இல்லாத வீடு எப்போதும் அவர்களை நினைவுபடுத்த பகலில் இருக்கும் கொஞ்சநஞ்ச நின்மதியும் இரவில் தொலைய, என்ன நடக்குமோ எது நடக்குமோ என உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்வதே நிர்ப்பந்தமாகிவிட்டது. கணவன் உயிருடன் இருந்த போது எத்தனை மகிழ்வுடன் இரவில் வானில் தெரியும் நட்சத் திரங்களையும் நிலவையும் கணவன் முதுகில் சாய்ந்தபடி பார்த்து மகிழ்ந்திருப்பாள். இன்று நினைக்க பெருமூச்சு மட்டுமே எஞ்சுகிறது.

தூரத்தில் வாகன ஓசை கேட்க வழமைபோல் இதயத் துடிப்புப் பன்மடங்காக வேறு வழியின்றி மனதையும் உடலை

யும் கல்லாக்கியபடி எதுவும் செய்ய முடியாதபடி சோர்வுடன் இருக்கமட்டுமே அவளால் முடிகிறது.

யுத்தம் முடிவுக்கு வந்தபின் மனிக் பாமில் இருந்த போதும் சரி பின்னர் வெளியே வந்தபோதும் கூட அரவணைத்து ஆறுதல் கூற யாருமற்று அனாதையாக நின்றது இப்போதும் கண்ணுக்குள் நிற்கிறது. பெற்றவரும் கணவனும் கூடிப்பிறந்தவரும் குண்டுகள் பட்டுச் சிதிலமாகிப் போக, ஏனோ இவளை மட்டும் சாவு தள்ளியே வைத்த கொடுமை இவளைப்போல் பலருக்கு நேர்ந்ததில், உடல் உறுப்புக்கள் சிதையாது என்னைக் கடவுள் காத்தாரே என்று தான் அப்போது எண்ணத் தோன்றியது.

தொடர்ச்சியாக ஏற்பட்ட மரணங்கள் மனதில் உணர்வு களைத் துடைத்ததில் சொந்தம் என்று சொல்ல யாரும் அற்றவர் களாய் எஞ்சிப் போனவர்களுள் ஒருத்தியாகி வாழ்வை எதிர் நோக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது முன் வினைப் பயனோ என எண்ணி மறுகவே முடிந்தது அமலியால்.

பட்டப்படிப்புப் படித்திருந்தாலாவது என் காலில நிற்க முடிந்திருக்கும். வளமான வயல்களே இவர்களின் சொத்தாக இருந்து இவர்களை தலை நிமிர்ந்து வாழவைத்தது. எல்லாம் இராணுவம் சுவீகரித்துக்கொன்டத்தில் இந்த வீடு மட்டும் தான் அதிட்டவசமாக உடையாமல் தப்பி நின்றது.

அந்த அந்துவானக் காட்டில் அங்கொன்றும் இங்கொன்று மான வீடுகளுடன் வந்து வசிப்பதற்கு அவளுக்கும் யோசனையா கத்தான் இருந்தது. அகதி முகாமில் இருந்தபோது அறிமுக மானவர்கள் கூட அதைவிட்டு வெளியே வந்தபின் எங்கே இவள் தம்முடன் ஒட்டிக்கொள்வாளோ என்னும் அச்சத்தில் தெரியாதவர்போல் நடந்துகொண்டது மனதை வருத்தியது.

உறவுகளை இழந்தவர்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பார்கள் என்று எண்ணினால் சொந்தங்களை இழந்த கையோடு மனதையும் ஒட்டுமொத்தமாய்த் துடைத்து விட்டார் களோ என எண்ணும்படி நடந்து கொள்ள எப்படித்தான் இவர் களால் முடிகிறது என்னும் எண்ணத்தினூடே, பாவம்

அவர்களும்தான் என்ன செய்வார்கள். எல்லாவற்றையும் இழந்து நிற்பவர்களுக்கு ஒவ்வொரு சதமும் பெறுமதியானதுதான் என மனம் தனக்குத்தானே சமாதானமும் கூறியது.

தொண்டு நிறுவனங்களில் பதிந்து உதவிகளைப் பெற்று கொண்டாலும் பிச்சை எடுப்பதுபோல் ஒவ்வொரு தடவையும் உணர்வதை இவளால் தடுக்கவே முடியவில்லை. ஏதும் வேலை செய்து பிழைத்துக் கொள்வோம் என்றாலும் இவளுக்கு யாரும் இல்லை என்று தெரிந்தவுடன் பல ஆண்களுக்கு இவளை படுக்கையில் பகிர்ந்துகொள்ளும் ஆசைதான் வந்தது.

இரவில் சிம்னி விளக்கின் துணையோடு கதவைத் தட்டும் ஓநாய்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக இரவிர வாக விளக்கை எரியவிட்டாள். மின் விளக்குகள் மின்சாரம் இன்றி எரியாதுவிட்டு பல மாதங்களாகிவிட்டன. நிவாரணப் பொருட்கள் பெற்றுக்கொள்ளக் கடைக்கு வரும்போதெல்லாம் கடைக்காரக் காத்திகேசின் இளிக்கும் பார்வையும், இவளுக்கு விளக்கெரிக்க அதிக மண்ணெண்ணெய் தேவை என்பதால் வேறு பொருட்களுக்குப் பதிலா மண்ணெண்ணையைக் கூடத் தரச் சொல்லிக் கேட்டதுக்கு, “நீ ஓமெண்டு சொல்லு நான் கரண்டே எடுத்துத் தாறன்” எண்டவனும், பொருட்களைத் தரும்போது வேண்டுமென்றே கையைத் தடவிக்கொண்டே தருவதும், இன்னொருத்தன் துணிவாக இரவைக்கு வரட்டோ என்று கேட்க இவள் கோபத்தில் துப்பிவிட “ஓமடி எனக்குத் துப்புவாய். ஆமிக்காரங்களோடை மட்டும்தான் படுப்பியோ” என்று கேவலமாய்க் கேட்டதை நினைக்க இப்பவும் கோபம் வருகிறது.

இந்த ஆண்கள் இத்தனை நாள் தம் முகங்களை எங்கே மறைத்து வைத்திருந்தார்கள்? எல்லா ஆண்களும் இப்படித் தானா? யாருக்காகப் பயந்து இத்தனை நாள் இருந்தார்கள்?தம் குடும்பத்துக்கு இழப்புக்கள் ஏற்படாததனால் மற்றவர் இழப்பு இவர்களுக்குப் புரியவில்லையா? அநாதரவான நிலை எனில் பெண் எதற்கும் உடன்படுவாள் என்று எப்படி எண்ணத் தோன்றியது என்றெல்லாம் தனக்குள் குமைந்ததில் இவள்

எதுவுமற்று நிற்கத்தான் முடிந்தது.

இப்பிடியான விஷமங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்காது எண்டு நம்பி, யாழ்ப்பாணப் பக்கம் போனால் வேலை வாய்ப்புக் கள் நிறைய என்று யாரோ கூறியதைக் கேட்டு இங்கு வந்தால் இங்கு நாகரீகமாக வலை விரிப்பு.

ஒட்ட முடியாத மனிதர்களுடன் இருப்பதை விட பிறந்து வளர்ந்த இடத்தில் எத்துன்பமும் பட்டுக்கொண்டாவது இருப் பது மேல் என்று எண்ணியபடியே வெளியே பராக்குப் பார்த் தாலும், பெண்ணாகப் பிறந்துவிட்டாலே அவள் ஆண் சார்ந்து இருந்தாலன்றி அவளுக்கு தகுந்த பாதுகாப்பு இருந்த தில்லை. வன்னியில் வாழ்ந்த காலத்தில் எத்தனை சுதந்திரத்தோடு வாழ்ந் தோம். புலிகள் என்னும் மந்திரச் சொல்லுக்குத்தான் எத்தனை வலிமை இருந்தது. இனி வரமுடியாத காலம் என்று எண்ணிப் பெருமூச்சு ஒன்றை விடத்தான் அவளுக்கு முடிந்தது.

ரோகித வெளியே பாயில் படுத்திருந்தான். மற்றையவர்கள் இன்னும் தண்ணியடித்துக்கொண்டும் காட்ஸ் விளையாடிக் கொண்டும் இருக்க அவனுக்கு அதிலெல்லாம் இப்பொழுது ஆர்வம் குறைந்துவிட்டது. போர் முடிந்தபின் விறுவிறுப்புக் குறைந்துவிட்டது. திரும்பி மொறட்டுவவுக்கு போகவும் விடுறாங்களும் இல்லை என்று யோசித்தபடி இருக்க, குணசிங்க மூலை வீட்டைப்பற்றிக் கதைத்தது கேட்டது. உடனே இவனுக்கு அந்த அழகிய பெண் நினைவுக்கு வந்தாள். இப்ப தமிழ்ப் பெண்களுடன் அதிகம் வைத்துகொள்ள வேண்டாம் என்று ஓடர் வந்தபின் இரு மாதங்களாக எல்லோரும் அடங்கி ஒடுங்கித்தான் இருக்கிறார்கள். ஆனாலும் குணசிங்க ஒன்றைத் தொடங்கினால் முடிக்காமல் விடமாட்டான்.

இவனை அறியாமல் ஒரு பதைப்பு எழுந்தது. அந்தப் பெண்ணின் சோகமான முகம் அவனது மனத்தில் பதிந்து விட்டது.

உடனே செருப்பை மாட்டிக்கொண்டு குறுக்குப் பாதை யால் ஓடத் தொடங்கினான் ரோகித. சாதாரணமாக யாருக்கும்

சொல்லாமல் செல்வது தவறு. அதற்குத் தண்டனையும் உண்டு. ஆனாலும் இந்த நேரத்தில் அதை எல்லாம் யோசிக்கும் மனநிலையில் அவன் இல்லை. இவர்கள் இந்த இடத்துக்குத் தங்கள் இருப்பை மாற்றி இப்பொழுது இரண்டு வாரங்கள்தான். உடைந்தும் உடையாமலும் இடந்த வீடுகள் பலத்தைச் சுற்றி கம்பிவேலி அடைத்து, உள்ளே அகப்பட்ட சிலரையும் வெருட்டிக் கலைத்து, அது இனி தமக்குச் சொந்தமான இடம் என்று ராணுவம் பலகையில் எழுதியும் நட்டிருந்ததில் இப்ப இவர்கள் இடமாகி இருந்தது.

அவர்கள் வரமுதல் போய்விடவேண்டும் என்னும் வேகத்தில் அவன் ஓட இரண்டு மூன்று நாய்கள் குரைத்தன. கையில் எதுவும் இல்லை. பார்ப்போம் என்னால் முடிந்ததைச் செய்து அவளைக் காப்பாத்தலாம் என்று எண்ணியபடியே ஓடினான். எத்தனை பெண்களை இவனும் சேர்ந்து கெடுத்து, எத்தனை விதமாகச் சித்திரவதை செய்தும் தூக்கிப் போட்டிருக்கிறார்கள். ஆனாலும் இவள் மேல் ஏன் தனக்கு இப்படி ஒரு எண்ணம் ஏற்பட்டது என்று எண்ணியபடியே அவளின் வீட்டை அண்மிக்க தூரத்தில் ஜீப்பின் வெளிச்சம் தெரிந்தது. இவன் அவசரமாக நெருங்கிக் கதவைத் தட்டினான். வீட்டுக்குள் இருந்து எந்தச் சத்தமும் இல்லை. ஜீப் நெருங்கி வருவது தெரிய, வீட்டின் பின் பக்கமாகச் சென்று பார்ப்பதென முடிவெடுத்தான்.

***

இவள் இறங்கும் இடம் வந்ததும் மிகுந்த மனச்சோர்வுடன் போரில் தோற்ற ஒருவன் நாடு திரும்புவது போன்ற மனநிலையில் பேருந்தை விட்டு இறங்கி வீடு நோக்கி நடந்தாள். இவளின் வீடு இருந்த பகுதியில் வீடுகள் பல இடிந்துபோய்த்தான் இருந்தன. எனினும் இவளதைப் போல் தப்பியிருந்ததில் அந்தக் குடும்பங்களில் எஞ்சியிருந்தவர்களும் சிலதில் அந்நியர்களும் கூட குடியேறி இருந்தனர். வளவில் நின்ற தென்னை மரங்கள் இவளுக்கு வருவாயை ஏற்படுத்தித் தந்தாலும் கூட அத்தனை பேர் கூடி வாழ்ந்த வீட்டில் தனிமையில் இரவின் பயமுறுத்தல்களில்

அரைத்தூக்கத்தோடும் காத்தூக்கத்துடனும் நாட்கள் நகர்கை யில் இவள் வாழ்வைப் பிரட்டிப் போடும் சம்பவம் நடந்தது.

ஒருநாள் இரவு நல்ல தூக்கத்தில் இருந்தவள் கதவைத் தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தாள். இப்படி அடிக் கடி நடப்பதுதான். யாராவது வந்து கதவைத் தட்டுவதும் இவள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மூச்சும் விட மறந்து உள்ள தெய்வங்களை எல்லாம் உதவிகேட்டு நேர்த்தி வைப்பதும், தெய்வங்களும் இவளில் இரக்கம் கொண்டோ அல்லது இவள் பொங்கிப் படைப்பவற்றிற்காகவோ இவளுக்கு ஒன்றும் நேராமல் தடுத்தனதான். ஆனாலும் அவர்கள் இன்று தொடர்ந்து தட்டுவதைப் பார்த்தால் எல்லாமே கைவிட்டதை உணர்ந்தவள் என்ன செய்வது எங்கே ஒளிவது, எப்படித் தன்னைக் காப்பாற்று வது எனத் தெரியாது கை கால்கள் மட்டுமன்றி மொத்த உடலும் பயத்தில் நடுங்க குசினிக்குள் ஓடிக் கதவின் பின்னால் இருந்தவள், அவர்கள் கதவை இடித்த இடியில் பின் பக்கக் கதவைத் திறந்து வெளியில் ஓட எத்தனிக்கையில் எதனுடனோ மோதுண்டு நிலை தடுமாறிக் கீழே விழுந்தாள்.

விழுந்த வேகத்திலும் ஓடித் தப்புவதற்கு எழுந்தவளை அவன் மறித்தான். நீ தப்ப ஏலாது. நிறையப்பேர். நான் தான் காப்பாத்தலாம் என்றபடி அவளின் கைகளை இழுத்துக்கொண்டு வீட்டுக்குள்ச் சென்றான். இவள் அவனிடமிருந்து கைகளை விடுவிப்பதற்காக இழுத்தபடி இருந்தாள். பேசாமல் இரு என்று உறுக்குவது போல் கூறிவிட்டு கதவுகளைத் திறந்தான்.

இன்றுடன் தன் வாழ்வு முடியப்போகிறது என்னும் அசையாத நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டிருந்தது. வெளியே நிற்பவர்களை நடுக்கத்தோடு பார்த்தாள். பசியோடிருக்கும் ஓநாய்கள் என்பது புரிய கால்கள் எல்லாம் தோய்ந்து மயக்கம் ஏற்பட, சுவருடன் சாய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண் டாள். அவன் சிங்களத்தில் அவர்களுடன் எதோ கதைப்பது கேட்டது. கொஞ்ச நேரத்தில் அவர்களின் காலடி ஓசையும் அவர்கள் தமக்குத்தானே சிங்களத்தில் கதைத்துக் கொண்டு

திரும்பிப் போவதும் புரிய, கதவைப் பூட்டிக்கொண்டு அவன் வந்தான்.

நான் கும்புடுற கடவுள் தான் அவனை அங்கு அனுப்பினது என்று அவர்களுக்கு நன்றி கூற, அவன் இவள் முன்னால் வந்து நின்றான். இங்கபார் நான் உன்னை அடிக்கடி காணுறனான். இண்டைக்கு அவங்கள் உன் வீட்டுக்கு வருவதைப்பத்திக் கதைச்சதைக் கேட்டு நான் பின்பக்கமா வந்தனான். நீ தனிய இருக்கிறது எண்டு எங்கள் ஆளுகளுக்குத் தெரியும். அதாலதான் நீ என்னோட ஆள் என்று சொன்னன். அவங்கள் நம்பிப் போட்டாங்க. இனிமேல் வர மாட்டாங்க என்றபடி அவள் அருகே அவனும் அமர்ந்தான்.

தூரத்தில் வாகன ஓசை கேட்க வழமைபோல் இதயத் துடிப்புப் பன்மடங்காக வேறு வழியின்றி மனதையும் உடலை யும் கல்லாக்கியபடி எதுவும் செய்ய முடியாதபடி சோர்வுடன் இருக்கமட்டுமே அவளால் முடிகிறது. வாகனத்தின் சத்தம் மெல்லமெல்ல இவள் வீட்டு வாசலில் வந்து நின்றதும் யன்னலால் எட்டிப் பார்த்துவிட்டு ரோகிதவுக்காகக் கதவைத் திறந்தாள் அமலி.

# பெண் மனது

தேவகிக்குத் தன்னை நினைக்கவே ஒருபுறம் சிரிப்பாகவும் மறுபுறம் பச்சாதாபத்துடன் கூடிய அழுகையும் வந்தது. வாற மாதம் வந்தால் இவ்வுலகில் எண்பது ஆண்டுகளைக் கழித்து விட்ட நிறைவு. இன்னும் எத்தனை நாட்களோ மாதங்களோ வருடங்களோ யாரறிவார் என்னும் எண்ணம் தோன்றினாலும் நான் இன்னும் கொஞ்சக் காலம் இருப்பன். அவ்வளவு லேசில போயிடமாட்டன் என்னும் ஒரு நம்பிக்கையும் ஏற்பட்டு ஏனோதெரியவில்லை அதனூடே சிரிப்பும் வந்தது.

சிறிய வயதில் எல்லாம் தன் நாட்களை நினைத்துப் பார்த் தால் துன்பங்களும், நிறைவேறாத ஆசைகளும், போராட்டங் களுமாக வாழ்வின் இளமைக்காலம் கழிந்தது. பின்னர் வந்த காலங்களில் தன் முயற்சியில் மனம் சோராது போராடியிரா விடில் இன்று இப்படி ஒரு நிலையினை அடையக் கூடியதாக இருந்திருக்குமா என்று மனம் பெருமையும் கொண்டது.

தான் இல்லாவிட்டால் தன் குடும்பம் மாத்திரமல்ல தன் கணவர் கூட இந்த நிலையை அடைந்திருப்பாரா என்பது சந்தேகம்தான். ஆனால் அந்த மனிசனுக்குத்தான் அது விளங்கு தில்லையே என மனதில் ஒரு ஆற்றாமையும் வந்து சேர கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

என் கணவருக்கு நான் என்ன குறை விட்டேன். என்னைத்

தேய்த்து, என் முகம் வெளியே காட்டாது கணவரை இத்தனை தூரம் பேரும் புகழும் அடைய வைத்தும் எந்தவித நன்றியும் இன்றி ஆண் என்னும் மமதையில் என்னவெல்லாம் பேசி விட்டார்.

சோமருக்கும் கொஞ்ச வயதில்லை. இன்னும் ஆறு மாதங் களில் எண்பத்தைந்தாகிவிடும். வயது போகப் போக பொறுமை யும் அமைதியும் வந்துவிடுமென இவள் எண்ணிய தற்கு மாறாக அவருக்கு சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் ஏற்படும் கோபங் களும் அதன் காரணமாக இவளை நோக்கி வீசப் படும் வார்த்தை களும் வரவரத் தாங்கமுடியாது போய்விடுகிறது தேவகிக்கு.

எத்தனை தரன் சொன்னாலும் கேட்காது ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் அவளை ஏவுவதும் உடனே செய்யாவிட்டால் வன்சொற்களால் வசைபாடுவதும் அவள் எதோ தனக்கு இட்ட பணிகளைச் செய்யவே வேலைக்கு அமர்த்தப்பட்டவள் போல் அவளை நடாத்துவதும் அவளால் தாங்கவே முடிவதில்லை.

இப்பிடிப் பாக்கப்போனால் வெள்ளைக்காரர் மாதிரி அவையவையே தன் தன் வேலை பார்த்திருந்தால் இந்த வயசு போன காலத்தில எனக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்காது என எண்ணினாள். எங்கட கலாச்சாரம் பண்பாடு என்று இப்ப நான் எல்லோ அவதிப்படுறன் என்று தனக்குள்ளேயே நினைத்த வளுக்குச் சிரிப்பு வந்தது.

அவள் சோமரைத் திருமணம் செய்து அறுபது ஆண்டுகள் ஓடிவிட்டன. இத்தனை ஆண்டுகள் கழித்து வெளிநாட்டில் வாழ்வதனால் இப்படிக்கூட எனக்கு எண்ணத் தோன்றுகிறதே. அப்ப எங்கட இளம் பிள்ளையளைக் குற்றம் சொல்லி என்ன என்றும் மனம் இவளைச் சாடியது.

பிள்ளைகள் தம்முடன் வந்து இருக்குமாறு எவ்வளவோ வற்புறுத்தியும் ஏனோ இவளுக்கு அவர்களைச் சார்ந்து இருப்ப தற்கு விருப்பம் இல்லை. இவளுக்கு மட்டுமல்ல சோமருக்கும் அதே கொள்கைதான். பென்சன் காசு வருது. நாங்கள் எங்கட

பாட்டில இருக்கிறதுக்கு எதுக்கு மற்றவைக்குக் கரைச்சல் கொடுப்பான் என்று எண்ணியதும் ஒரு காரணம்தான்.

ஆனால் இப்ப கொஞ்சக் காலமாய் என்ன சமைக்கிறாய், ஆக ரண்டு கறிதான் வச்சனியோ, எனக்கு குளிசை போடவேணும் கெதியா சாப்பாட்டைத் தா, மத்தியானம் கட்டாயம் மூண்டு கறியாவது இருக்கவேணும் எண்டெல்லாம் சோமர் செய்யும் அட்டகாசத்துக்கு அளவே இல்லாமல் போனது. நான் மட்டும் என்ன குமரியே. எனக்கும் ஆரும் சமைச்சுத் தந்தால் சும்மா இருந்து சாப்பிட ஆசைதானே என எண்ணியவளுக்கு மன தெல்லாம் எதுவோ அடைத்தாற்போல் இருந்தது.

நேற்று சோமரின் பென்சன் கடிதம் ஒன்றைக் காணவில்லை என்று, இவள்தான் எங்கோ வைத்துவிட்டாள் என அவர் போட்ட கூச்சலில் இவளுக்கும் கோபம் வந்துவிட்டது. "நான் ஒண்டும் உங்களுக்கு வேலைக்காரி இல்லை. மரியாதையாக் கதையுங்கோ" எண்டு இவளும் என்றுமில்லாதவாறு குரலை உயரத்தில் கத்த சோமருக்கு வந்த கண்மூடித்தனமான கோவத் தில் "உன்னைச் சாக்காட்டிப் போடுவனடி" என்று இவள் கழுத்தில் கையை வைத்துவிட்டார்.

ஒரு செக்கன் இவளுக்கு மூச்சே வராமல் கழுத்தை அங்கும் இங்கும் ஆட்டி அவரிடமிருந்து விடுவித்துக்கொண்டு தன்னை அசுவாசப்படுத்தவே பெரும்பாடாகப் போய்விட்டது. இந்தக் கிழவனுக்கு இத்தனை பலமா என்று ஆச்சரியமும் எழுந்தது. தன் அறைக்குள் போய் சின்னப்பிள்ளை போல் விக்கிவிக்கி அழுதபின் தான் அவள்மனம் ஆறுதல் கொண்டது. எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தால் என்ன ஆண்களின் அடக்கும் புத்தியை எண்ணி அவர்பால் ஒருவித வெறுப்பும் வந்தது.

நேற்றுமுதல் இன்றுவரை அவருடன் பேசவுமில்லை. அவருக்கு எதுவும் செய்யவில்லை. மனதில் ஒரு கோபத்தோடு "இனி நான் உவருக்கு ஒண்டும் செய்யிறேல்ல. தனிய எல்லாம் செய்தால்த்தான் விளங்கும்" என்று மனதுள் கறுவியபடி காலை யில் எழுந்து தனக்கு மட்டும் தேநீர் போட்டு பாணுக்கு சலாமி

வச்சு தனியச் சாப்பிட்டு, நீர் இல்லா விட்டாலும் என்னால் எல்லாம் செய்ய முடியும் என்று காட்டுவதாய் அன்று இரண்டு மணிநேரம் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருப்பதாய் சோமருக்குக் காட்டுவதாக எண்ணிக் காலம் கழித்தாள் தேவகி. அரைவாசி நேரம் என்ன பார்த்தோம் என்று அவள் மண்டைக் குள் ஏறவேயில்லை. தொடர்ந்து இத்தனை நேரம் அதைப் பார்த்துக்கொண்டே இருந்ததால் தலைவலி ஏற்பட எழுந்து சென்று இழுத்துப் போர்த்தபடி படுத்தவள் தூங்கிவிட்டாள்.

மதியம் இரண்டுமணியாகியும் அவள் எழும்பவில்லை. அதன்பின் அவளுக்கு முழிப்பு வந்தது தான் எனினும் வேண்டு மென்றே படுத்தே கிடந்தாள். அவளுக்குக் காலமை சாப்பிட்ட சாப்பாடு செமிக்கவும் இல்லை. சோமர் இரண்டு மூண்டு தடவை அவளுக்குக் கிட்டவந்து எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போவதை உணர்ந்து மனதில் எதோ பிசைவதுபோல் இருந்தா லும் இண்டைக்கு நான் எதுவும் செய்யவே கூடாது என்று மனத்தைக் கல்லாக்கியபடி கிடந்தாள். அவள் அவரை நிமிர்ந்தும் பார்க்கவுமில்லை.

ஒரு பத்து நிமிடம் கழிஞ்சிருக்கும். "என்னப்பா இண்டைக்கு ஒண்டும் சமைக்கேல்லையே. பசிக்குதப்பா" என்று வெட்கம் கெட்டு சோமர் இவள்முன் வந்து நின்று கேட்கவும், இரண்டு நாட்களாக இருந்த கோபம் வெறுப்பு எல்லாம் எங்கோ ஓடிப் போக இன்னும் நீங்கள் சாப்பிடேல்லையே என்று எதுவும் நடக்காததுபோல் எழுந்து சமையலறைக்குச் செல்கிறாள் தேவகி.

# முடிவாகிப்போனது

அவள் மனம் போலவே எங்கும் இருண்டுபோய் அடை மழை பெய்துகொண்டிருந்தது. பஸ்ஸில் ஓர இருக்கையில் அமர்ந்திருந்தபடியால் பூட்டிய கண்ணாடி யன்னல்களின் ஊடே தெறிக்கும்மழை நீர் அவள் முகத்திலும் இடைக்கிடை விழுந்தது. ஆனாலும் அதைத் துடைக்க வேண்டும் என்னும் நினைப்பே அற்று மழை நீரில் இருண்ட வானத்தைப் பார்ப்பதற்கான முயற்சியில் தோற்றுக்கொண்டிருந்தாள் சிந்தி.

ஏன் தான் இந்த உலகில் பிறந்தேனோ என்னும் சலிப்பு மனதில் எழ, எனக்கு வேறு வழியே இல்லை என்னும் தீர்மானத்துக்கு வருவதைத் தவிர வேறு மாற்று வழி தெரியாது, பெருமூச்சு ஒன்றே வெளிவந்து அவளை அசுவாசப்படுத்தியது.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான் எனில் ஒன்றை மட்டும் இறுகப் பற்றியபடி ஏன் வாழ்வை நாம் எதிர் கொள்ள வேண்டும். அந்த ஒன்றே யாதுமாகி, எதையும் அலட்சியம் செய்யவைத்து, மற்றவரின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் அலட்சியப்படுத்தி, மற்றவர் ஏன் அவளின் உற்ற நண்பி சுசியின் வார்த்தைகள் கூட அவள் செவிகளில் ஏறாது எல்லாமே வீணாகிப்போய் இப்ப தீர்மானம் எடுக்கும் வரை வந்துவிட்டது.

சுசியைப் போல் ஒரு நண்பி கிடைக்க மாட்டாள். கிட்டத் தட்ட ஒவ்வொரு நாளுமே இவளை மீட்பதற்காக அவளின்

போராட்டம் தோல்விகண்ட பின்னும் தன்மேல் வெறுப்பு வராது தொடர்ந்தும் அவளால் எப்படி அன்பு செலுத்த முடி கிறது என எண்ணியவள் ஐந்து ஆண்டுகளாகத் தன் கூடவே இருக்கும் சுசியை விட்டுவிட்டு எப்படிப் போகப் போகிறேன். தான் இல்லாமல் அவள் எப்படித் தவித்துப்போவாள் என எண்ணவே கண்கள் நிரம்பி கன்னம் நனைத்தது.

இந்த ஐந்து ஆண்டுகளில் சுசி இவளை இதுபோல் திட்டியதுமில்லை. இவளைக் குறை சொன்னதுமில்லை. சுசி சரியான சுத்தம். படுக்கை, மேசை,கதிரை, சமையலறை, குளிய லறை எல்லாமே அவள் கை பட்டு பளிச்சென்று இருக்க, இவள் படுக்கை விரிப்பைக் கூட உதறிப்போடப் பஞ்சிப்படுவாள். இருவரும் மாறிமாறிச் சமையல் செய்வது என்று முடிவாகித்தான் ஒரு அறையில் இருப்பதற்கு முடிவெடுதாலும் இவளின் சோம்பல் காலைத் தூக்கத்தை இழக்க விடவில்லை. அரைவாசி நாட்கள் சிந்தி சமைக்க வேண்டிய சமையலைச் சுசியே சமைத்து விட்டுப் போய் விடுவாள். ஒருநாள் கூட இன்று உன் முறை. நீ சமைக்க வில்லை என்று சொல்லியது இல்லை. ஆனால் இவளின் மனம் குறுகுறுக்க சுசிக்குப் பிடித்த எதையாவது வாங்கிவந்து கொடுத்து சுசி சமாதானம் அடைகிறாளோ இல்லையோ இவள் சமாதான மாகிவிடுவாள்.

தொடரும் இவள் நினைவுகளுக்குத் தடை போடுவது போல பேருந்து குலுங்கலோடு நிற்க, நினைவு களைந்து இறங்கும் இடம் வந்தது நினைவில் உறைக்க ஒரு பதைப்புடன் இறங்கினாள்.

***

தூரத்தில் குமார் இவளுக்காகக் காத்திருப்பது தெரிந்தது. அவனைக் கண்டதும் மனம் அவளை அறியாமலே மகிழ்ச்சியில் திளைப்பதை அவளால் உணரக்கூடியதாக இருக்க ஓட்டமும் நடையுமாக அவனுக்கருகிற் சென்று அவன் முகத்தைக் காதல் நிரம்பி வழியப் பார்த்தாள்.

அவன் முகம் இருண்டுபோய்க் கிடந்தது. அதைப்பார்த்த சிந்திக்கு நெஞ்சில் பயம் பரவ, "என்ன குமார் பிரச்சனை" என்று

கேட்டாள். அவள் கேட்டது அவளுக்கே கேட்காதது போல் மெலிந்துபோய் வந்தது குரல். அவனுக்கு அவள்மேல் உள்ள காதல் பற்றி எந்தச் சந்தேகமும் அவளுக்கு இல்லை. தன்னை விட அவன் தான் இவளில் பயித்தியமாகிவிட்டான் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை.

எல்லாருக்கும் விஷயம் தெரிஞ்சு போச்சு சிந்தி என்றான் சோர்ந்த குரலில். என்ன நடந்தது என்றாள் மீண்டும் இவள். "யார் சொன்னார்களோ தெரியவில்லை. என் மாமாக்கு யாரோ சொன்னார்கள் என்று நேற்று எல்லோரும் வீட்டுக்கு வந்திட்டினை. நான் ஒண்டையும் மறுக்கேல்லை. செய்தது செய்ததாவே இருக்கட்டும். இனி உன்னை விட்டுவிடச் சொன்னார்கள். என்னால் முடியாது என்றுவிட்டேன். பாவம் சியாமி தான் அழுதுகொண்டே இருந்தவள். அவளை நினைக்கத் தான் பாவமாக இருக்கு என்றுவிட்டு நிறுத்தினான்.

அவன் சிந்தியாவைச் சுருக்கிச் சிந்தி என்று அழைக்கும் போதில் உலகமே தன் காலின் கீழானதாய் இவள் உணர்வாள். இன்னொருத்தியின் கணவன் என்பதெல்லாம் அவளுக்கு உறைக்காது போய் எத்தனையோ நாட்களாகிவிட்டன. அவன் சிந்திக்கு முன்னாலே எப்போதும் தன் மனைவியின் பெயரையோ அல்லது கதையையோ கதைக்கவே மாட்டான். இன்று சியாமி என்று சுருக்கிச் சொன்னதைக் கேட்டதும் இவள் மனதில் ஒரு பதட்டம் வந்தது உண்மை. ஆனாலும் அதைக் காட்டாமல் பிறகு என்ன நடந்தது என்றாள். ஒண்டும் நடக் கேல்லை. நான் பதிலே சொல்லாமல் இருந்திட்டு இப்ப உமக்கு முன்னால வந்து நிக்கிறான். நீர் கொஞ்சம் கவனமாத் திரியும். சியாமியிண்ட தமையன்மார் மோடன்கள். ஏதும் செய்தாலும் செய்திடு வாங்கள் என்றபடி யோசினையில் ஆழ்ந்தான்.

இப்படிச் செய்தால் என்ன? நீர் வேற வீடு மாறிப் போய்ய் இருமன் சந்தி. அப்பதான் எனக்கு நின்மதி என்பவனை அன்பு ததும்பப் பார்த்தாள் சிந்தியா. இவனுக்கு என்மேல் அக்கறையும் அன்பும் இருக்கிறது. அதனால்த்தான் கவலை கொள்கிறான்

என்ற நம்பிக்கை வர, "வீடுமாறிப் பிரயோசனம் இல்லை குமார். அவை நினைச்சா வேலை செய்யிற இடத்துக்குத் தேடி வர ஏலாதே? யோசிப்பம் என்ன செய்யலாம் எண்டு" என்று இவள் கூறிக்கொண்டிருக்கும் போதே இவளின் கைகளைத் தரதர என்று இழுத்துக்கொண்டு அந்த முட்டுச் சந்தில் நுழைந்தான் குமார். அவனின் அவசரமும் வேகமும் இவளுக்கு எதையும் புரியவைக்க முதல் இவள் கைகளை இழுத்து அவனிடமிருந்து விடுவிக்க இய லாது போகவே தன் சக்தி எல்லாம் திரட்டி அவனின் வேகத்துக்குத் தடை போட்டபடி தன்னைத் தானே தடுத்து நிறுத்தினாள்.

சியாமளான்ர தமயன். இங்க எப்பிடி மோப்பம் பிடிச்சு வந்தவன் என்றான் பயத்தில் வியர்த்தபடி. உப்பிடிப் பயந்து ஓடி என்ன செய்யப்போறீங்கள் குமார். எவ்வளவு நாளைக்கு எண்டு ஓடுவீங்கள். நான் பாவம் எண்டு பார்த்தது. இனிச் சரி வராது. நீங்கள் தான் இனி முடிவெடுக்க வேணும் நான் வேணுமோ சியா மளா வேணுமோ எண்டு என்று கூறியபடி அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் அவள். சிந்தி அவசரப்படாதையும். ஒரு கிழமை நாங்கள் இரண்டு பேரும் சந்திக்க வேண்டாம். ஒரு கிழமைக்குப் பிறகு நான் உம்மைச் சந்திக்கிறன். நீரும் யோசியும் நானும் யோசிக்கிறன் என்றுவிட்டு திரும்பியும் பாராமல் செல்பவனை அதிர்ச்சியுடன் பாத்துக்கொண்டே நின்றாள் சிந்தி.

நான் அவசரப்பட்டுக் கதைத்துவிட்டேனோ?? என்னை விட்டுவிடுவாரோ? இல்லை. அவரால் என்னை விட்டுவிட்டு இருக்க முடியாது என்று ஆணித்தரமாக நம்பியபடி நடந்து சென்று வீட்டுக்குப் போகும் பேருந்துக்குக் காத்திருக்க ஆரம்பித் தாள். வேலைக்குப் போவதற்கான மனநிலை இன்று இல்லை. வீட்டுக்குப் போனதும் போன் செய்து சொல்லிவிட வேண்டியது தான் என எண்ணிக்கொண்டாள்.

***

குமார் இவளுக்கு பஸ்சில்த்தான் அறிமுகமானான். அவனின் பார்வையும் பேச்சும் கூட நேர்மையாகத் தெரிந்தது அவளுக்கு. சில ஆண்கள் போல் பல்லிளித்துப் பேசாதது கூட

அவன்மேல் ஒரு ஈடுபாட்டைத் தோற்றுவித்தது எனலாம். யார் யாரிடம் காதல் கொண்டார்கள் என்றில்லாமல் இருவருக்குமே ஒருவரிடம் மற்றவர் ஈர்க்கப்பட்டு ஒருநாள் பார்க்காவிட்டால் கூட நாள் முழுதும் தொலைந்துபோனதை உணர்ந்து, அப்போது தான் முதல் முதல் அவளுக்கு தவிப்பும் பயமும் கூடவே எழுந்தது. நான் அவனை நேசிப்பதுபோல் அவனும் என்னை நேசிக் கிறானோ இல்லையோ? என்னை அவன் நேசிக்காவிடில் என்னால் உயிர் வாழ முடியுமா என்றெல்லாம் எண்ணி எண்ணி காச்சலில் விழுந்தவள் எழுந்திருக்க முன்னரே அவனின் காதலை அவனாகவே வெளிப்படுத்தும் சந்தப்பம் வந்தது.

முதல் நாள் அவள் எழுந்திருக்க முடியாமல் அனத்தியத்தில் சுசி பயந்துபோய் தனக்குத் தெரிந்த வைத்தியரிடம் சென்று இவளுக்கு மாத்திரைகள் வாங்கி வந்து கொடுத்து வேலைக்கும் போகாது இவளுடனே இருந்து பார்த்துக்கொண்டாள். அன்று இரவு கொஞ்சம் சுகம் வந்ததுதான் ஆயினும் அடுத்தநாளே வேலைக்குக் கிளம்பியவளை சுசி வெளியே விடவே மறுத்துத் தானே அவளது வேலை இடத்துக்கும் தொலைபேசியில் சிந்திக்கு வருத்தம் மாறவில்லை இன்றும் வரமாட்டாள் என்று கூறிவிட இவளுக்கு குமாரைப் பார்க்கமுடியாதே என்று பதைப்பு ஏற் பட்டது.

அவனின் தொலைபேசி இலக்கம் கூட அவள் வாங்கி வைத்துக்கொள்ளவில்லை. இருவரும் காலையும் மாலையும் ஒருமணி நேரம் சேர்ந்தே இப்பொழுதெல்லாம் பயணம் செய்வ தால் அந்தத் தேவை ஏற்படவில்லை. ஐயோ குமார் என்னைக் காணாமல் தவித்திருப்பாரா? என்று இவளுக்கு ஏற்பட்ட தவிப்பிலும் இயலாமையிலும் எழுந்து அங்குமிங்கு மாக நடந்து திரிவதைக் கண்ட சுசி "என்னடி, ஏன் குட்டிபோட்ட பூனை போல் திரிகிறாய். நான் தான் போன் செய்து சொல்லி விட்டேனே பிற கென்ன" என்று கேட்டுவிட்டு, வா வந்து படு என்றவுடன் இவள் போய் கட்டிலில் சரிந்து படுப்பதைத்தவிர வேறு வழி இருக்க வில்லை.

சுசியிடம் சொல்வோமோ என்று எண்ணிய நினைப்பை உடனேயே அழித்துவிட்டு எனக்கே என் விடயம் சந்தேகம். இதற்குள் உவளுக்குச் சொல்லி வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று எண்ணியவளுக்கு சிரிப்பு வந்தது. காச்சல் கண்ட வாய்க்கு சுசி ஆசையும் அன்புமாய்ச் செய்த புளிக்கஞ்சி கூடச் சுவைக்கவில்லை. அவன் என்னை எதிர்பார்த்து ஏமாந் திருப்பானா இன்றும். அல்லது என்னை மறந்துவிட்டிருப் பானோ என்று விரும்பியவாறெல்லாம் கற்பனையில் கண்டபடி மனதை அலைய விட்டவளுக்கு கதவு தட்டும் சத்தம் கேட்டது. ஆனாலும் எழும்ப மனம் இன்றி சுசி எழுந்து செல்வதையே பார்த்தபடி இருந்தாள்.

சுசி யாருடனோ மெதுவாகக் கதைக்கும் சத்தமும் பின் இவள் பக்கம் திரும்பி "சிந்தி வாரும் உம்மைத் தேடி வந்திருக் கினம்" என்று சொல்லிவிட்டு வாசல் கதவடியில் நிற்பதும் உணர்ந்து இவள் வேண்டா வெறுப்புடன் யார் என்றபடி வாசல் வரை சென்றவள், வாசலுக்கு வெளியே குமார் நிற்பதைக் கண்டதும் குமார் என்றாள் வாஞ்சையும் காதலும் ஆவலும் திகைப்புமாக. அவளின் குரலிலேயே சுசிக்குப் புரிந்திருக்க வேண்டும். உள்ளுக்கு வாங்கோ என்றுவிட்டு கடகடவென குசினுக்குள் சென்றுவிட்டாள்.

வாங்கோ குமார் என்று இவளும் அழைக்க தயக்கத்துடன் உள்ளே நுழைந்தவன், ஏன் உம்மைக் காணவில்லை இரண்டு நாளாக என்றான். எனக்கு சரியான காச்சல். இண்டைக்குத் தான் எழும்பி இருக்கிறன். என்னெண்டு வீடைக் கண்டுபிடிச்சியள் என்றாள்.

நேற்று உம்மைக் காணேல்ல. இண்டைக்கு வருவீர்தானே எண்டு இருந்தான். இண்டைக்கும் வரேல்லை எண்டதும் உமக்கு ஏதுமோ என்று நினைச்சு பயந்திட்டன். பஸ் ஸ்ராண்டில உமோட கதைச்சுக்கொண்டு நிப்பா ஒராள். அவவிட்டை விசாரிச்சன். முதல்ல ஒண்டும் சொல்லமாட்டன் எண்டுட்டா. கட்டாயம் இண்டைக்கு சந்திக்கவேணும் அவசரம் என்றதும் தான் குறிப்புச்

சொன்னா. அதுதான் உடனேயே வந்திட்டன். உம்மைப் பார்த்த பிறகுதான் நின்மதியாக இருக்கு என்றவனை பார்த்தவளுக்கு சொல்லாமலே அவன் காதல் புரிந்தது.

***

அதன் பின் அவர்களிடையேயான நெருக்கம் அதிகமாகி ஒருவரை ஒருவர் பார்க்காது இருக்கும் நாள் இல்லை எனும் அளவில் அவர்கள் அன்பு இறுகிப் போனது. எத்தனை தவறான வாழ்வைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சந்தியாவுக்குத் தெரிந்தே இருந்தாலும் அவளால் அதையிட்டு மனபூர்வமாக யோசிக்கவோ அதிலிருந்து வெளிவரவோ முடியவில்லை.

அதன் பின் சுசி வேலைக்குப் போகும் நேரங்களில் தன் வீட்டிலும் அவனது நண்பன் ஒருவனின் வீட்டிலுமாக இருவரும் தம் ஆசையைத் தீர்த்துக்கொண்டனர் தான். ஆனாலும் ஒருவருக்கு ஒருவர்மேல் வெறுப்போ சலிப்போ இன்றுவரை ஏற்பட்டதே இல்லை.

அவன் தன் மனைவியை அவளின் வேலையிடத்தில் காக்க வைத்துவிட்டு இவளின் வேலை முடியும் நேரம் இவளுடன் சேர்ந்து இவளைக் கொண்டுவந்து அவள் வீடுவரையும் விட்டு விட்டு, மனைவியைப் போய்க் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவான். இதை அவனே சொல்லக் கேட்டிருந்தாலும், "நான் தனியே போகிறேன் நீங்கள் வரவேண்டாம்" என்று அவளும் சொல்லவில்லை அவன் மனைவியும் சொல்லவில்லை. அவனும் அலுக்காது தன் கடமைபோல் இருவருடனும் பயணிப்பதைக் கேட்டு சுசிதான் சிந்தியை அப்பப்ப திட்டுவாள். "உனக்கும் வேலையில்லை அவனுக்கும் வேலையில்லை" என்று.

என்னதான் நண்பி என்றாலும், சுசி அவன் என்று திட்டும்போது இவள் மனதில் தடிகொண்டு அடிப்பதுபோல் இருக்கும். "சுசி எனக்கு அவரைப் பிடித்து நானும் தான் அவரை விடமுடியாமல் இருக்கிறன். தயவுசெய்து அவன் இவன் என்று கதைக்காதே. என்னால் தாங்க முடியாமல் இருக்கு" என்று கூறுவாள். அந்த நேரம் சிந்தியாவைப் பார்க்க சுசிக்கே பாவமாகத்

தான் இருக்கும். ஆனாலும் தொடர்ந்தும் அவன் என்றே பேசி அவள் முகம் சுருங்க வைப்பாள் சுசி.

எத்தனை தடவை சுசி திட்டினாலும் அத்தனை தடவைக் கும் மேலாக அவன் மீதான விருப்பம் அளவுகடந்து அவளை முற்றுமுழுதாக ஆக்கிரமித்து மீண்டு எழவே முடியாத பள்ளத் தில் தள்ளித்தான் விட்டது.

அவனைச் சந்தித்துவிட்டு தீர்க்கமான முடிவோடு இரு வரும் அடுத்த நாளைப் பற்றித் திட்டமிட்டுவிட்டுப் பிரிந்தபின் இப்பத்தான் அவள் பஸ்ஸை விட்டு இறங்கி மழைத் தூறலில் நனைந்தபடியே வீட்டுக்குப் போகிறாள். பாவம் சுசி இனித் தனிய இருக்கப் போகிறாள். எத்தனை வருட நட்பு. அவளை மீறிக் கண்ணில் நீர்முட்டி மழைநீருடன் கலக்க வீடு வந்து சேர்ந்தவள், இன்னும் நண்பி வராததால் தலையைத் துவட்டிவிட்டுச் சமைக்கத் துவங்குகிறாள்.

சுசி உள்ளே வரும்போது சமையல் மணம் மூக்கை நிறைக்க ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு வந்தவள், அறையைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போகிறாள். அத்தனை அழகாக என்றுமில்லாதவாறு அறை பளிச்சிடுகிறது.

என்னடி சிந்தி நடந்தது. உனக்குப் பித்தம் எல்லாம் தெளிஞ்சு போச்சா என பகிடியாகக் கேட்டபடி சுசி சந்தோசத் தில் சிரிக்க, "பகிடி விட்டது காணும். கெதியா முகம் கழுவிப் போட்டு வாடி சாப்பிட" என்று அழைக்கும் சிந்தியை ஆச்சரியத் துடனும் அன்புடனும் பார்த்தபடி குளியலறைக்குச் செல்கிறாள் சுசி.

சுசி வெள்ளண வந்தால் சிந்திக்காகச் சாப்பிடாது காத்திருப்பாள். ஆனால் சிந்தி ஒருதடவை கூட சுசிக்காகப் காத் திருந்தது கிடையாது. சுசி சாப்பிட்டாயா என்று கேட்டால் சாப்பிட்டிட்டன் என்ற பதில்வரும். அதற்காக சிந்தியா குற்ற உணர்ச்சி கொண்டதும் கிடையாது சுசி கோபித்ததும் இல்லை. சுசிக்குத் தெரியும் சிந்தியால் பசி கிடக்க முடியாதென. அப்படிப் பட்டவள் இன்று இவளுக்காகக் காத்திருப்பது என்றால்

ஆச்சரியம் ஏற்படாமல் என்ன செய்யும்?

இருவரும் அன்றுபோல் மகிழ்வாகக் கதைத்துச் சிரித்து இதுவரை சாப்பிட்டதே இல்லை. அன்று சுசியோ சிந்தியோ அவனின் கதை கூட எடுக்காது பழைய நினைவுகளில் திளைத்து.. சுசி "இன்று படம் பார்க்கப் போவோமா என்று சிந்தி" கேட்க... இல்லையடி இன்று எனக்கு அலுப்பா இருக்கு. சனி போவம் என்று கூறிய சுசி அன்றைய பொழுதின் மகிழ்வில் நின்மதியாகத் தூங்கிப் போனாள்.

தமது விடயம் தன் தந்தைக்கு எப்படித் தெரிந்துபோனது என்று சிந்திக்கே இன்னும் புரியவில்லை. சுசி சொல்லவில்லை என்பதில் அவளுக்கு எந்த சந்தேகமும் இல்லை. எனக்குத் தெரியாமல் யாரோ என்னை கண்காணித்துக் கொண்டு இருக் கிறார்களோ என்னும் எண்ணம் மேலோங்க, அப்படி இருக்காது என்று எண்ணியவளுக்கு அவனின் மனைவியின் அண்ணன்மார் தான் நிட்சயம் சொல்லியிருக்க வேண்டும் என்று புரிந்தது.

அதற்கு அப்பா என்னிடம் வந்து கதைக்காமல் ஏன் குமாரை வெருட்ட வேண்டும். பாவம் அவர். எத்தனை பக்கத் தால் அவருக்கு நெருக்குதல். ஆனாலும் அப்பாவும் கதைத்த படியால்த் தானே இத்தனை சீக்கிரம் நல்லமுடிவை நாங்கள் எடுக்கமுடிந்தது. இல்லை என்றால் குமாரும் என்ன செய்யிறது என்று தெரியாமல்... எல்லாம் நல்லதற்கே என்று எண்ணியவள், இன்றுதான் இங்கு கடைசி இரவு. அதன்பின் குமாருடன் நான்... அன்று முழுவதும் தூங்காமலே சிந்தியாவின் இரவுகள் கழிய, காலையிலும் வெள்ளன எழுந்து தானே காலை உணவு செய்து தேநீர் கூட தயார் செய்து சுசியைத் திக்குமுக்காட வைத்தாள்.

அன்று சுசி வேலைக்குப் போக ஆயந்தமாக சிந்தியும் எழுந்து வெளிக்கிட்டு வெளியே போகமுதல் சுசியைக் கட்டித் தழுவ, என்ன இவளுக்கு வந்தது. ஒரேயடியா என்னை அன்பில் குளிப்பாட்டுகிறாள் என்று எண்ண மட்டுமே முடிந்தது சுசியால். அவள் அணைப்பை விலக்காமல் இருக்க, "சரிசரி காணும் விடு" என்று சுசி சொன்னாலும் அதில் தன் நண்பிக்கு தன்னில் எத்தனை

அன்பு என்னும் பெருமையும் முகமெங்கும் பிரகாசிக்க வைத்தது.

மாலை ஐந்துமணி இருக்கும். சுசி வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்ப நினைக்க, இவளது மேசையில் போன் அலறியது. இந்த நேரம் யாராக இருக்கும் என எண்ணிக் கொண்டே போனை எடுத்தவள், உடனே ஓரிடத்துக்கு வரும்படி அழைப்புவர, என்ன ஏதென்று கூடக் கேட்காது ஓட்டோவை நிறுத்தி ஏறிய பின்னும் மனதின் பதட்டத்தில் மூளை மரத்துப் போக உடல் தொய்ந்து சாய்ந்தபடி இருந்தாள். எப்பிடி என் தொலைபேசி அவர்களுக்குக் கிடைத்தது என்று எண்ணிய வளாய் இறங்கும் இடம் வந்ததும் காசைக் கொடுத்துவிட்டு மிகுதி கூட வாங்காது ஓட்டமும் நடையுமாக சென்றவளை அங்கு நின்ற கூட்டம் பதைக்க வைத்தது.

ஆட்களை விலத்திக் கொண்டு சென்றவள், அவர்கள் இருவரையும் கண்டு உயிர் பிளப்பதான வேதனையில் "ஐயோடி சிந்தியா உதுக்குத்தான் போகேக்கை என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினாயா" என்று வீரிட்டவாறே பிணங்களுக் கருகில் வந்தவளை ஒரு பெண் போலீஸ் பிணத்தின்மேல் விழுந்து விடாதவாறு தடுத்து நிறுத்தி "யார் நீ" எனச் சிங்களத்தில் கேட்டாள்.

சிறிது நேரத்தின் பின்தான் சுசிக்குத் தெரிந்தது அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொண்டனர் என்று.

# ரயில் பயணம்

எனக்கு லண்டன் நிலக்கீழ்த்தொடருந்தில் பயணம் செய்வதுதான் பிடிக்கவே பிடிக்காத விடயம். ஆனாலும் சில வேளைகளில் பயணம் செய்தே தீரவேண்டிய நிர்ப்பந்தம். ஏறிக் கொஞ்ச நேரத்திலேயே பார்த்தவற்றை மீண்டும் மீண்டும் பார்ப் பதனால் தூக்கமும் விரைவில் வந்துவிடும்.

இதற்கு முன்னொருமுறை பயணம் செய்தபோது தூக்கம் எப்படித்தான் என்னைத் தழுவியதோ கண்விழித்துப் பார்த்த போது நான் இறங்கவேண்டிய இடம் கடந்து பதினைந்து நிமிடம் ஆகியிருந்தது. பிறகென்ன அடுத்த தரிப்பிடத்தில் இறங்கி மற்றத் தொடருந்து பிடித்து வீடுவந்து சேர ஒரு மணி நேரம் தாமதம்.

இன்று தூங்காது எப்பிடியாவது சரியான நேரத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்று மனதுள் தீர்மானித்தபடி சுற்று முற்றும் பார்க்கிறேன். பலர் செய்தித்தாள்களில் மூழ்கிப்போய் உள்ளனர். ஒரு சீனப் பெண் தலையை எவ்விதத்திலும் சரிக்காமல் நேராக இருந்து தூங்கிக் கொண்டு இருக்கிறார். அவரைப் பார்த்ததும் எனக்கும் கொஞ்சநேரம் தூங்கினால் என்ன என்ற ஆசை எழுகிறது. மனதை அடக்கியபடி மீண்டும் மற்றவர்களில் பார்வையைப் பதிக்கிறேன்.

அடுத்த தரிப்பிடத்தில் பலரும் இறங்க இருக்கைகளில் பல

வெறுமையாக, ஒரு தந்தையும் மகனும் வந்து எனக்கு முன்னால் அமர்கின்றனர். தந்தை மொட்டைத் தலையுடன் பார்க்கும் போதே அவரில் ஒரு கள்ளப் பார்வை தெரிவதுபோல் என்மனம் உணர்கிறது. மகனுக்கு ஒரு பத்து வயதாவது இருக்கும். ஆனால் கால்களைத் தூக்கி தந்தையின் கால்களில் போட்டபடி சூப்பிப் போத்தலில் பாலை அருந்தியவாறு இருக்கிறான். அவன் பாலை அருந்துகிறானா அல்லது சும்மா வாயுள் அதை வைத்திருக் கிறானா என்பதில் எனக்குச் சந்தேகம்.

நான் childcare படிக்கும்போது பலவிதமான சிறுவர் பாலியல்த் துர்ப்பிரயோகம் பற்றி ஆசிரியை கூறியவை எல்லாம் என் கண் முன்னால் வந்து என் நின்மதியைக் கெடுக்கின்றன.

இவர்கள் உண்மையிலேயே தந்தையும் மகனும்தானா? அல்லது இந்தப் பையனை எங்கிருந்தாவது கடத்திவந்து இவன் வைத்திருக்கிறானோ? அப்படியாயின் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்துவிட்டுப் போவது தவறு என்று உள்மனம் கூற, இவர்களைப் பற்றி அறியவே வேண்டும் என என்மனம் ஆசை கொள்கிறது. தெரியாத ஒரு அந்நிய ஆணிடம் அதுவும் எந்தவித அழகோ அன்றி நல்ல மனிதனுக்குள்ள உருவ அமைப்போ இல்லாத அவனிடம் எப்படிக் கதைப்பது என என்மனம் சண்டித்தனம் செய்கிறது.

பெரிய பெடியனாக இருக்கிறான். பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் இருப்பது சட்டப்படி குற்றம் என்று எண்ணியபடி அந்தப் பையனைப் பார்த்து நீ பாடசாலைக்குப் போகவில்லையா என்று கேட்கிறேன். அவன் எனக்கு எந்தப் பதிலும் சொல்லாது சூப்பிப் போத்தலை வாயில் வைத்திருக் கிறான். தந்தையைப் பார்த்தால் அவர் விளங்காததுபோல் முகத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார். மீண்டும் தந்தையைப் பார்த்தே கேள்வியைக் கேட்கிறேன்.

அவனோ நான் கேட்டது விளங்காததுபோல் என்ன என்கிறான் மீண்டும். உன் பிள்ளை பள்ளிக்குச் செல்வதில்லையா என்று பொறுமையை வரவழைத்துக்கொண்டு மீண்டும்

கேட்கிறேன். அந்தச் சிறுவன் நேராக இருப்பதற்கு முயற்சி செய்கிறான். அவனோ அப்பையனை அப்படி இருக்க விடாது கால்களை தன் கால்களின் மேல் இழுத்து வைப்பதுமாக சிறுவன் மீண்டும் முயல்வதுமாக சிறுவன் என்ன விடு விடு என்று கூறிய படி கால்களை இழுக்கிறான். அவனோ விட்டபாடு இல்லை. பார்த்துக்கொண்டு இருந்த எனக்கு என்கால்களை அவன் இழுத்து வைப்பதுபோல் இருக்க, ஏன் அவனைத் தடுக்கிறாய். நேராக இருக்க விடு என்கிறேன்.

அவன் கோபத்துடன் புரியாத மொழியில் எதோ சொல் கிறான். அவனுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் சிறுவன் என்னை விடு என்று ஆங்கிலத்தில்த்தான் கூறினான். இவன் ஏன் வேறு மொழி பேசுகிறான் என்று எண்ணிய வாறே உனக்கு ஆங்கிலம் தெரியாதா என்கிறேன். அவன் மீண்டும் அந்த மொழியிலேயே எதோ சொல்ல எனக்குக் கோவம் வருகிறது.

இப்பொழுது அந்தப் பெட்டியில் நானும் அவர்களும் தான். அவன் சிறுவனிடம் குனிந்து காதுக்குள் குசுகுசுக்கிறான். எனக்கு இவன் என்ன சொல்கிறான். பாவம் அந்தப் பையனை இவன் தவறாகத்தான் பயன்படுத்துகிறான்போல என்று எண்ணியபடி இவன் உன் மகனா என்று அவனைக் கேட்கிறேன். அவன் எந்தப் பதிலும் கூறாது எங்கோ பார்க்கிறான். நான் சிறுவனைப் பார்த்து இவர் உன் அப்பாவா என்று கேட்கிறேன். சிறுவன் இல்லை என்று தலை ஆட்டியவன், அவன் எதோ உறுக்க மீண்டும் ஓம் என்று மேலும் கீழுமாய்த் தலையை நிறுத்தாமல் ஆட்டுகிறான்.

ஒரு குற்றத்தைக் கண்டாலோ அல்லது சந்தேகம் கொண்டாலோ அதுபற்றி உரியவர்களிடம் அறிவிக்க வேண்டி யது ஒவ்வொருவரின் கடமை. எனக்கு இவன் நேர்மை இல்லை என்று மனம் சொல்கிறது. ஆனாலும் அதை எப்படி நிரூபிப்பது என்று தெரியாமல் யோசனையுடன் இருக்கிறேன். மீண்டும் அவனைப் பார்த்து “நீ எங்கே வசிக்கிறாய்” என்று கேட்கிறேன்.

அவன் எதோ திட்டிவிட்டு அந்தப் பையனை இறுக்க அணைத்த படி என்னைப் பார்ப்பதைத் தவிர்த்து அமர்ந்திருக்கிறான்.

இன்று இவனை விடுவதில்லை என்று மனதில் எண்ணிக் கொண்டு சில திட்டங்களைப் போடுகிறேன். ஆனாலும் மனதில் ஒரு படபடப்பும் கூட ஒட்டிக் கொள்கிறது. அவர்கள் இருவரை யுமே பார்த்துக்கொண்டு இருக்கிறேன். ஒருமுறை என்பக்கம் திரும்பிப் பார்த்தவன் நான் அவர்களையே பார்ப்பதை கண்ட தும் சடாரெனத் தலையைத் திருப்பிக் கொள்கிறான்.

அடுத்த தரிப்பு வந்ததும் எதிர்பாராது பையனை இழுத்துக் கொண்டு அவன் இறங்க, நானும் விரைந்து என் கைப்பையைத் தூக்கியபடி பின்னால் இறங்குகிறேன். பையனுடன் விடுவிடு என்று கொஞ்சத்தூரம் சென்றவன் திரும்பிப் பார்க்கிறான். நான் வருவதைக் கண்டதும் அவனின் நடை துரிதமாகிறது. அவனை எப்படியும் தவறவிடக்கூடாது என்னும் ஆர்வத்தில் நானும் ஓட்டமும் நடையுமாகச் செல்கிறேன். எப்படியாவது வெளியே வந்தவுடன் போலிசுக்கு போன் செய்துவிட்டு அவனைப் பின் தொடர்ந்து செல்வது தான் என் திட்டம். அதனால் மற்ற எதுவும் கண்ணில் படவிடாது அவனையே பார்த்தபடி தொடர்கிறேன்.

எப்படியும் நகரும் படிக்கட்டில் வைத்து அவனைப் பிடித்துவிடலாம் என்று எண்ணியபடி அந்த திருப்பத்தில் திரும்ப எதுவோ என்னில் வேகமாக மோத, கைப்பை ஒருபுறமும் ஒரு காலணி ஒருபுறமும் போக விழ இருந்த என்னை ஒரு காப்பிலி இழுத்து நிறுத்துகிறான். என்னை இடித்துவிட்டு தொடருந்தைப் பிடிக்க ஓடிய வெள்ளையும் சொறி சொல்லிவிட்டு மீண்டும் ஓட, நான் காலனியை எடுத்து அணிந்துகொண்டு கைப்பையை யும் எடுக்கிறேன்.

அதன் பின்தான் எனக்கு முதல் விடயம் நினைவுக்குவர, விரைந்து சென்று படிகளில் தாவித்தாவி ஏறி பிரயாணச் சீட்டை அழுத்திவிட்டு வெளியே வந்தால் தேர்த்திருவிழா போல மக்கள் கூட்டம்.

பகுதி 2

இந்தச் சனக்கூட்டத்துக்க அவனை எங்க தேடித் பிடிக் கிறது. திரும்பிப் போவமோ என்று எண்ணிய மனதை இழுத்து நிறுத்தி, இன்று அவனை ஒருகை பாக்காமல் போறேல்லை என்னும் முடிவுக்கு வந்து சனத்துக்குள் இறங்குகிறேன்.

எனக்கோ இந்த இடம் புதிது. இன்றுதான் முதல் முதல் வருகிறேன். சரி இருக்கவே இருக்கு வாய் என்று எண்ணிக் கொண்டு வலதுபக்க வீதிக்கு விரைந்து சென்று பார்க்கிறேன். அவன் என் கண்களுக்குத் தென்படவில்லை. நேரம் நிறைய ஆக வில்லை. ஆதலால் அவன் நிறையத் தூரம் சென்றிருக்க முடி யாது. திரும்பி இடது பக்க வீதியைக் குறிவைத்து விரைகிறேன்.

விரைவாக நடந்ததில் மூச்சு வாங்குகிறது. இரண்டு மூன்றுபேரிடம் கால் கைகளில் இடித்ததில் திட்டு வாங்கியபடி அசட்டுச் சிரிப்புடன் மன்னிக்கவும் என்று சொல்லிக்கொண்டு கிட்டத்தட்ட ஓடுகிறேன். தூரத்தில் அவன் போவது தெரிகிறது. மனதில் படபடப்பும் கூடுகிறது. அவன் என்னைப் பார்க்கக் கூடாது என்று எண்ணிக்கொண்டு ஒரு இடைவெளியை வைத்துக்கொண்டே நடக்கிறேன்.

என் கெட்ட காலம் தற்செயலாகத் திரும்பியவன் என்னைக் கண்டுவிட்டான். இப்பொழுது அவன் ஓட்டமும் நடையுமாகப் போகிறான். அந்தப் பையன் நடக்க முடியாமல் கைகளைப் பின்னுக்கு இழுக்க இழுக்க இஅவனும் எதோ திட்டித் திட்டிக் கொண்டே கொற இழுவையில் பையனைக் கொண்டு போகிறான்.

எதற்கும் போலிசுக்கு போன் செய்துகொண்டே அவனைத் துரத்துவோம் என எண்ணிக்கொண்டே கைப்பையைத் திறந்து என் போனை எடுக்கிறேன். போனை இயக்கினால் இயங்க வில்லை. என்ன இது சரியாகத்தானே இருந்தது போன் என்று எண்ணிக்கொண்டு மீண்டும் போனை உயிர்ப்பிக்க முயல் கிறேன். லோ சாச் என்று சொல்லிவிட்டு மீண்டும் போன் நின்று விடுகிறது.

இப்பொழுது அவனுக்கும் எனக்குமான இடைவெளி கூடியிருந்தது. எனக்குப் பதட்டம் அதிகரிக்க பக்கத்தில் போனவன் ஒருவனை நிறுத்தி ஒருக்கா போலிசுக்குப் போன் செய்கிறாயா என்று கேட்கிறேன். ஏன் என்று கேட்கிறான். அதில் போகும் ஒருவன் ஒரு சிறுவனைக் கடத்திக்கொண்டு போகிறான். உடனே பொலிசுக்குச் சொல்லு, நான் அவனைத் தொடர்கிறேன் என்று கூற உனக்கு என்ன பயித்தியமா என்று சொல்லிவிட்டு பயித்தியங்களைப் பார்த்துச் சிரிப்பதுபோல் என்னை நக்கலாகப் பார்த்துச் சிரித்துவிட்டு அவன் போய்விட்டான்.

எனக்கு கோபம் ஒருபுறம். அவமானம் ஒருபுறம், அவனை விடக்கூடாது என்று ஒருபுறம் வீதியைப் பார்க்கிறேன். அவனைக் காணவில்லை. அட வீணாக இவனிடம் கதைத்து அவனைக் கோட்டை விட்டுவிட்டேனே என அங்கலாய்ப்புடன் ஓடு கிறேன். வீதி மேம்பாலம் ஒன்றில் அவன் தலை தெரிகிறது. அவன் பாலத்தால் இறங்குமுன் அவனைப் பிடித்துவிட வேண்டும் என்னும் வெறி எழுகிறது.

நான் பாலத்தால் ஏறி இறங்க அவன் எப்படியும் தப்பிப் போய்விடுவான். அவனை விடக்கூடாது என்றபடி வீதியைக் கடப்போம் என எண்ணினால் வீதியில் இரு மருங்கும் ஆட்கள் கடக்காதவாறு இரும்புத் தடை போட்டுள்ளார்கள். என்னதான் செய்வது என்று ஒரு செக்கன்தான் எண்ணியிருப்பேன். என்ன ஆனாலும் சரி என எண்ணியபடி இரும்புத் தடைக்கு மேலால் ஏறி வீதியில் இறங்க வாகனங்கள் விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றன. ஐயோ அவன் இறங்கிறானே. விட்டால் போய்விடுவான் என்னும் பதட்டத்தில் இடையில் புகுந்து வாகனச் சாரதிகளின் காது கிழியும் கோர்ன் சத்தத்தையும் சட்டை செய்யாது ஓடிவருகிறேன். அந்தப்பக்கம் இருந்தது போல் ஏறுவதற்கு வசதியாகக் கம்பிகள் இல்லை.

அவனோ கீழே வந்துவிட்டான். அவனைப் பிடியுங்கள் அவனைப் பிடியுங்கள். அவன் அந்தச் சிறுவனைக் கடத்திக் கொண்டு போகிறான் என்று கத்துகிறேன். யாரும் நான் கூறு

வதை நம்பியதுபோல் தெரியவில்லை. அவன் போகும் பக்க மாகவே வீதியின் கரையாக ஓடுகிறேன். அவனும் இப்ப ஓட ஆரம்பித்துவிடான். திடகாத்திரமான ஒரு ஆபிரிக்க இனத்தவன் வருகிறான். அவனை நிப்பாட்டு என்கிறேன். அவனோ எதற்கு என்று என்னையும் அவனையும் மாறிமாறிப் பார்க்கிறான்.

இவனுக்குச் சொல்லி விளங்கப்படுத்த முடியாது என்று எண்ணி, எனக்கு அந்தப் பக்கம் வர உதவி செய் என்று கேட்க அவனும் என் கைகளைப் பிடித்து வா என்கிறான். நான் கால் ஊன்றி ஏறுவதற்கு வசதியாக ஏதும் இல்லை. அவன் அதை விளங்கிக் கொண்டு தான் பாய்ந்து இந்தப் பக்கம் வருகிறான். என் இடுப்பின் இரு பக்கமும் என்னைப் பிடித்து அந்தப் பக்கம் தூக்கி விடுகிறான்.

நான் அவனுக்கு நன்றி கூடச் சொல்லாமல் தலைதெறிக்க ஓடுகிறேன். நான் சிறுவயதில் விளையாட்டுப் போட்டிகளில் ஓடியவை எல்லாம் என் நினைவில் வந்து என்னை விரைந்து ஓடச் செய்கின்றன. நான் அவனை அண்மித்துவிட்டேன். என் களைப்பையும் பொருட்படுத்தாது நில்லு என்று கத்தியபடி இரண்டு கைகளாலும் அவனை எட்டிப் பிடிக்கிறேன்.

கேய் என்று யாரோ என்னைப் பிடித்து உலுப்புகிறார்கள். நான் திடுக்கிட்டுக் கண்விழிக்கிறேன்.ரெயின் இதுக்கு மிஞ்சிப் போகாது இறங்கு என்று மஞ்சள் உடை போட்ட ஒருவன் எனக்குக் கூறுகிறான். இறங்கியபின் பார்த்தால் நான் இறங்க வேண்டிய இருப்பிடம் கழிந்து ஒரு மணிநேரம் ஆகியிருந்தது.

# வரம் வேண்டினேன்

இன்னும் இரண்டு மாதங்கள் தான். சுசீலாவுக்கு எல்லை யில்லா அவஸ்தை, மகிழ்வு, பயம் என ஒன்றுசேர்ந்த கலவையான உணர்வு ஏற்பட்டது. எந்த நேரத்திலும் அவள் தயாராகவே இருக்கிறாள். எத்தனை நாட்களாகிவிட்டன ஓடியாடித் திரிந்து. கிட்டத்தட்டச் சிறை வாழ்க்கை போலத் தான். என்ன விரும்பிய உணவு, கணவனின் ஆதரவான விசாரணை, பெற்றோரின் தொடர் தொலைபேசி விசாரிப்புக்கள் என்று எத்தனை தான் இருந்தாலும் கணவன் அருகே இல்லையே என்னும் குறையும் பெரிதாகத்தான் தெரிந்தது.

இன்னும் ஒரு மாதத்தில் வந்துவிடுவேன் என்று சுதாகரன் கூறினாலும் அவன் தன்னிடம் வந்து சேரும் வரை சுசீலாவுக்கு நின்மதி இருக்கப் போவதில்லை. யார் என்ன ஆறுதல் கூறினா லும் கணவன் அருகிருப்பதே பெரிய பலம். நோய்வாய்ப் பட்டிருக்கும் தந்தையை விட்டுவிட்டு வரமுடியாததால் தாய் இவளுடன் வந்து நிற்கவில்லை. என்னதான் வசதிகளை ஏற் படுத்தித் தந்தாலும் எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டுமே என்ற பயம் எந்நேரமும் மனதில் ஓடிக் கொண்டிருப் பதை தவிர்க்க முடியவில்லை சுசீலாவால்.

ஒரு வருடங்களுக்கு முன்புவரை விரக்தியின் விளிம்பில் நின்று, யாரையும் பார்க்கப் பிடிக்காது, தொலைபேசியில் யார்

அழைத்தாலும் பேசப்பிடிக்காது இருந்த எனக்கு, இப்ப எல்லோ ருடனும் பேசவேண்டும் என்னும் ஆசையை நிறைவேற்ற முடி யாது என் நிலை தடுக்கிறது. இரண்டு மாதங்களில் எல்லோரை யும் வீட்டுக்குக் கூப்பிட்டு விருந்து வைத்து என் மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

திருமணமாகி எட்டு வருடங்கள் அவள் பட்ட பாடு சொல்லி முடியாது. காண்பவர் எல்லாம் “என்ன விசேடம் ஒன்றும் இல்லையா” என்று அறிவற்றுக் கேட்கும் போது திடீரென மனதில் எழும் கோபத்தை அடக்கிக் கொண்டு அவர்களுக்கு பதில் கூறியதை நினைக்க இப்ப சிரிப்பாக இருந்தது அவளுக்கு. இந்தச் சனங்கள் வாயை வச்சுக்கொண்டு பேசாமல் இருக்காமல் ஏனப்பா எங்கள் குடும்ப விசயங்களில் தலையிடுதுகள் என்று எரிச்சலுடன் இவள் கூறும்போதில், அதுதான் உலகமப்பா அவர்களை மாற்ற முடியாது என்று கணவன் கூறுவான். அதன் பின் அவள் பொது நிகழ்வுகளில், திருமண வீடுகளுக்குக் கூடச் செல்லாது வீட்டுக் குள்ளேயே ஒடுங்கப் பழகிவிட்டாள். ஏன் திருமணத் துக்கு வரவில்லை என்று யாராவது தொலைபேசியில் கேட்டா லும் ஏதாவது சாட்டுகள் கூறித் தப்பிக் கொண்டாள்.

எத்தனை வைத்தியர்களிடம் ஆலோசனை கேட்டு, எத்தனை பேரிடம் தலை குனிந்து, எத்தனை தரம் இவளுக்கும் கணவனுக்கும் பரிசோதனை செய்து, எத்தனையோ ஊசிகள் மருந்துகள் ஏற்றி கிட்டத்தட்டச் சித்திரவதைதான். எல்லா வற்றையும் இருவரும் தாங்கினார்கள்தான். ஆனாலும் எந்தப் பயனும் அற்றுப் போய் வாழ்வில் பிடிப்பே அற்று இருவரும் இருந்தபோதுதான் அவள் ஆனந்த விகடனில் வந்திருந்த ஒரு பேட்டியை வாசிக்க நேர்ந்தது. அதை கணவனையும் வாசிக்கச் செய்து இருவரும் நீண்ட நேரம் அதுபற்றிக் கலந்து கதைத்து ஒரு முடிவுக்கு வந்தனர். அடிமனதில் ஒளிந்துகொண்ட ஆசை மீண்டும் இருவருக்கும் விஸ்வரூபம் எடுக்க ஒருவரை ஒருவர் நீண்டநாளின் பின் நம்பிக்கையோடும் ஆசையோடும் பார்த்து மகிழ்ந்தனர்.

***

கணவனுடன் இந்தியா வந்து அந்தப் பெரிய மருத்துவ மனையில் எல்லா டெஸ்ட்டும் செய்து தலைமை மருத்துவர் ராஜேஸ்வரி, எல்லாம் சரியாக இருக்கிறது. அடுத்த வாரமே ஆரம் பிக்கலாம் என்றதும் இருவர் மனதிலும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமற் போனது. சுதாகரன் இன்னும் மூன்று வாரங்கள் தான் அவளுடன் நிற்கலாம். அதன் பின் அவன் வேலைக்குத் திரும்ப வேண்டும். அந்த மருத்துவரிடமே ஆலோசனை கேட்டனர். எல்லா மாக எனக்கு நீங்கள் மருத்துவச் செலவுக்கு மூன்று இலட்சம் தந்துவிட வேண்டும். நீங்கள் இங்கே பக்கத்தில் தங்குவதற்கு நான் ஒழுங்கு செய்கிறேன். அது உங்கள் செலவு. ஒரு பெண்ணை வேண்டு மென்றால் சமைக்கவும் துணைக்கும் ஒழுங்கு செய்கிறேன் என்றுவிட்டார்.

பணம் என்ன பெரிதா? பிள்ளை வரம் வேண்டி நொந்து நூலாகிப்போன எங்களுக்கு கடவுள் இப்பதான் ஒரு வழியைக் காட்டியிருக்கிறார். அதை எள்ளளவேனும் பிசக விடாது காப்பது எமது கடமை என்று இருவருமே எண்ணி அவர் கூறிய படியே செய்ய ஆயத்தமாயினர்.

அடுத்த வாரம் இருவருக்கும் மீண்டும் விந்து, முட்டை ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மருந்துகள் ஏற்றப்பட்டுத் தயாராக்கி மூன்றாவது வாரம் இருவரிடமும் இருந்து விந்தும் முட்டையும் பெறப்பட்டு சோதனைக் குளாயில் செலுத்துவதாகக் கூறினார்கள். இவர்கள் இருவரும் வேண்டாத தெய்வம் இல்லை. முன்பு சுவிசிலும் இதுபோல் இரு தடவைகள் செய்ததுதான். ஆனாலும் சரிவரத்தான் இல்லை. இம்முறை சுசீலா வுக்கு ஏனோ அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக் கிறது. மனம் முழுவதும் ஏற்படும் ஒரு எல்லையில்லா உணர்வை அடக்கு என மனதுக்குக் கட்டளையிட்டுவிட்டுக் காத்திருந்தாள்.

பதினைந்து நாட்களின் பின்னர் சரிவரும் போல இருக்கு. இன்னும் பதினைந்து நாட்கள் பார்க்கவேண்டும் என்று வைத்தியர் கூறியதும் இன்னும் பதினைந்து நாட்களா என்று இருவருக்கும் ஒரு சலிப்பும் ஏற்பட்டது. இன்னும் இரண்டு

வாரங்கள் மெடிக்கல் லீவு கொடுத்துவிட்டு சுதாகரன் மனைவி யுடனேயே நின்றான். இரண்டு வாரங்களின் பின்னர் உருவான கரு சுசீலாவுக்குச் செலுத்தப்பட்டது. வலிகளும் வேதனைகளும் கூட அவளது எதிர்பார்ப்புகளின் முன்னால் ஒன்றுமில்லாது போயின.

சுதாகரனுக்கும் இம்முறை எல்லாம் நன்றாக நடப்பதாக மனம் சொல்லியதில் நின்மதியாக மனைவியை விட்டுவிட்டு சுவிஸ் வந்துவிட்டான். முன்பே பலருடன் தொடர்புகள் விட்டுப் போனதில் மற்றவர்களின் கேள்விகள் கூட இன்றி நின்மதி யானான் அவன். தன் நெருங்கிய நண்பர்களுக்குக் கூட அவனோ சுசீலாவோ இதுபற்றிக் கூறவே இல்லை.

நீங்கள் இரண்டு மாதங்கள் கவனமாக இருக்கவேண்டும் என்று சொன்னதுதான். இவள் தேவை இல்லாமல் வெளியே கூடச் செல்வதில்லை. இவள் தங்கியிருந்த விடுதி போன்ற ஒரு இடத்தில் இவளைப் போன்றே வெளிநாடுகளில் எல்லாம் இருந்து பல பெண்கள் குழந்தைக்காக வந்து காத்திருந்தனர். சிலருக்கு எத்தனை தடவைகள் முயன்றும் முடியாமல் திரும்பி ஏமாற்றம் சுமந்து அழுகையுடன் சென்றிருக்கின்றனர். அவர்கள் அழும்போது இவளுக்குக் கழிவிரக்கம் தோன்றும். தன்னால் முடிந்த ஆறுதலைக் கூறுவாள்.

இவளுடன் அந்த விடுதியில் இருந்த மற்றைய பெண்கள் நடக்காதே, குனியாதே, அது செய்யாதே என்று கூறுவதைக் கேட்க இவளுக்குப் பயமாகவும் இருக்கும். மாலையில் கணவன் கதைக்கும் போது தன் கணவனிடம் இவைகளைக் கூற, அவனோ "சனம் எல்லாம் சொல்லும். நீர் கவனமா இரும்." என்ன எண்டாலும் வைத்தியரிடம் கேட்டு அவர் சொல்கிற படி நடவும் என்பான். இருந்தாலும் குழந்தை வளர வளர அதைக் கவனமாகப் பாதுகாத்துப் பெற்றெடுக்க வேண்டுமே என்ற அவாவிலும் பயத்திலும் மற்றவர்கள் கூறுவதைக் கேட்டும் நடக்கவாரம்பித் தாள். அதனால் நடைப் பயிற்சி இல்லாது உடல் ஊதியது.

மூன்றாம் மாதம் இவளைப் பரீட்சித்துவிட்டு இரட்டைப் பிள்ளைகள் உனக்கு என்றார் வைத்தியர். இவளுக்குச் சந்தோசத்

தில் நெஞ்சை அடைத்து. சுதாகரனின் களிப்பைச் சொல்லி மாளாது. கடவுள் கருணை காட்டிவிட்டார். ஒன்றுமே இல்லா மல் இருந்த எமக்கு இரண்டா என கடவுளுக்குப் பலதடவைகள் நன்றி கூறிக் கொண்டான் அவன்.

இன்னும் இரண்டு வாரங்கள்தான். சுதாகரனும் சுவிசிலிருந்து வந்துவிட்டான். சாதாரண பிரசவமாக இருக்காது என்று வைத்தியர் கூறிவிட்டார். சாதாரணமாகப் பிறக்கும் என்றாலும் கூடப் பணத்துக்காக வைத்தியர்கள் சத்திரசிகிச்சை செய்வது பற்றியும் கதை ஓடித்திரிந்ததுதான். ஆனாலும் அவர்களுக்கு இருந்த பயத்தில் குழந்தைகள் இரண்டும் சுகமாக வெளியே வந்தார் சரி என்ற நிலையில் மருத்துவர் கூறியதை எதிர்த்து ஒரு வார்த்தை கேட்கவே இல்லை.

அன்று அவளைப் பிரசவ அறையுள் அழைத்துக்கொண்டு சென்றபோது சுதாகரனும் தானும் வருகிறேன் என்று கூறினான். மருத்துவர் மறுத்துவிட்டார். இவனால் எதிர்த்தும் கதைக்க முடியவில்லை. உள்ள கடவுள்களை வேண்டியபடியே வெளியே காவல் இருந்தான்.

ஒரு மணி நேரத்தில் சத்திரசிகிச்சை முடிந்ததாகக் கூறி அவனை உள்ளே அழைக்க, மனம் முட்டிய மகிழ்வில் உள்ளே சென்றவன் தாய்க்குப் பக்கத்தில் பிள்ளைகளைக் காணாது மனதில் ஒரு திடுக்கிடலோடு தாதியைப் பார்த்து எங்கே பிள்ளை கள் என்றான்? கால் கைகளில் நடுக்கம் பரவத் தொடங்கியது. மனைவி இன்னும் மயக்கத்தில் இருந்தாள். பிள்ளைகளை இன்னும் கொஞ்ச நேரத்தில் கொண்டு வருவார்கள் என்று அவள் கூறியதும் மனது ஒருநிலைப்பட்டது. நெஞ்சுக்கூடு மீண்டும் தன் இடத்தில் அமர்ந்தது போன்ற நினைப்பு வர நின்மதிப் பெருமூச்சொன்று வெளிவந்தது.

சுசீலாவுக்கும் ஒருவாறு நினைவு திரும்ப பக்கத்தில் பார்த்து விட்டு அவள் கண்களும் வேதனையை மீறி எங்கே குழந்தைகள் என்று கேட்டன. இவன் கண்கள் கூறிய சமாதானத்துடன் மட்டும் நின்றுவிடாது, இப்ப கொண்டு வருவினம் என்று

அவளுக்குச் சொல்லிவிட்டு வெளியே சென்று தாதியிடம் மனைவி கண் விழித்துவிட்டார். பிள்ளைகளைத் தேடுகிறார். எப்ப கொண்டுவருகிறீர்கள் என்றான். நீங்கள் அறைக்குப் போங்கள் இப்ப கொண்டுவருவார்கள் என்றதும் இவன் சுசீலா வுக்கு அருகில் சென்று கொண்டு வருகிறார்கள் என்று கூறிவிட்டு அவளின் தலையைத் தடவி நெற்றியில் முத்தமிட்டு கை ஒன்றை எடுத்து ஆதரவாகத் தடவிக் கொடுத்தான்.

கதவு திறக்கப்பட, இரண்டு தாதிகள் தொட்டில்களைத் தள்ளிவர, மனம் முழுவதும் மகிழ்வு பொங்க உடனே எழுந்த சுதா கரன் பக்கத்தில் சென்று பார்த்ததும் அதிர்ந்தான். தலையைத் திருப்பிப் பார்த்த சுசீலாவின் மனம் திடுக்கிட்டாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. தாதியர் வெளியே சென்றதும் இருவரும் கேள்விக் குறியுடன் ஒருவரை ஒருவர் பார்த்தனர். பிள்ளைகள் இரண்டும் பச்சைக் கண்களுடன் வெள்ளைக்காரக் குழந்தைகள் போல் இருந்தன.

மாறி வேற ஆட்களின் பிள்ளைகளைக் கொண்டு வந்து விட்டனரோ என்ற பதைப்பில் வைத்தியரின் அறையைத் தேடி ஓடினான் சுதாகரன். இவன் கூறியவற்றைக் கேட்டபின் முகத்தில் எந்தவிதப் பதட்டமும் இல்லாமல், இப்பிடியான விசயங்களில ஒண்டு இரண்டு மாறி நடக்கிறதுதான். சொறி. பரிசோதனைக் குளாயுள் செலுத்தும்போது ஏதோ தவறு நேர்ந்து விட்டது.

உங்களுக்கு பிள்ளைகளை வைத்திருக்க விருப்பம் இல்லை என்றால் கூறுங்கள். பிள்ளைக்காக எத்தனையோபேர் காத்திருக் கிறார்கள். நீங்கள் சம்மதித்தால் அவர்களுக்குக் கொடுப்போம் என்று கூறிவிட்டு எதுவும் நடக்காததுபோல் இருந்தாள் வைத்தியர்.

உடலும் மனமும் சோர்ந்துபோக வேண்டாம் என்று தலை யாட்டிவிட்டு எழுந்து நடந்தவன் அறையுள் சென்றதும், மனைவி இரண்டு குழந்தைகளையும் இரு கைகளாலும் அணைத்தபடி முகமெங்கும் பூரிப்புடன் இருப்பதைக் கண்டு தானும் அவளரு கில் சென்று பெண் குழந்தையைத் தன் கைகளில் வாரி எடுத்துக் கொண்டான்.

# வாழ்வு வதையாகி

காற்றுடன் மழையும் சுழன்றாடுவதை அந்த அறையின் சாளரத்தினூடு பார்த்தபடி அமர்ந்திருந்தாள் சாந்தினி. சாதாரண ஆடை தான் அணிந்திருக்கிறாள். ஊசிக் காற்றில் சாளரக் கண்ணாடிகளையும் ஊடுருவிக் காற்று சிறிதாக உள்ளே வந்தபடி தான் இருக்கிறது. ஆனாலும் சமரில் வெப்பமாக இருப்பதுபோல் அறை கதகதப்பாக இருப்பதனால் குளிரவே இல்லை. கிட்டத் தட்ட நாற்பது ஆண்டுகள் இந்த நாட்டில் வாழ்ந்து முடித்து விருட்சமாய் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என... கையில் வைத்திருக்கும் காகிதங்களைக் குனிந்து பார்த்தாள். காகிதங்கள் காற்றுப் பட்டு ஆடுகின்றனவா? அல்லது தன் மனதின் அதிர்வில் ஆடுகின்றனவா என்று புரியவில்லை சாந்தினிக்கு.

எல்லாம் ஓய்ந்து போகப் போகிறது. இந்த உலகம், ஊர்கள், உறவுகள், நண்பர்கள் தெரிந்தவர் போனவர் எல்லாமே என எண்ணியபோது சாந்தினிக்கு மனம் எண்ண முடியாத வேதனையை உணர்ந்தது. எத்தனை காலம் அவள் இப்பூமியில் வாழ்ந்துவிட்டாள். எண்ணிலடங்கா மகிழ்வை அனுபவித்திருந் தாலும் இப்போ கொஞ்ச நாட்களாக மனதில் எழும் வேதனை சொல்ல முடியாததாகி மனதுள்ளே குமைந்து குமைந்து அவள் அனுபவிப்பதை என்னவென்று சொல்லி யார் விளங்கி...

சில நாட்களாக அவள் மனதிலோடும் எண்ணத்தைச்

செயற்படுத்தும் துணிவு அவளுக்கு இருக்கிறதுதான் எனினும் இவ்வுலகில் மீண்டும் இந்த உறவுகளுடன் வாழவே முடியாதே என்னும் ஏக்கமும் அதனால் எழும் அங்கலாய்ப்புமே அவளை அடிக்கடி துன்புறுத்திய வண்ணம் இருக்க, இன்னும் கொஞ்ச நாட்கள் அல்லது மாதங்கள் பொறுத்திருப்போம் என மனம் ஆசை கூட்ட, கண்களை மூடி ஒரு ஐந்து நிமிடங்கள் இருந்தவள், மனதைத் திடப்படுத்திக்கொண்டு அந்தப் படிவத்தில் கையொப்பம் இட்டு மேசையில் வைத்தாள்.

***

சாந்தினி குளிராடைகள் அணிந்துதான் இருக்கிறாள். கீற்றர் இன்னும் போடப்படவில்லை. மகன், மருமகள், பேரப் பிள்ளைகள் எல்லோரும் இன்னும் தூக்கத்திலிருந்து எழும்பவில்லை. இன்று சனிக்கிழமை என்பதால் அவர்கள் எழும்ப எட்டு ஒன்பது செல்லும். அவர்களுக்குக் குளிர்ந்தால் மட்டும் தான் இந்த வீட்டில் கீற்றர் போடுவார்கள். இவளுக்குக் குளிரும் என்று யாருமே எண்ணிப் பார்ப்பதில்லை. இரண்டு மூன்று தரம் இவளும் குளிருது எண்டு மகனிடம் சொல்லிப் பார்த்ததுதான். "வெள்ளன எழும்பி என்ன அம்மா செய்யப் போறியள். படுத்து இருக்கிறதுதானே" என்றதுடன், "நல்ல மொத்த யம்பரைப் போட்டுக்கொண்டு காலுக்கு பெட்சீற் சுத்திக்கொண்டு இருந்தால் குளிராது தானே அம்மா" என்றதன் பின்னர் சாந்தினி ஒன்றும் சொல்வதேயில்லை. கால்கள் இரண்டும் செயலிழந்து சுரணையே இல்லையே. இதில் கால் ஏன் குளிரபோகுது? உடல் எல்லோ குளிருது என்று சொல்ல எண்ணியதையும் சொல்லாது மனதில் மட்டுமே சொல்லிக் கொண்டாள்.

சின்ன வயதில் இவனுக்குக் குளிரும் என்று தேடித்தேடி உடுப்புகள் போட்டுவிடுவதும், இவன் களட்டி எறியும் சொக்சைப் பார்த்துப் பார்த்துப் போடுவதிலுமே இவளின் நேரம் பாதி போய்விடும்.

முன்பெல்லாம் இவளுக்குக் குளிர்வதில்லை. கீற்றர் போட்டவுடன் மூக்குக் கண் எல்லாம் கடிக்கும். உடல்

வேர்க்கும். இருந்தாலும் பிள்ளையளுக்குக் குளிருமே எண்டு இவள் தன் துன்பத்தைச் சகித்திருக்கிறாள். இப்பவும் அதேதான் தொடர்கிறது.

இப்ப கொஞ்ச நாளாத்தான் இவளுக்கு வெள்ளனவே விழிப்பு வந்துவிடுகிறது. நாள் முழுதும் தூங்குவதும், தூங்காமல் விழித்திருப்பதும், எழுந்தால் இந்த யன்னலூடு வெளியே பார்ப்பதும் தானே இவளது வேலை.

சாப்பிடும் வேலையும் இருக்குத்தான். ஆனாலும் அதுக்குக் கூட இப்ப மனம் வருகுதில்லை. கீழே ஒரு அறை இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஆனால் என்ன செய்வது இந்த மகனின் வீடு அத்தனை வசதியாக இல்லை. இவன் சுதன் நினைத்தால் கீழே ஒரு அறையைக் கட்ட முடியும் தான். மருமகள் விட மாட்டாளே. கீழே ஒரு சிறிய அறை இருக்கிறதுதான். அங்கே இவளை மாற்றி விட்டால் நன்றாக இருக்கும் என எத்தனையோ நாட்கள் இவள் எண்ணியிருக்கிறாள். ஆனால் வாய் திறந்து ஒருமுறை கேட்டதோடு சரி. அந்த அறையில் பிள்ளைகள் படிப்பதற்கு எனக் கணனியும் மேசை கதிரைகளும் புத்தக அலுமாரியுமாக...

அப்பப்போ பிள்ளைகள் மகன் மருமக்கள் எல்லாம் சிரித்துக் கதைப்பது கேட்கும். தானும் அவர்களுடன் சேர்ந்து கதைக்க மனம் ஏங்கும். பேரப்பிள்ளைகளின் கதைகளை, அசைவு களை, சின்னச்சின்ன சண்டைகளை மருமகளின் வெருட்டல் உருட்டலையும் மகனின் அடங்கிய குரலையும் கேட்கக்கேட்க நடக்கேலாமல் படுத்திருக்கிறேனே என்னும் வெறுப்பும் கூடவே எழும். பிறகும் எதுவுமே செய்ய முடியாது ஆசைகளை ஆதங்கங் களை அடக்கியபடி சும்மா இருக்கத்தான் முடிகிறது.

கடந்த ஆண்டுவரை அவளது நண்பி பாமா இவளுக்கு மிக்க துணையாக அடிக்கடி தொலைபேசியில் கதைத்து இரு வரும் தத்தமது ஆதங்கத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். அதற்கும் மருமகள் புறுபுறுப்பதுதான் என்றாலும் சாந்தினி அதை விளங்கியதுபோல் காட்டிக்கொண்டதே இல்லை. அவள்

திடீரென இறந்த பின்னர் சாந்தினிக்கு நடுக்காட்டில் யாருமின்றி விட்டதுபோல் பயமும், தனிமையும், சுய பச்சாதாபமும் மேலோங்கி வயோதிகத்தைப் புரிந்து கொள்ளா மனிதர்களுடன் ஒவ்வொரு நாளையும் நகர்த்துவது பெரும் பாடாய்ப் போனது.

இன்று காலை அவள் நித்திரையால் எழும்பினாலும் பல் தீட்டாது கன நேரமாய் படுத்தே இருந்தாள்.

வைத்தியசாலை போல் இருந்தாலும் இவர்கள் எல்லாம் எத்தனை சகிப்புத் தன்மையோடு எம்மை எல்லாம் பராமரிக் கின்றனர் என எண்ணியபோது வியப்பாக இருந்தது. இவள் மணியை அழுத்த அவர்கள் இவளுக்கு பல்லுத் தீட்ட, சிறுநீர் கழிக்க, குளிக்க என்று எந்த முகச்சுளிப்புமின்றி எல்லாம் செய்து உடை மாற்றி மீண்டும் கட்டிலில் கொண்டுவந்து விட்டபின், உனக்கு விருப்பம் என்றால் உன்னுடன் நிற்பதற்கு உன் பிள்ளை களை நீ அழைக்கலாம் என்று கூறிவிட்டு இவளை அன்போடு பார்த்தாள் அந்தப் பெண். வேண்டாம் என்ற சாந்தினியின் தலை யாட்டலை விளங்கிக்கொண்டு இவளுக்குக் காலை உணவை இவளுக்குப் பக்கமாக நகர்த்திவிட்டுச் சென்றபின், கண்களில் கண்ணீர் முட்டி வழிவதா வேண்டாமா என்று காத்திருக்க, பிள்ளைகளைக் கண்டால் என்னையறியாமலே என் மனம் மாறியும் விடலாம் என்று எண்ணியவளாய், உணவை மெது மெதுவாய் இருக்கும் சொற்ப பற்களால் கடித்து உண்ண ஆரம்பித்தாள் சாந்தினி.

கணவன் இருந்த வரை அவளை எல்லோரும் மரியாதை யுடன் தான் நடத்தினார்கள். ஏனெனில் கணவனும் அவளும் தனி வீட்டில் சுதந்திரமாக இருந்து, சமைத்துச் சாப்பிட்டுக் கோவிலுக் குப் போய் எல்லாம் நன்றாகத்தான் போய்க்கொண்டு இருந்தது அவர் இறக்கும் மட்டும். ஐம்பது ஆண்டுகள் கூடிவாழ்ந்த அவர் இறந்தபின் அதிர்ச்சியில் அவளுக்கு பாரிசவாதம் வந்து ஆறு மாதங்கள் படுத்த படுக்கையாய் வைத்தியசாலையில் இருந்து அவளுக்கு நோய் பாதி குணமாகி வீட்டுக்குப் போகலாம் என்ற போதுதான் பிள்ளைகளுக்கிடையில் அம்மாவை யார் வைத்

திருப்பது என்று பிடுங்குப்பாடு வந்தது. கடைசியில் கடைசி யாகப் பெற்ற சுதன், தான் தாயை வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டான். நடக்க முடியாமல் இருப்பவரை வைத்திருக்க ஆருக்குத்தான் ஆசை வரும் என்று இவளுக்குமே புரிய, "அந்தா ளோட நானும் போயிருக்கக் கூடாதா? கடவுளே நான் என்ன பாவம் செய்தன் இப்பிடிக் கிடக்க" என்று மனதுள் அழ மட்டுமே முடிந்தது.

முன்பெல்லாம் காலை எழுந்து குளித்துவிட்டு வந்து தான் மிச்ச வேலை எல்லாம். இப்ப வாரம் இருமுறை என்றிருந்து ஒருமுறைதான் முழுக்கு என்றாகிவிட்டது. இவளால் தனிய கன நேரம் நின்று குளிக்கமுடியாது. ஒருக்கா இவள் தடக்கி விழுந்த பிறகு, தான் நிக்கும்போதுதான் குளிக்கவேணும் என்று மகன் சொல்லிவிட்டான். அதன் பிறகு மாலையில் மகன் வேலையால வந்த பிறகுதான் குளிப்பு முழுக்கு எல்லாம். தோலெல்லாம் சுருங்கி வற்றிவிட்டாலும் குழந்தைப் பிள்ளையைப் போல் மகன் சாந்தினியைத் தூக்கிக்கொண்டு போய் கதிரையில் இருத்தி குளிக்க வர்க்க தன்னை அறியாமலே ஒரு கூச்சம் எழும். ஆனாலும் அடக்கியபடி இருக்கத்தான் முடிகிறது.

இப்ப கொஞ்ச நாளாக இடுப்புக்குக் கீழே உள்ள பாகங்கள் செயலிழக்கத் தொடங்கிவிட்டன. இனிமேல் அதுக்கும் மற்ற வரை எதிர்பார்த்து அவர்களின் முகச்சுளிப்போடு... நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவளால். அந்த நிலை வரும்வரை இருக்கக் கூடாது என்ற வைராக்கியம் மட்டும் மனதில் எழுந்தது.

சுதன் ஒன்றும் சும்மா வைத்திருக்கவில்லை சாந்தினியை. கவுன்சிலில் இருந்து தாயைப் பராமரிக்க என்று குறிப்பிட்ட தொகையைப் பெறுகிறான் தான். ஆனாலும் தாய்க்கு தான் எந்த உதவியும் பெற்றுக்கொள்ளாமல் தன் செலவில் பார்ப்பதுபோல் வருபவர்களிடம் கூறுவதை சில நேரங்களில் சாந்தினி கேட்டும் கேட்காததுபோல் இருந்துவிடுவாள். என்ன இருந்தாலும் அவன் தானே பாக்கிறான். பிள்ளையை ஏன் மற்றவர்கள் முன்னால் விட்டுக் கொடுப்பான் என எண்ணி மனம் அமைதியடையும்.

மற்றப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் எப்போதாவது வந்து போவார்கள். மூத்தவன் வந்து ஒரு அரை மணித்தியாலம் சாந்தினியோடு கதைத்துக்கொண்டிருந்துவிட்டுப் போனாலும் மருமகள் அந்தி பூத்தாற்போல் வந்து போவதுடன் சரி. இரண்டாவது மகன் கொலண்டில் இருப்பதால் தொலைபேசியில்மட்டும் வாரம் ஒருநாள் கதைப்பதும் ஆண்டில் ஒருதடவை வருவதும் கூட இப்ப அருகிவிட்டது. தூர இருப்பவனைப் பார்க்க மனம் ஆசை கொள்வது இயல்புதான் என்றாலும் அவைக்கும் எத்தனை வேலைகள், பேரப்பிள்ளைகள் படிப்பு என்று இவளால் தன் ஏக்கத்தை ஒருபுறம் தள்ளி வைக்க மட்டுமே முடிந்தது. ஒரு பொம்பிளைப் பிள்ளை இருந்திருந்தால் இப்பிடி என்னைத் தனிய விட்டிருக்காது " என்று மனம் அங்கலாய்க்கும்.

என்ன எண்ணி என்ன, எல்லாம் விதி என்று மனதை ஆற்ற எண்ணினாலும் ஆறாமல் கிடந்தது உழலும் மனதை என்னதான் செய்வது என்று அவளுக்குமே புரியத்தான் இல்லை.

***

கீழ் மாடி எண்டால் எப்பிடியும் கோலுக்குள்ளை ஆராவது ஒருத்தர் நடமாடிக்கொண்டு இருப்பினை. இந்த அறைக்குள்ள நாலு சுவரையும், கிடக்கும் ஒரு அலுமாரி ஒருமேசையையும் தவிர என்ன கிடக்குப் பார்க்க ? இன்னும் ஒருக்கா மகனைக் கேட்டுப் பாப்பமோ என்று எழுந்த ஆசையை முன்பு கேட்ட போது நடந்தது நினைவில் வந்து அடக்கியது.

“பிள்ளையளின்ரை வசதி முக்கியமோ உவவின்ரை முக்கியமோ. பிள்ளையளை மேல விட்டால் என்ன செய்யிறாங்கள் என்று தெரியாது. இவ்வளவு காலம் அனுபவிச்சது பத்தாதே” என்று மருமகள் சாந்தினியின் காதுபடச் சொன்னது இப்பவும் நெஞ்சை அதிரப் பண்ண எதுவும் தோன்றாமல் அமர்ந்திருந்தாள் சாந்தினி.

இப்பிடி நடமாட முடியாதவர்களுக்காக இங்க எத்தினையோ வயோதிப இல்லங்கள் இருக்குத்தான். ஆனாலும் சொந்தங்கள் பார்ப்பது போல் ஆர் பாக்கப் போயினம். அதோட அங்க

நடக்கிற அநியாயங்களை அவள் பலதடவை தொலைக் காட்சி யில் பார்த்தும் இருக்கிறாள் தானே. "தம்பி என்னைக் கடைசி வரை அங்க விட்டுடாதை" என்று மகனுக்குச் சொன்ன போது மகனுக்கும் கண்கலங்கிப் போனதை இவளும் கவனிச்சவள் தான். "நான் கொண்டு போய் விடமாட்டன் அம்மா" என்று தாயின் கைகளைப் பிடிச்சுக்கொண்டு சொன்னவன்தான். ஆனாலும் மரு மகள் இப்பவெல்லாம் பலதடவை காதுபடவே "என்னாலை உந்தப் பம்பஸ் மாத்திற வேலை எல்லாம் செய்ய ஏலாது. கொண்டே கோமிலை விடுங்கோ" எண்டு கத்த "அம்மாக்குக் கேட்கப் போகுது" எண்டு அவன் மனைவியைத் தள்ளிக்கொண்டு வெளியே சென்று வாக்குவாதப்பட்டதும் தான் இவளுக்கு மனதில் அந்த யோசனை வந்தது.

இவள் ஒன்றும் ஒன்றுமே தெரியாதவள் இல்லை. ஆங்கில அறிவும் மற்ற அறிவுகளும் உள்ள ஒருத்திதான். ஒரு கடையில் சுப்பவைசராக இருபத்தைந்து ஆண்டுகள் வேலையும் செய்து இப்ப பென்சனும் எடுப்பவள் தான். அப்பிடிப்பட்டவளையே வயது போட்டுது எண்டவுடன இப்பிடி வீட்டுக்குள் அடைத்து வைத்திருக்கிறானே மகன். அப்ப படிக்காமல் வேலைவெட்டி செய்யாமல் பிள்ளையளையும் புருசனையும் நம்பி வாழுற பெண்களுக்கு என்ன நிலை என்று மனதில் அவர்கள் பால் சிறிது பச்சாதாபமும் எழுந்தது.

ஆரம்பத்தில் இவளுக்குக் கூட அறையில் டிவி ஒன்றும் இல்லை. கொலண்டிலிருந்து இரண்டாவது மகன் வந்தபோது என்னம்மா வேணும் உங்களுக்கு என்று கேட்க, "ஒரு பழைய டிவி எண்டாலும் ஒண்டு இருந்தால் பொழுது போகும் மகன்" எண்டதில், அவன் புதிதாகவே ஒரு சிறிய டிவி வாங்கிக் கொடுத்துவிட்டுப் போனான்.

அது வாங்கினது எவ்வளவு நல்லதாகிவிட்டது இப் பொழுது என்று தனக்குள் தானே மகிழ்ந்தாள் சாந்தினி. அது இல்லாவிட்டால் தானும் இந்த நரகத்தில் சாகும் வரை உழன்று கொண்டே இருந்திருப்பேன் என எண்ணியவள் யாரும் வீட்டில்

இல்லை என நிச்சயம் செய்துவிட்டு தொலைபேசியை எடுத்தாள்.

***

இன்னும் ஒரு மாதத்தில் அவள் இந்தப் பூமிக்கு வந்து எண்பது ஆண்டுகள் ஆகப்போகிறது. மாலையில் மகன் வேலை யால் வந்து சாப்பிட்டு முடித்து மேலே இவளிடம் வந்து இவளை சுகம் விசாரித்தபின் இவள் மெதுவாகத் தயங்கித் தயங்கி ஆரம்பித்தாள். "தம்பி எனக்கு எல்லாச் சொந்தக்காறறையும் பாக்க வேணும் போல இருக்கு" என்றவுடனேயே உங்களைக் கூட்டிக்கொண்டு "என்னை வீடுவீடாப் போகச் சொல்லுறி யளோ" என்று அவன் பாய்ந்தபோது அதை எதிர்பார்த்து இருந்ததால் சாந்தினி அசரவில்லை.

"என்னப்பன் உங்களைப் பெத்து வளத்து ஆளாக்கினதுக்கு நான் கேக்கிற ஒரு உதவியைக் கூடச் செய்ய மாட்டியளோ" என்று குரலைக் கொஞ்சம் உயர்த்தியே இவள் கேட்டாள். நீங்கள் ஒண்டும் என்னை வீடுவீடாக் கொண்டு போக வேண்டாம். எல்லாரையும் ஒரு இடத்துக்குக் கூப்பிடுங்கோ என்று இவள் கூறியதுதான் தாமதம், "உங்களுக்கு என்ன விசரோ அம்மா" என்றான் பிள்ளை சத்தமாக.

"எனக்கு எண்பது வயது வருது. அதுக்கு வரச்சொல்லிக் கூப்பிடு" என்றதும் மகனின் முகத்தில் எள்ளல் தெரிந்தது. "உவவுக்கு பேத்டே கொண்டாடுற ஆசை வந்திட்டுதோ அப்பா. உந்த வயதில நல்ல ஆசைதான்" என்றபடி உள்ளே வந்த மரு மகளைச் சட்டை செய்யாது, "ஆசை எண்டே வச்சுக் கொள்ளுங்கோ. நீங்கள் ஒண்டும் பணம் சிலவழிக்கத் தேவை இல்லை. என்ரை தாலிக்கொடி கிடக்கு. அதை வித்துப்போட்டு வீட்டுக்குப் பக்கத்தில கிடக்கிற கோலை புக்பண்ணி எல்லாரை யும் அம்மாக்குப் பிறந்த நாள் எண்டு கூப்பிடுங்கோ. சாப்பாடும் ஓடர் செய்யுங்கோ. உங்களுக்கு எந்தச் சிலவும் இராது" என்று சொல்லிவிட்டு நீங்கள் போகலாம் என்பதுபோல் மகனைப் பார்த்தாள் சாந்தினி.

எதோ சொல்ல வாயெடுத்த மனைவியை கண்காட்டி வெளியே கூட்டிச் சென்றான் மகன். "சத்தம் போடாதையப்பா. மனிசி இனி எவ்வளவு நாளைக்கு இருக்கப் போகுதோ. சரி அவவின்ர ஆசையை ஏன் கெடுப்பான்" என்று கூறியது சாந்தினிக்குக் கேட்டதாயினும் அதற்குப் பதிலாக மருமகள் முணுமுணுத்தது விளங்கவே இல்லை.

ஒரு வாரமாக மருமகள் மனதுக்குள் சாந்தினியைத் திட்டித் திட்டி எல்லாரையும் பிறந்த நாள் விருந்துக்கு அழைக்க "அட சாந்தினியின்ர மகனைப் பாரன். தாய்க்கு பிறந்தநாள் செய் கிறான். குடுத்து வச்ச மனிசி" என்று எல்லாரும் தம்முள் கதைத்துக் கொண்டனர் மனிசி கொடுத்தது தாலிக்கொடியை என்று தெரியாமல்.

***

தாலிக்கொடி காசாகி சாந்தினிக்கு ஒரு நல்ல பட்டுச் சீலை யும் வந்துசேர, சாந்தினியின் பிறந்த நாள் அன்று இரு உறவினர் கள் வந்து மருமகளுடன் சேர்ந்து அவளை வெளிக்கிடுத்தி சாந்தினியின் இரட்டை வடச் சங்கிலி, இரண்டு சோடி காப்பும் போட்டு அலங்கரிச்சு, முடிமயிர் வச்சு ஒரு பெரிய கொண்டையும் போட்டு முடிய, சந்தோசப்படுவதற்குப் பதிலாக மனம் முழுதும் பாராமாகிச் சுமக்க முடியாத அவஸ்த்தையானது சாந்தினிக்கு.

கொலண்டிலிருந்து வந்திருந்த இரண்டாவது மகனும் நேற்று முதல் குடும்பத்துடன் வந்து இங்குதான் நிக்கிறான். இரண்டு மக்களுமாக சாந்தினியை தூக்கிக் கொண்டு வந்து மகனின் ஜீப்பில் இருத்தி மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். மண்டபத்துள் இவளைக் கூட்டிக்கொண்டு போனதும் எல்லாரும் எழும்பி வெள்ளைக்காரர் செய்வது போல் கைகளைத் தட்டி இவளை வரவேற்க இவளுக்குக் கூச்சமாகப் போய்விட்டது.

நடுவில் போட்டிருந்த பெரிய சிம்மாசனம் போன்ற இருக்கையில் இவளை இருத்த, இவளுக்கு என்னவோ போல் இருந்ததுதான் என்றாலும் மண்டபம் நிறைய உறவினர்கள்

நண்பர்களைப் பார்க்க மனதில் இன்பமும் துன்பமும் மாறிமாறி எழுந்தன. மண்டபத்துக்கு வந்திருந்த மூத்த மகன் தனக்குத்தான் முதல் உரிமை அம்மாவில் என்பதுபோல மைக்கை வாங்கி வந்திருந்த எல்லோருக்கும் வருகை தந்தமைக்காக நன்றியும் கூறி வரவேற்க, அம்மாவைப் பற்றி ஆகா ஓகோ என்று மற்ற மகன்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் எல்லோரும் புகழ்ந்து புளுக, ஒரு புன்சிரிப்புடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சாந்தினி.

அம்மாவுக்காகச் செய்வித்த பெரிய கேக்கைப் பிள்ளைகள் சூழ நின்று அம்மாவைக் கொண்டு வெட்டுவித்து அம்மாவுக்குத் தீத்தி, தாமும் அம்மாவின் கையால் வாங்கி உண்டு... பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவர்களின் பாசம்கண்டு மனம் பூரித்து தாம் தம் பெற்றோருக்குச் செய்யவில்லையே என்னும் ஆதங்கத்தையும், இதைவிட தம் பெற்றோருக்குச் சிறப்பாகச் செய்யவேணும் என்னும் நினைப்பையும் கொடுக்க, சாந்தினி மட்டும் மனதுக்குள் பலவித அல்லாடல்களோடு எல்லாவற்றை யும் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

பிள்ளைகளைக் குறை சொல்ல முடியாதபடி எல்லாரும் ஓடியோடி அனைவரையும் உபசரிக்க அனைவரும் மகிழ்வாக உண்டும், சிலர் சாந்தினிக்குப் பக்கத்தில் கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டும் ஊர்க்கதை உலகத்துக்கதை எல்லாம் கதைத்து முடிய, சாந்தினியோடு நின்று எல்லாரும் படம் எடுக்க ஆரம்பிக்க, மைக்கை ஒருக்காக் கொண்டா தம்பி என்று அதை வாங்கி "எல்லாரும் என்ர பிறந்த நாளுக்கு வந்து என்னை சந்தோசப்படுத்தினதுக்கு மிக்க நன்றி. ஆனால் படம் எடுத்துப் போட்டு உடன எல்லாரும் போயிடாதேங்கோ. எல்லாரும் படம் எடுத்து முடிய நான் உங்களுக்கு ஒண்டு சொல்லப்போறன். அதைக் கேட்டுட்டுப் போங்கோ" என்றதும் மண்டபத்தில் சலசலப்பு எழுந்தது.

பிள்ளைகள் மூண்டுபேரும் என்ன அம்மா இது என்று, தம்மைப் பற்றித்தான் தாய் ஏதேனும் உளறி வைக்கப்

போகின்றாவோ என்று முகம் முழுதும் பயம்தெரிய வந்து நிக்க, ஒண்டும் இல்லை பயப்பிடாதேங்கோ என்று விட்டு, வாங்கோ படம் எடுக்க என்று நிலைமையை வழமையாக்க, வந்திருந்தவர் கள் குடும்பம் குடும்பமாக வந்து நின்று சாந்தினியுடன் நின்று படம் எடுக்க ஆரம்பித்தனர்.

***

அனைவரும் ஒருவித எதிர்பார்ப்புடன் படம் எடுத்த பின்னும் போகாது காத்திருக்க, சாந்தினி அருகிலிருந்த மைக்கை நடுங்கும் கைகளால் எடுத்தாள்.

"என்ர பிள்ளையள் மூண்டுபேரும் என்னை முதல்ல மன்னிக்க வேணும். பிள்ளையளுக்கு மட்டும் இதைச் சொல்லி யிருந்தால் அவை கடைசிவரை இதுக்குச் சம்மதிச்சிருக்க மாட்டினம். அதாலைதான் எல்லாருக்கும் முன்னால வச்சுச் சொல்லுறன்" என்றதும் பிள்ளைகளிலும் விட மனைவிமாரின் இதயம் வேகமாக அடிக்கத் தொடங்க, எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் சாந்தினி தொடர்ந்தாள்.

"நான் இந்த உலகத்தில இருக்கப் போறது இன்னும் சில வாரங்கள் தான்" என்று அவள் முடிக்க முன்னர் மண்டபத்தில் பெரும் இரைச்சல் எழுந்தது. "தயவு செய்து எல்லாரும் அமைதி யாக் கேளுங்கோ. எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. என்ர பிள்ளையள் என்னை நல்ல வடிவாத்தான் பாக்கினம். ஆனால் நான் நோயாளியாகிப் பிள்ளையளுக்குப் பரமா இருக்க விரும் பேல்லை. அதனால பிள்ளையளைக் கேட்காமலே நான் இறந்து போறதுக்கு முடிவெடுத்திட்டன்" என்றதும் "அம்மா உங்களுக்கு விசரே" என்றபடி நெருங்கி வந்த பிள்ளைகள், தாயின் தீர்க்கமான பார்வையையும், எதுவும் கதைக்க வேண்டாம் என்று தாய் காட்டிய சைகையையும் பார்த்து செய்வதறியாது நிற்க, சாந்தினி தொடர்ந்தாள்.

"நடக்க முடியாமல் இருக்கும் போதே என்னால பிள்ளை கள், மருமக்களுக்குத் துன்பம். ஏதும் நோய் வந்து படுத்த படுக்கையானா... என்னால நினைச்சுப் பார்க்கவே முடியேல்லை.

தற்செயலா ஒருநாள் தொலைக்காட்சி பாக்கேக்கை Euthanasia பற்றி அறிஞ்சனான். அதால சுவிசில இருக்கிற அந்த நிறுவனத் தோட நான் தெளிவாக் கதைச்சிட்டன். என்ர லைப் இன்சூரன்ஸ் இன்னும் சில நாளில முப்பது ஆண்டுகள் முடியப்போகுது. ஒரு குறிப்பிட்ட காசு தருவினம். அந்தக் காசு இந்தச் செலவுகளுக்கும் செத்தவீட்டுச் செலவுக்கும் போதும். அவையே என்னைப் பொறுப்பெடுத்து கூட்டிக்கொண்டு போய் என்ர உடலை இங்கே திருப்பக் கொண்டு வந்தும் தருவினம். எல்லாரும் என்னை மன்னிச்சு சந்தோசமா வழியனுப்பி வைக்கவேணும்" என்றுவிட்டு மைக்கை மேசையில் வைக்க, சின்னச் சத்தம் கூடக் கேட்காமல் மரண அமைதியாகிப் போன மண்டபத்தில் மைக்கின் சத்தத்தம் டொாங் என்று பெரிதாய்க் கேட்டது.

Euthanasia - கடும் நோய் வாய்ப்பட்டுள்ளவர்கள் தாமாக விரும்பி மரணிக்கும் ஒரு இடம். சுவிஸில் இருக்கிறது

# விதியின் சதி

டிசம்பர் மாதம் என்று சொல்ல முடியாதவாறு வானமும் நிலமும் வெயில் குடித்துக் கிடந்தது. இன்னும் பத்து நாட்களில் அடுத்த ஆண்டு வந்துவிடும். சில்லென்ற காற்று வீசுவது யன்ன லூடாக வெளியே அசையும் மரங்கள் உணர்த்தின. குளிர் காலத்தில் வெயில் வந்தாலே லண்டனில் ஒரு ஊசிக் காற்றும் அதனோடு சேர்ந்து வீசும்.

அபிக்கு அந்தக் காற்றைப் பார்க்க வெளியே செல்லவே மனமின்றி இருந்தது. ஆனாலும் என்ன செய்வது வேலைக்குச் செல்லத்தானே வேண்டும். அண்ணனின் உழைப்பில் சாப்பிட முடியுமா? என மனம் கேட்டுக்கொண்டது.

அபியின் அண்ணன் வசந்தன் லண்டனில் ஆறு ஆண்டு களாக வசிக்கிறான். Permanant Residence கிடைத்துவிட்டதுதான். ஆனாலும் தங்கைக்கும் மகேந்திரனுக்கும் ஏயென்சியில் கட்டின காசுக்கடன் இன்னும் முடிந்தபாடு இல்லை. அதனால் இரவு பகல் என்று வேலை. இந்த ஒருவருடத்தில் பன்னீராயிரம் கடன் அடைத்தாயிற்று. இன்னும் மீதியையும் அடைத்து அபியையும் திருமணம் செய்து குடுத்தபின்தான் அவனின் வாழ்வை எண்ணிப் பார்க்கலாம்.

அபி யன்னலை விட்டு நகர்ந்து கொஞ்சம் ஆறிப்போய் இருந்த மிகுதித் தேநீரையும் குடித்து முடித்துவிட்டு குசினிக்குள்

சென்று கப்பையும் கழுவி வைத்துவிட்டு வெளியே போவதற் காக ஆடைகளை அணிந்து கைப்பையைத் தூக்கியதும், அதற் குள் பிரயாணச்சீட்டு இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துக் கொண்டாள். ஒரு மாதத்துக்குரிய பயணச்சீட்டு என்பதனால் இவள் பயன்படுத்தாத நேரம் தமையனுக்குத் தேவைப்படும் போது அவனும் பயன்படுத்துவதுண்டு. அது ஒன்று லண்டனில் நல்ல விடயம் என எண்ணியவள், கைப்பையை நன்றாகக் கொட்டி ஒவ்வொன்றாகப் பார்த்தாள்.

அண்ணன் மறந்துபோய் தனது மட்டையைக் கொண்டு போய்விட்டது அப்போதுதான் நினைவில் வர வீணாக இன்று 4.40 பவுன்ஸ் நட்டம் என்று மனதுள் எண்ணியபடிமீண்டும் பொருட்களைப் பையுள் போட்டபோது மகேந்திரனின் படம் சிரித்தபடி கண்ணில் பட்டது. யோசனையோடு அதனை மீண்டும் கைப்பையுள் வைக்காது தன் உடைகள் வைக்கும் தட்டில் வைத்துவிட்டு, அண்ணனுக்கு எப்படியும் நான் ஒரு வாரத்தில் முடிவு சொல்ல வேண்டும் என்பது மனதை உறுத்த, இப்படி ஒரு நிலை யாருக்கும் வரவே கூடாதென எண்ணியபடி கைப்பையை எடுத்துக் கொண்டு இறங்கி நடந்தாள்.

***

மகேந்திரனை அபி தொண்டு நிறுவனம் ஒன்றில் வேலை செய்த போதுதான் சந்தித்தது. அவளும் கூட அங்கு வேலை செய்தவள் தான். அவனை அடிக்கடி சந்திக்க நேர்ந்ததும் அவனின் அன்பான பேச்சும் கெட்டித்தனமும் அவளை மட்டு மல்ல எல்லோரையுமே வசீகரித்ததுதான் எனினும் அவனின் அன்புக்குரியவளாக அபியே ஆனதில் அவளின் சந்தோசம் எல்லைகளற்று விரிந்தது. அவனை விசாரணை என்ற பேரில் கைதுசெய்து கொண்டு சென்றபோது அவள் பட்ட துடிப்பும் வேதனையும் சொல்லி முடியாது. ஒருவாறு தொண்டு நிறுவனத் தார் தலையிட்டு அவன் எந்தவித சேதாரமும் இன்றி விடுவிக்கப் பட்டான்.

அப்போதுதான் அவனை இனியும் இங்கு இருக்க விடுவது

நல்லதல்ல என்று தோன்ற, இவள் தமையனுக்கு போன் செய்து அவனை வெளிநாட்டுக்குக் கூப்பிட ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக் கொண்டாள். தாயும் தமையன் வசந்தனும் ஏற்கனவே மகேந் திரன் விடயம் அறிந்திருந்ததால் இரண்டுபேரும் வெளி நாடு வாற ஒழுங்கைச் செய்யும்படியும் தான் காசை அனுப்பு கிறேன் என்றவுடன் அபிக்குத்தான் தாயைத் தனியே விட்டு விட்டு வருவதோ என்று மனம் அங்கலாய்த்தது. இறுதியில் ஆசை வென்று விட இருவரும் தாயையும் கூட்டிக்கொண்டு கொழும்புக்கு வந்தனர்.

வசந்தனே லண்டனில் இருந்தவாறே ஏஜென்சியை ஒழுங்குசெய்து பணமும் அரைவாசி கொடுத்தபடி கிட்டத்தட்ட ஆறு மாதங்களின் பின்னர் இருவருக்கும் பிரையாண ஒழுங்கு சரி வந்தது. ஆனாலும் அதிலும் ஒரு சிக்கல் எழுந்தது. இருவரும் சேர்ந்து போக முடியாது என்று கூறி ஏஜென்சி தனித்தனியாகச் செல்வதற்கு ஒழுங்குசெய்து வேறு வழியே இன்றி அபியும் சம்மதிக்க வேண்டி வந்தது. தாயிடம் கண்ணீருடன் விடை பெற்று விமானம் ஏறினாள் அபி.

ஒரு வாரத்தில் மகேந்திரனும் வேறு பாதையால் புறப் பட்டிருந்தான். அபி ஒருவனின் மனைவியின் புத்தகத்தில் அழைத்துவரப்பட்டதனால் எந்தவிதப் பிரச்சனையும் இன்றி வந்துசேர மகேந்திரன் உடனே வந்துசேர முடியாமல் தாய் லாந்தில் தங்கவேண்டியதாகிவிட்டது.

இந்தா அந்தா என்று இப்ப ஒருவருடங்கள் முடியப் போகிறது. இப்ப ஆறு மாதங்களாக மகேந்திரனிடம் இருந்து எந்தத் தொடர்பும் இல்லை. ஆறு மாதங்களுக்கு முன் ஏயென்சி நாளைக்கு அனுப்பப் போறன் எண்டு ஒரு போன் செய்ததுதான். இவளும் வந்துவிடுவான் வந்துவிடுவான் என்று திருமணக் கனவில் மிதந்ததுதான் மிச்சம். அவன்தான் வந்தபாடு இல்லை.

போன வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து அம்மா போன் செய்து சொன்ன செய்திதான் வசந்தனுக்கு மனக்கலக்கத்தைக் கொடுத்துக் கொண்டு இருந்தது. மகேந்திரனதும் அபியினதும்

சாதகத்தைக் கொண்டுபோய் ஒரு சாத்திரியிட்டைக் காட்ட அவர் மகேந்திரனின் சாதகத்தைப் பார்த்துவிட்டு இவர் இப்ப உயிருடனேயே இல்லை என்று அடித்துக் கூறியதையும் அம்மா உடனே மயங்கி விழுந்ததையும் பக்கத்துவீட்டு மலர் அக்கா போனில் சொன்னபோது இவன் சாத்திரி சொன்னதை நம்ப வில்லை. இரு நாட்கள் கழித்து அம்மாவே தொலைபேசியில் கதைத்தபோது "சாத்திரி சொன்னா தப்பாதடா வசந்தன். அந் தாள் சொல்லி ஊரில ஒண்டும் நடக்காமல் விட்டதில்லை". அம்மா புலம்பியபடி சொல்ல இவனுக்கும் யோசனையாக இருந்தது.

அதன்பின் இவன் பலரிடமும் மகேந்திரன் பற்றி விசாரித்தும் எந்தத் தகவலும் கிடைக்காது போக இவனால் அந்த முடிவை எடுப்பது தவிர வேறு வழி இருக்கவில்லை.

பலர் ஏஜென்சி மூலம் வெளிநாடு வரும்போது பல ஆறு களைக் கடக்க நேரிடுவதும், சிலவேளைகளில் ஆற்றுடனேயே போய்விடுவதும், எல்லைகளைக் கடக்கும்போது பாதுகாப்பு இன்மை காரணமாகக் குளிரில் விறைத்து சாகநேரிடுவதும் கூட எத்தனையோ நடந்தும் வெளிநாடு வரவேண்டும் என்னும் ஆசையில் இப்பிடியான அபாயங்கள் பற்றித் தெரியாமல் எத்தனையோ பேர் உயிரிழந்தும் கூட இக்கதைகள் தொடர்வது இவன் கேள்விப்பட்டதுதான். ஏனோ மகேந்திரனுக்கும் இப்பிடி ஏதும் நடந்திருக்கக் கூடாது என மனம் எதிர்பார்த்தாலும் அறிவு நம்ப மறுக்க இன்னும் சில மாதங்கள் காத்திருந்தான்.

***

பஸ்ஸில் ஏறி அமர்ந்த அபி எத்தனை தான் யோசித்தாலும் எந்த ஒரு முடிவையும் எடுக்கவே முடியாதிருந்தது. மகேந்திரன் இப்ப உயிருடன் இல்லை என்று சாத்திரி சொன்ன விபரத்தை அண்ணன் கூறியதிலிருந்து மனம் அல்லோலகல்லோலப் பட்டது தான். எனினும் அதை உண்மை என்றோ பொய் என்றோ நம்பவும் மனம் இடங்கொடுக்காததால் ஒரு வாரங்கள் அண்ணனுக்குத் தெரியாமல் அழுவதும் பெருமூச்சு விடுவது மாய் காலம் நகர, அண்ணன் அடுத்துச் சொன்ன விடயம்

இன்னும் மனத்தைக் குழப்புவதாய் இவள் நின்மதியைக் கெடுத்தது.

கரன் வசந்தனின் நண்பனின் நண்பன். படித்து நல்ல வேலையிலும் இருப்பவன். பார்க்கவும் கறுப்பு என்றாலும் களை யோடு இருந்தான். தமயனிடம் வந்தபோது இரண்டு மூன்று தடவைகள் இவளைப் பார்த்துள்ளான்... இவளின் அமைதி யான தன்மை பிடித்துவிட இவளைத் தான் திருமணம் செய்ய விருப்பப் படுகிறேன் என்று தாசண்ணன் மூலம் அண்ணனிடம் கேட்டா னாம் என்று வசந்தன் கடந்தவாரம் இவளுக்குக் கூறியிருந்தான்.

“அபி மகேந்திரன் இருக்கிறானோ இல்லையோ எண்டு தெரியாது. நீயும் தான் அந்தச் சாத்திரி சொன்னது எல்லாம் நடந் திருக்கு என்றாய். உண்மையிலேயே மகேந்திரன் இல்லாமல் இருந் தால் உப்பிடியே உன்ர வாழ்க்கையைத் துலைக்கப் போறியே? இப்ப கரன் விருப்பப்பட்டுக் கேட்கிறான். வடிவா யோசிச்சுப் போட்டு உன்ர விருப்பத்தைச் சொல்லு என்று கூறி விட்டுச் செல்ல, இவளால் முடிவை மட்டும் எடுக்கவே முடியவில்லை.

வேலைக்குச் சென்றபின்னும் மனம் நிலைகொள்ளாது தவித்தது. ஒருவனை விரும்பிவிட்டு அவனைக் காணவில்லை என்றதும் எப்படி இன்னொருவனை மணப்பது? ஆண்களுக்கு பெண்களின் மனம் புரிவதில்லை. அவர்கள் போல் எமக்கும் கல் நெஞ்சு என்று எண்ணிவிட்டார் போல என்று மனதுள் மருகுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

***

நாளை அபிக்குத் திருமணம். பாவம் அம்மா தான் பார்க்கக் குடுத்துவைக்கவில்லை. இங்கு இன்னும் நிரந்தர வதிவிட உரிமை கிடைக்காததால் வசந்தன் ஸ்பொன்சர் செய்ய முடியாது. அபி போன மாதம்தான் இந்தத் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித் திருந்தாள். எங்கே அவள் மனம் மாறிவிடுவாளோ என்ற பயத்தில் கரனுடன் கதைத்து இவன் உடனேயே திருமணத்தை நடத்த ஒழுங்கு செய்துவிட்டான். ஊரில் என்றால் ஊர் முழுதும் திருமண வீட்டில் நிற்கும். ஒரு வாரத்துக்கு முன்பே பலகாரச் சூடு

அயலவர் கூடி நடக்கும். திருமணத்துக்கு முன்னும் பின்னும் உறவினர்களும் அயலவரும்... நினைத்துப் பார்க்கவே மனதுக்கு எதோ ஒவ்வாததாய் மகிழ முடியாது தடுத்தது.

ஏழு மாதங்களின் முன் அபியிடம் கரனின் விடயம் கூறி முடிவு சொல்லும்படி கேட்டபோது இன்னும் ஆறு மாதங்கள் பார்ப்போம் அண்ணா. அப்பவும் மகேந்திரனிமிருந்து எந்தத் தொடர்பும் இல்லை என்றால் நான் கரனைத் திருமணம் செய்கிறேன் என்று அபி கூறியதை இவன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

இவனுக்கு என்ன மகேந்திரனில் வெறுப்பா என்ன? தங்கையை ஒருவனிடம் பிடித்துக் கொடுத்தாலல்லவா அவன் தன்னைப் பற்றி யோசிக்க.

ஆடம்பரமான திருமணம் இல்லைத்தான். ஆனாலும் ஒரு ஐம்பது பேர் கூட இல்லாமல் என்ன திருமணம். அதுவும் வாழ்வில் ஒருமுறை தான் நடப்பது. தன் ஒரேயொரு தங்கை வேறு. தனக்கு நன்கு அறிமுகமான ஒரு முப்பது குடும்பங்களுக்கு மட்டும் சொல்லி, இவனது நண்பர்கள் என்று பார்க்க நாற்பது பேரைத் தாண்டிவிட்டது. கரனின் பக்கமும் முப்பது குடும்பம், நண்பர்கள். இனி ஒரு குடும்பத்தில கடைசி மூண்டு பேராவது வருவினம் என்று சாப்பாடு, பலகாரம் எல்லாம் ஓடர் கொடுத் தாகிவிட்டது. எல்லாம் தயாராகி மண்டபத்தில் வந்திறங்கும். மண்டபம், வீடியோ, சீலை, நகை எண்டு பத்தாயிரம் தாண்டிவிட் டுது. மண்டபமும் சாப்பாடும் வீடியோவுக்கும் சேர்த்து தானும் அரைவாசிக்காசு தருகிறேன் என்று கரன் கூறினான் தான் என்றாலும் வசந்தன் மறுத்துவிட்டான்.

பெண்ணைக் கூட்டி வாங்கோ என்று ஐயர் கூற, குனிந்த தலை நிமிராமல் அழகுப் பதுமையாக வந்த அபியைப் பார்க்க வசந்தனுக்குப் பெருமிதமும் நின்மதியும் ஏற்பட்டது. அவன் மாப்பிளைத் தோழன் என்பதால் அவனின் நண்பர்கள் தான் ஓடியோடி எல்லாவற்றையும் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஒருவாறு அபியின் கழுத்தில் தாலி ஏற இவனுக்கு மனம் மட்டிலா

மகிழ்வோடு நின்மதி கொண்டது.

திருமணம் முடிந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. அபியும் கரனும் கரனது வீட்டில் வசிக்கத் தொடங்க தங்கை இல்லாத வீடு வெறிச்சோடிப் போனதுபோல் இருந்தது. பெண்கள் இருந்தால் வீடு ஒரு அழகுதான் என எண்ணியவன் "அம்மாட்டைச் சொல்லி எனக்கும் பெண் பார்க்கச் சொல்லவேணும். எதுக்கும் ஒரு வருஷம் போகட்டும். அப்பத்தான் எனக்கும் நசனாலிட்டி வந்திடும்." தங்கையைக் கூப்பிட்ட கடனும் கலியாணக் கடனும் அடைக்க இன்னும் ஒரு வருஷம் வேணும். அதுக்குள்ளை இன்னொருத் தியை களவாக் கூப்பிட ஏலாது என நினைத்தவன் ஊரில் தனக் குத் தெரிந்த தனக்கேற்ற யாராவது இருக்கிறார்களா என்று மன தில் ஊர் பெண்களை நிரைப்படுத்தினான். எந்தப் பெண்ணுமே மனதில் நிக்கவில்லை.

"எங்கை எண்டாலும் அம்மாவே பேசி அனுப்பட்டும். அப்பதான் அவவுக்கும் சந்தோசமா இருக்கும்" என்று எண்ணிப் பெருமூச்சை விட்டபடி படுக்கையில் கிடந்த வசந்தனை, கைத் தொலைபேசி அழைப்புக் கலைக்க கலோ என்றபடி போனைக் காதுக்குள் வைக்க", நான் மகேந்திரன். தாய்லாந்திலிருந்து கதைக்கிறன் என்னும் குரலில் காதுக்குள் செல் விழுந்ததாய் அதிர்வை உணர்த்த போனைத் தூரப் போட்டான் வசந்தன்.

# வேப்பங்காய்கள்

பார்க்கும் இடம் எங்கும் வெண்பனி ஓவியங்கள் வரைந் திருந்தது. குளிரும் இம்முறை அதிகம். பணிப்பொழிவைப் பார்ப் பதும் இரசிப்பதும் மட்டுமே போதுமாக இருந்தது சந்தியா வுக்கு. கணவனும் மகளும் வெளியே நின்று பனித்துகள்களை அள்ளி விளையாடி மகிழ இவள் ஜன்னலூடாக அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். வீட்டினுள் கீற்றர் போட்டு வெப்ப மாகத்தான் இருந்தது. ஆனாலும் வெளியே பாக்க வீடும் குளிர்வ தாய் எண்ணம் தோன்ற, யன்னலை விட்டு உள்ளே வந்து சோபா வில் அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் கணவனும் மகளும் உள்ளே வர, ஈரமாக்கிப் போன மகளின் உடைகளைக் களைந்துவிட்டு வேறு உடை அணிந்துவிட்டு நிமிர கணவனும் உடைமாற்றிவிட்டு வந்தமர்ந்தான். "எதையும் உமக்கு ரசிக்கத்தெரியாது. எங்களோட வெளியில வந்திருக்கலாம் தானே. ரசனை கெட்ட ஜென்மம்" என்றபடி நக்கலாய் இவளைப் பார்க்கும் கணவனை கன்னத்தில் அறையலாம் போல் வந்த கோபத்தை மனதுள்ளேயே அடக்கிய படி, "அது என்ர விருப்பம். உங்களை நான் போக வேண்டாம் என்று சொன்னனானே. உங்களுக்காக நான் ஏன் குளிருக்குள்ள வர வேணும்" என்று கூறியபடி சமையல் அறைக்குள் போனவளுக்கு மனதுள் கொஞ்சம் சந்தோசமும் பயமும் எட்டிப்பார்த்தது.

"நான் எதிர்த்துக் கதைச்சது உவருக்குப் பிடிச்சிருக்காது. அதுக்காக உவர் சொல்லுறதை எல்லாம் கேட்டுக்கொண்டு எத்தினை நாள்த்தான் பேசாமல் இருக்கிறது. நான் கதைக்கத் தொடங்கினால்த்தான் உவர் என்னைத் தாக்கிக் கதைக்கிறதைக் குறைப்பார்" என எண்ணியபடி தேநீர் போட்டு எடுத்துக் கொண்டு வந்து கணவனுக்குப் பக்கத்தில் வைத்தாள். "நான் உன்னட்டைத் தேத்தண்ணி கேட்டனானே" என்று முறைக்கும் கணவனை நிமிர்ந்து பார்க்காமலே "நீங்கள் கேட்டே மற்றும்படி தேத்தண்ணி கொண்டுவாறனான். விரும்பினாக் குடியுங்கோ அல்லது நானே குடிச்சுக்கொள்ளுறன்" என்றபடி சோபாவில் அமர்ந்தாள். அவளுக் குத் தெரியும் தான் திரும்பக் கதைத்ததன் விளைவுதான் தேநீர் மறுப்பு என்று. ஆனாலும் இம்முறை அவள் முன்புபோல் அமைதி யாக இருந்தோ அல்லது மன்னிப்புக் கேட்கவோ போவதில்லை என முடிவெடுத்தபடி தொலைக்காட்சி பார்க்கத் தொடங்கினாள்.

"உதென்ன விசர்ப் புரோக்கிராம் பாக்கிறாய். கொண்டா இங்க ரிமோட்டை" என்றபடி கையை நீட்டிய கணவனுக்கு ரிமோட்டைக் கொடுக்காது "ஏன் இது நல்லாத்தானே இருக்கு. உங்களுக்குப் பிடிக்காட்டிப் பார்க்காதைங்கோ. இன்னும் பத்து நிமிடத்தில முடிஞ்சிடும்" என்றபடி பார்வையை டிவியில் பதிக்க, கோபமாகக் கணவன் எழுவது கடைக்கண்ணில் தெரிய, ஒருவித அச்சம் எழத்தான் செய்தது. ஆனால் கணவன் படுக்கை அறைக்குள் செல்ல இவள் நின்மதியாய் தொலைக்காட்சி பார்க்கத் தொடங்கினாள்.

***

கதிரவேலருக்கு மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும். லோயராக இருந்து இப்ப யாழ்ப்பாண நீதவான். எக்கச்சக்கமான சொத்து. எல்லாப் பிள்ளையளுக்கும் வீடு வளவு கட்டியாச்சு. பிள்ளையள் பிறந்து வளர்ந்தது எல்லாம் கொழும்பில்தான். யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வரும்போது மற்றவர்கள் எல்லாரும் செற்றிலாகிவிட மனைவியும் கடைசி மகளும் தான் இவரோடு யாழ்ப்பாணம் வந்தது. மனைவிக்கு பெரிசா விருப்பம்

இல்லைத்தான் கொழும்பை விட்டு வர. அஸ்மா நோயில் துன்பப் பட்ட சகுந்தலாவுக்கு யாழ்ப்பாணத் தூசியள் என்ன செய்யுமோ என்ற பயம் இருந்தது. ஆனாலும் இங்கு அவருக்குக் கிடைத்த மரியாதையும் வசதிகளும் வாயடைக்க வைத்துவிட்டன. ஒரு வேலையாள் வைத்து வீட்டை தினமும் கழுவித் துடைத்ததில் மனம் சமாதானமடைந்ததுதான் எனினும் கணவனின் உதாசீன மும் கவலையைக் கொடுத்தது. பதவியும் பணமும் இருந்தால் என்னவும் கதைக்கலாமோ? இத்தனைநாள் இவரோடு வாழ்ந்ததுக்கு என்ன பயன் என மனம் சலிப்புற அழுகையும் எட்டிப் பார்த்தது.

கலியாணங் கட்டி நாற்பது ஆண்டுகளில் வாழ்வு எதோ ஒருவகையில் மகிழ்வாக ஓடிக்கொண்டு இருந்தாலும் கொழும் பில் ஒரு பெண்ணுக்கும் கதிரவேலருக்கும் தொடுப்பு என்று யாரோ ஒருநாள் கூறியதில் இருந்து நம்புவதா விடுவதா என்ற போராட்டம் தினமும் மனத்தில் எழுந்து சோர்வுற வைத்தது. ஆனாலும் பெரிய வளர்ந்த பிள்ளைகள் இருக்கினம். அந்தாள் அப்பிடிச் செய்ய மாட்டார் என்ற ஒரு நம்பிக்கையும் இல்லாது இல்லை. எங்களுக்கு ஒரு குறையும் அந்தாள் வைக்கேல்லைத் தான். என்னிலையும் பிழை இருக்குத்தானே என மனம் சமாதானம் சொன்னது.

அஸ்மா வருத்தத்தோட மூட்டுவலியும் மெனப்போசும் ஏற் பட்டத்தில் உடலுறவில் ஆர்வமே இல்லாது எந்த நேரமும் பதட்டமும் சினமுமாக இருக்க, சகுந்தலா மகளின் அறையில் போய் படுக்க ஆரம்பித்தாள். மகளுக்கு என்ன சந்தேகம் எழுந்ததோ "என்னம்மா பிரச்சனை"? என்று கேட்க, "கொப்பா வின்ர குறட்டைச் சத்தம் தாங்க முடியேல்லை. நித்திரை கொள்ள ஏலாமல் கிடக்கு" என்னும் பதிலில் மகளும் வாய் மூடிக் கொண்டாள். இப்ப யாழ்ப்பாண மாற்றலில் அவள் இங்க வர மாட்டாள் என்ற எண்ணமும் மகிழ்வைக்கொடுக்க மனம் நின்மதியானது.

இவள் கடைசிக்குத்தான் இன்னும் சரிவருதில்லை. நல்ல ஒரு மாப்பிளை வந்தால் அதன் பிறகு நான் நின்மதியாக் கண்ணை

மூடுவன். அவளுக்கு செவ்வாய்க் குற்றம். அதுதான் இப்பிடி இழுபடுது. ஆண்டவனே கெதியில அவளுக்கு ஒரு வழியைக் காட்டு என்று மனமுருகி வேண்டிக்கொண்டாள்.

இவ்வளவு சொத்து கதிரவேலருக்கு இருந்தாலும் எதையும் மனைவி பெயரில் வாங்கவில்லை. சகுந்தலா அதுபற்றி ஒரு நாளும் கவலைப்பட்டதும் இல்லை. அவளின் சீதன வீடு சகுந்தலாவின் பெயரில்தான் இருக்கு. ஒருநாள் பேச்சுவாக்கில் பிள்ளைகளிடம் இதைச் சொன்னபோது மூத்தவள் கயல் அப்பாவிடம் கேட்கத் தான் செய்தாள். அதற்கு அவர் சொன்ன பதில் இப்போதும் சகுந்தலாவுக்கு நெஞ்சை அடைக்க வைக்கிறது. கொம்மா வருத்தக் காரி. எப்பிடியும் வேளைக்குச் செத்திடுவா. அதுக்குப் பிறகு சொத்தை மாத்திறதில அவைக்குப் பங்கு இவைக்குப் பங்கெண்டு நான் இழுபடேலாது. என்ர பேரிலேயே இருந்தால் ஒரு பிரச்சனையும் இல்லை என்றதுடன் மகளும் கதைக்கவில்லை. சகுந்தலாவுக்குத்தான் இப்பவே செத்திட மாட்டமா என்று இருந்தது. எனக்கு முன்னாலயே நான் சாகிறதைப் பற்றி கதைக்க என்ன கொடூர மனம் வேண்டும் என்ன எண்ணி தனக்குள் அழத்தான் முடிந்தது. இவர் மட்டும் சாகாமல்தானே இருக்கப் போறார் என எண்ணிய நினைவில் மனதில் குற்ற உணர்வு எழ கடவுளே இவர் நீண்டாயுளோட இருக்கவேணும் என்றும் கடவுளிடம் வேண்டிக்கொண்ட பின்னர்தான் மனம் நின்மதியானது.

***

ஒரு வாரமாக வீட்டில் மௌனவிரதம். இங்கு மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியையாக வேலைசெய்யும் சந்தியாவுக்கு மாதம் சுளையாக 1800 பவுன்ஸ் கையில் வரும். அதில் ஒரு சதமும் அவள் எடுத்துச் செலவழிக்காமல் வங்கியில் போட்டுவிடவேண்டும். பின்னர் கணவன் தான் எல்லாவற்றுக்கும் காசு கொடுப்பார். அவரும் வேலை செய்கிறார் தான். திருமணமான புதிதில் ஆண்டில் ஒருமுறை விடுமுறையைக் கழிக்க இந்தியா அல்லது இலங்கை போய் வருவதுதான். பின் அதுவும் குறைந்து இப்ப மூன்று ஆண்டுகள் எங்கும் போகாமல் லண்டனுக்குள் தான்

திரிவது. ஆனால் அவர் மட்டும் ஒரிரு வாரங்கள் நண்பர்களுடன் ஏதாவது ஒரு நாட்டுக்குப் போய் வருவார். அந்த நாட்களில் சந்தியாவும் மகளும் மட்டும் அந்தத் தனிமையை அனுபவிப்பார் கள். மகளும் அப்பாஅப்பா என்று அவரோடுதான் அதிக வாரப்பாடு. ஆனாலும் அப்பா இல்லாதபோது வேறு வழியின்றி அம்மாவுடன் ஒண்டினாலும் எப்போதும் அப்பா புராணம் தான்.

சந்தியாவின் பள்ளியில் மாணவர்களைக் கூட்டிக்கொண்டு ஒருவாரம் பாரிசுக்குப் போகிறார்கள். இவளின் வகுப்பு மாணவர் களும் செல்கிறபடியால் இவளும் போகவேண்டும் என்றதற்குத் தான் "நீ போக வேண்டாம்" என எதிர்ப்பு. இப்பிடி ஏதாவது என்றால் கணவனின் விருப்பத்துக்கு ஏற்ப ஏதோவொரு சாட்டைக் கூறி அவள் போகாமல் நின்றுவிடுவாள். இம்முறை ஏன் போகாமல் விடவேண்டும் என்ற கேள்வி மனதில் எழ, "ஏனப்பா போகவேண்டாம் எண்டுறியள். என்ர வகுப்பு எண்டதாலை நான் கட்டாயம் போகவேணும் எண்டு கெட்டீச்சர் சொல்லுறா" என்ற பின்னும் "வேண்டாம் எண்டால் விடன் பேந்தென்ன கதை" என முகத்தில் அடித்தது போல் சொல்லி விட்டு செல்லும் அவனை எப்படிச் சம்மதிக்க வைக்கிறது என்று யோசனையாக இருந்தது. அதன் விளைவுதான் இந்த மெளன விரதம்.

நீங்கள் மட்டும் ஒவ்வொரு வருசமும் பிரென்ஸ்சோட போகேக்குள்ள நான் ஏதும் சொல்லுறநானே என்றதற்கு "நான் ஆம்பிளை என்னவும் செய்யலாம். நீர் கண்டபடி திரியேலாது" என்று சொல்ல சந்தியாவுக்குக் கடும் சினம் தான் வந்தது. இதில ஆம்பிளை பொம்பிளை என்ன? இது என்ர வேலையோட சம்பந்தப்பட்டது. எனக்காக என்ர வகுப்புப் பிள்ளையள் ஒருத்தரும் போகாதைங்கோ எண்டுறதோ? என்ர புருசன் என்னைப் போகவேண்டாம் எண்டுறார் எண்டால் மற்ற டீச்சர்மார் சிரிப்பினம். அதோட எல்லாரும் பொம்பிளை ஆசிரியர்கள் தான் போறம். எதுக்கு வேண்டாம் எண்டுறியள். நியாயமா ஏதும் காரணம் இருந்தால் சொல்லுங்கோ நான் நிக்கிறன் என்றவுடன் எனக்கு நீ போறது பிடிக்கேல்லை. அவ்வளவுதான் என்றுவிட்டு

எழுந்து போனவனிடம் என்ன சொல்லிச் சமாதானம்செய்வது என்று தெரியாது சந்தியா குழம்பித்தான் போனாள்.

ஒருவாரம் இப்பிடியே ஓடிப்போக இவளுக்குக் கோபம் தான் வந்தது. காலையில் எழுந்து மதியத்துக்குச் சமைத்துத் தானும் சாப்பாடு கொண்டு போவது சந்தியாவின் வழமை. கணவன் காலில் ஒரு விபத்து நடந்து அதிக நேரம் நிற்க முடியாமையால் நான்கு மணிநேர வேலை செய்ய இவள் முழுநேர வேலை செய்த படி வீட்டு வேலைகளும் செய்கிறாள் தான். கணவனை எந்த வேலையும் செய்ய விடுவதில்லை. சனிக்கிழமை எல்லா உடைகளும் தோய்த்து அத்தனை உடைகளையும் ஞாயிறு அயன் பண்ணி வைக்க முதுகு முறியும். நல்ல காலம் ஒரே ஒரு பிள்ளை. இதுவே மூன்று நான்கு என்றால் என்ர நிலை என்னவாகி யிருக்கும் என்ற எண்ணமும் ஏற்பட்டது. இவர் என்னோட கதை காட்டி எனக்கு ஒண்டும் இல்லை. சமைச்சு வைக்கிறதை மட்டும் வடிவாச் சாப்பிடுறவருக்கு கொழுப்புத் தான். எதோ நான் தப்புச் செய்த மாதிரி எல்லோ நடத்திறார். இதோட இவர் திருந்த வேணும் என எண்ணியபடி தன் வேலையில் ஆழ்ந்து போனாள்.

சகுந்தலாவுக்கு இப்ப கொஞ்ச நாட்களாக சரியான மூச்சிழுப்பு. மழைக் காலம் எண்டாலே அஸ்மா அதிகமாவது தான் எல்லாருக்கும். ஆனாலும் இம்முறை ஒருவாரமாகக் கட்டிலை விட்டு எழும்ப முடியாத நிலை. கடைசி மகள் பல்கலைக் கழகத் தேர்வு முடிந்து வீட்டில் நிர்ப்பதால் அவளே எல்லாம் செய்கிறாள். இருந்தாலும் சகுந்தலாவுக்கு பெரிய மனக் குறை தான். கணவன் இந்த நேரம் பார்த்துத்தானா வெளி நாடு போகவேணும். அந்த ஆட்டக்காரியையும் கூட்டிக் கொண்டு தான் போறாரோ என்ற கவலையை விட தான் படுத்த படுக்கை யாய் இருக்கேக்குள்ள ஒரு குமர்ப் பிள்ளையையும் விட்டுட்டு உவருக்கென்ன வெளிநாட்டுப் பயணம் வேண்டிக் கிடக்கு. அவளுக்குக் கலியாணத்தைக் கட்டிக் குடுத்துப்போட்டு தன்ரை எண்ணத்துக்கு ஆடட்டுமன் என மனதுள் எண்ணினா லும் வெளியே சொல்லும் துணிவு வரவில்லை.

இரண்டு கிழமைக்கு முதல் மூச்சு விட முடியாமல் யாழ்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் நாலுநாட்கள் அங்கேதான் இருந்தது. பிறகு வீட்டுக்கு வந்தாலும் கணவனின் அலட்சியமே இன்னும் இயலாமலாக்கியது. மற்றப் பிள்ளையள் கொழும்பிலிருந்து வந்து நிண்டதில் கொஞ்சம் மனம் அமைதி யானாலும் கணவன் ஏதோ விசேசத்துக்கு வந்த பிள்ளையளோட கதைக்கிறமாதிரி கதைச்சுச் சிரித்ததும், இவளை ஒருக்கா எட்டிப் பாக்கிறதோட தன்ரை கடமை முடிஞ்சது போல் இருந்ததும் இன்னும் வருத்தியது. “கொம்மாக்கு ஒண்டுமில்லை உங்களைப் பாக்கிற ஆசையில வருத்தம் எண்டு மிகைப்படுத்திறா” என்றதும் எந்தப் பிள்ளையும் தகப்பனை எதிர்த்துக் கதைக்காமல் பேசாமலே நிண்டதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சின்னப் பிள்ளையளாய் இருக்கேக்கை தான் உந்தாளின்ர வெருட்டுக்குப் பயந்தினம் எண்டால் இப்ப கலியாணம்கட்டி சுய காலில நிக்கேக்குள்ளையும் பயமே என மனதில் எழுந்த கேள்விக்கு நான் தானே உந்தாளின்ர கோபத்துக்குப் பயந்து பிள்ளையளையும் பயப்பிடுத்தி வளத்துப்போட்டன். அதுகள் என்ன செய்யுங்கள் பாவம் என்னும் பச்சாதாபமும் எழுந்தது. உந்தாளின்ர பேர்ல இருக்கிற சொத்துக்காகவும் பெடியள் பேசாமல் தான் இருக்க வேணும். முதல் ஒருக்கா மூத்தவன் எதிர்த்துக் கதைக்க, என்னை ஆரும் எதிக்கக் கூடாது. எதிர்த்தா கோயிலுக்குச் சொத்தை எழுதிவச்சிடுவன் என்றதன் பின் உன்தாள் வீம்புக்குச் செய்தாலும் செய்யக் கூடியது என்று இனிமேல் அப்பாவை எதிர்த்து ஒண்டும் கதைக்காதைங்கோ எண்டதும் இவள்தானே.

பிள்ளைகள் எல்லோரும் நிக்கேக்குள்ளதான் கதிர்வேல் தான் ஒருமாதம் ஐரோப்பா எல்லாம் போய்வரப் போவதாகச் சொன்னார். லண்டனில நடக்கிற ஒரு மாநாட்டுக்கு தனக்கு அழைப்பு வந்திருக்கெண்டும், அதைத் தான் தவறவிடப் போவ தில்லை எண்டும் சொன்னார். மூத்த மகள் தான் அம்மா இப்பிடிக் கிடக்கேக்குள்ள நீங்கள் போனா ஆக்கள் என்ன கதைப்பினம் என்று துணிந்து கேட்டாள். ஆக்களைப் பற்றி எனக்கென்ன?

நான் என்ர காசில்தான் போறன். "இங்க நான் இருந்து போற கொம்மாவின்ர உயிரை இழுத்தா பிடிக்கப்போறன். அப்பிடிக் கொம்மாவுக்கு ஒண்டு நடக்கிறது என்று இருந்தால் நடந்துதான் தீரும். உடன எனக்கு போன்செய்யுங்கோ நான் வந்திடுவன்" என்று இரக்கமில்லாமல் கூறும் தந்தையை வெறுப்பாய் பிள்ளைகள் பார்த்தபடி நிக்கத்தான் முடிந்தது. கடைசிமகள் மட்டும் சத்தம் வராமல் அழுதது இவளுக்கு உணவு கொண்டு வரும் போது என்றுமில்லாமல் சிவந்திருந்த அவளின் கண்கள் சொல்லியது.

பிள்ளையளும் திரும்பிப் போய் கணவனும் லண்டன் போய் இன்றுடன் இரண்டு வாரங்கள் முடிந்துவிட்டன. என்ன தான் கணவன் தன்மேல் வெறுப்பாக இருந்தாலும் சகுந்தலா வுக்கு கணவன் இல்லாத வீடு வெறிச்சோடியது போல் தான் இருந்தது. திட்டினாலும் கொட்டினாலும் ஒரு ஆம்பிளை வீடுக்கு வேணும் என அவள் மனம் எண்ணியது. இரண்டு வாரங்கள் ஆகும் கணவன் வர என எண்ணியவள் சோர்வுடன் மீண்டும் கண்களை மூடிக்கொள்கிறாள்.

சந்தியாவுக்குத் திருமணமாகி நான்காம் நாளே தாயார் கூறியது இப்பவும் நன்றாக நினைவிருக்கிறது. உந்த மாப் பிளையை என்ர தம்பி எங்க தான் தேடிப் பிடிச்சானோ என்றது. மாப்பிளை லண்டனில் சிவில் இஞ்சினியர். வீடுவளவும் இருபது லட்சம் காசும் சீதனமாகக் கேட்க, இரண்டு சாதகமும் நல்ல பொருத்தம் என்று புரோக்கர் சொன்னவர். அதனால இதை முடிப்பம் என்று தாய் கூற எதுக்கு வெளிநாட்டு மாப்பிளை. நாங்கள் இங்கதானே இருக்கிறம். இங்கையே பேசுங்கோ என்ற மூத்த மகளை இதில் நீ தலையிடாதை, வந்திருக்கிறது நல்ல சம்மந்தம். அதுக்கென்ன அவள் வெளிநாடு பார்க்கட்டுமன் என்று வாயடைக்க வைத்தால், எதுக்கம்மா இத்தனை லட்சம் சீதனம். அக்காவுக்குப் பத்து லட்சம் தானே குடுத்தது. இவளுக் கும் அப்பிடிப் பார்ப்பம் என்ற மூத்த மகனின் சின்னத்தனம்புரிய, "நீ உன்ர காசையே தரப்போறாய். அப்பா உழைச்ச காசு. இதில ஒருத்தரும் தலையிடாதைங்கோ" என்றவளுக்கு சின்னவள்

லண்டன் போனால் இவர்களுடன் தான் தான் இருக்க வேண்டி வரும் என்ற உண்மையும் உறைக்க, "தம்பி அவள் ஏழிச் செவ் வாய்க்காறி. பொருந்துறது கஸ்ரம். வயதும் இருவத்தெட்டப் போச்சு. நீங்கள் எல்லாரும் சேர்ந்துதான் இதை வடிவா நடத்தி முடிக்க வேணும்" என்று கூறிய பின் யாரும் எதுவும் கதைக்க வில்லை.

மாப்பிளை முகுந்தன் பார்க்க நல்ல வடிவாத்தான் இருக் கிறார். இரண்டுபேருக்கும் நல்ல பொருத்தம் என மனம் எல்லாம் நிறைந்து போனது தாய்க்கு. மகளும் மாப்பிளையும் இன்னும் இரண்டு வாரத்தில் லண்டன் திரும்பவேணும். மாப்பிளை எல்லா ஒழுங்கும் அங்கேயே செய்துகொண்டு வந்தபடியால் விசாவும் உடனேயே குடுத்துவிட்டார்கள். தாய்க்கு மகள் தன்னை விட்டுச் செல்வது மிகப் பெரிய கவலையும் இழப்பும் தான் என்றாலும் மகளின் வாழ்க்கை சிறப்பாக அமைந்து விட்டதே என்னும் மகிழ்ச்சியும் தான்.

இடியப்பஉரல், இடியப்பத் தட்டுக்கள், பிட்டுக்குழல், இட்டலித் தட்டு என எல்லாம் தான் வாங்கி அடுக்கினார். மகளும் விதவிதமாக ஆடை அணிகள் அணிபவள் தானே என அவளுடன் கடைகளுக்குச் சென்று பாவாடை சட்டைகள், வித வித ஆபரணங்கள், பொட்டுகள், கிரீம்கள் என எந்தக் குறையும் வரக் கூடாது என்று வாங்கிக் கொடுத்தாள். அப்போதெல்லாம் fair and lovly கிரீம் தான் சந்தியா பூசுவது. லண்டனில் இருக்குமோ என்னவோ என ஒரு ஆறு கிரீம்களை வாங்கி கொண்டு போகச் சொல்லிக் கொடுக்கும் தாயை விட்டு விட்டுப் போகப் போகிறோமே என்ற கவலை சந்தியாவுக்கு எழுந்தது.

இரண்டு வாரத்தில் சூட்கேசில் எல்லாவற்றையும் அடுக்கும் போது முகுந்தனும் அருகில் இருந்தான். அவளின் நகைப் பெட்டியைப் பார்த்துவிட்டு உதேன் உது அங்கை. பவுண் நகைகள் மட்டும் போதும். மிச்சத்தை அக்காக்குக் குடுத்திட்டு வாரும் என்றதற்கு சந்தியாவும் உடனே தலையாட்டினாள். "பஞ்சாபி உடைகளையும் சீலைகளையும் கொண்டுவாரும்.

உந்தப் பாவாடை சட்டையள் வேண்டாம்" என்றதற்கும் அவளொன்றும் சொல்லவில்லை. "எதுக்கு உத்தனை கிரீம். நீர் என்ன கறுப்பே உதுகளைப் போட. பவுடர் மட்டும் போடும் காணும். நீர் அழகாய்த்தான் இருப்பீர்" என்றவுடன் மனம் குளிர அவற்றையும் வெளியே வைத்தாள். அரசல்புரசலாய் இவற்றைத் தெரிந்து கொண்ட தாயாருக்குத்தான் சினம் ஏற்பட்டது. "எங்க தான் உந்த மாப்பிளையை என்ர தம்பி தேடிப் பிடிச்சானோ" என்று மகளின் காதுபடக் கூறினாலும் மறுகணமே சுதாகரித்துக் கொண்டு அந்த நாட்டுக்குத் தேவையில்லையாக்கும் என சந்தியா வுக்குச் சமாதானம் செய்வதுபோல் கூறினாள். இளைய மகள் எதை யும் சமாளிப்பாள் என்னும் நம்பிக்கையில் மனம் அமைதியுற்றது.

***

வெளிநாடு போன கணவன் வரும் நாளை எதிர் பார்த்துக் காத்திருந்த சகுந்தலா, மாரடைப்பு ஏற்பட்டு கணவன் வெளி நாட்டில் இறந்த செய்தி கேட்டு முழுவதும் உடைந்துதான் போனாள். நீ சாகப்போறாய் சாகப்போறாய் என்று என் மனதைச் சாகடிச்சதுக்கு கடவுள் குடுத்த தண்டனைதான் இது என்று மனதுள் எண்ணினாலும் கணவனின் இழப்பை மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. கணவன் இறந்ததைவிட அவர்பெயரில் இருந்த சொத்து உனக்கு எனக்கு என மற்றப் பிள்ளைகள் சண்டையிட, அப்பா செத்து ஒரு வருஷம் ஆகேல்லை. அதுக் குள்ளை சொத்துக்கு அடிபடுறியளோ? ஒரு வருசத்துக்கு உந்தக்கதை ஒன்டும் கதைக்கக் கூடாது என்று அவள் கண்டிப் புடன் எப்பிடிக் குரல் உயர்த்திச் சொன்னாள் என்று தெரிய வில்லை எல்லாரும் முணுமுணுத்து அடங்கிதான் போயினர்.

நல்லகாலம் இவளுக்காவது என்குணம் வந்ததே. மற்ற நால்வரும் அப்பாவின் குணத்தோடுதான் பிறந்திருக்குதுகள் என்று எண்ணியபடி மகளின் திருமணம் பற்றிய யோசனையில் ஆழ்ந்தாள் சகுந்தலா. கணவன் இறந்தபின் அவளது ஆஸ்மாவும் கூடக் குறைந்துவிட்டது. தான்தானே இனி எல்லாம் செய்ய வேணும் என்ற பொறுப்பு வீம்பாக அவளை எழுந்து நடமாட

வும் வைத்துவிட்டது. மீண்டும் கொழும்புக்கே போய்விடு வோமா என எண்ணியவள் வேண்டாம் சொந்த இடத்தில சொந்த வீட்டில இருக்கிறதுபோல வருமோ என்று எண்ணி இங்கேயே இருக்க முடிவெடுத்து விட்டாள். மகளுக்கும் மானிப்பாய் லேடிஸ் கொலிச்சில் வேலையும் கிடைத்துவிட மற்றவர்களின் தலையீடு இல்லாமல் இவர்களால் வாழமுடிந்தது.

கணவன் பெயரில் இருந்த பணம் முழுவதும் இவள் பெயருக்கு மாற்றியாகிவிட்டது. தகப்பனின் செத்த வீட்டுக்கு வந்த நாலு பிள்ளைகளும் ஏதாவது கிடைத்தால் முதலில் சுருட்ட லாம் என்பதுபோல் அலுமாரிகளில் தேடிப்பார்த்தார்கள். இவள் கடைக்குட்டிக்கு அந்த நேரத்திலும் மூளை வேலை செய்திருக்கு. முக்கியமான பத்திரங்கள் பணம் எல்லாம் எடுத்து பாதுகாப்பா வச்சிட்டு செத்தவீட்டுக்குத் தேவையான காசை மட்டும் சகோத ரங்களிடம் காட்ட அவர்களும் தங்களைக் காசு கேக் காட்டில் சரி என்று என்பதுபோல் பேசாமல் இருந்து விட்டார்கள். என்றா லும் சகுந்தலாவுக்கு அப்பாவின் செத்த வீட்டுக்குச் சிலவழிக் கிறன் எண்டு சாட்டுக்குக் கூடக் மூத்தவன் கேட்கவில்லை என்று கவலைதான்.

பிள்ளைகளை எல்லாம் நல்லாப் படிப்பிச்சுத்தான் விட்ட வர். அவையும் நல்ல வசதியோடை தான் இருக்கினம். ஆனாலும் வந்த மருமக்கள் சும்மா விடீனமே. மற்றப்படி என்ர பிள்ளையள் நல்லவைதான் என்று நொண்டிச் சமாதானத்தை மனம் சொன்னா லும், இவளும் கலியாணம் கட்டிப் போனால் நான் தனிச்சிடுவன் என்ற ஏக்கமும் எழாமல் இல்லை. இருந்தாலும் அவளை வெள்ளனக் கட்டிக் குடுத்திட வேணும். வயது கூடினாலும் கஷ்டம் என எண்ணியபடி யோசனையில் ஆழ்ந்தாள் சகுந்தலா.

சந்தியா கலியாணம் கட்டி வந்து ஏழு ஆண்டுகள் ஆகி விட்டன. இதுவரை ஒரு குழந்தைகூட இல்லை. பிறக்கும் பிறக் கும் என்று ஒவ்வொரு மாதமும் எதிர்பார்த்து ஏமாந்து இரு வருக்குமே ஒருவித விரக்தி தோன்றிவிட்டது. மெடிகல் செக்கப் செய்வம் என்று கேட்டும் கணவன் பல நாள்வரை சம்மதிக்க

வில்லை. கடந்த ஆண்டுதான் ஒருவாறு அவனைச் சம்மதிக்க வைத்துக் கூட்டிக்கொண்டு போனால் அவனின் விந்துக்களில் தான் குறைபாடு என்று வைத்தியர்கள் கூறினர். சோதனைக் குளாய்க் குழந்தையைப் பற்றிக் கூறி அதற்கும் கணவன் மறுத்து அடம்பிடிக்க ஒருவழியாய் நான்கு தடவைகள் லண்டனில் முயன்றும் சரிவரவில்லை. சந்தியா கோவிலுக்குச் செல்லும் போது அறிமுகமான ஒரு பெண் இந்தியாவில் கட்டாயம் உங்களுக்குக் குழந்தை கிடைக்கப் பண்ணுவினம். ஒருக்காப் போட்டு வாங்கோ என்று விபரம் எல்லாம் கூறிய பிறகு இவளின் கரைச்சல் தாங்காமல் முகுந்தனும் சம்மதிச்சு ஒரு வருட துன்பத்தின்பின் குழந்தையும் கிடைத்தது.

ஒரு எட்டு மாதங்கள் கட்டிலிலேயே இருந்து அங்காலை இங்காலை அரக்கினால் பிள்ளை கலைந்துவிடுமோ என்று பாது காத்துப் பெத்த பிள்ளை. தாயாரும் இவளுடன் இந்தியாவில் வந்திருக்கச் சம்மதித்த பின்னர்தான் முகுந்தன் இவளை விட்டு விட்டுவரச் சம்மதித்தான். தாய் பக்கத்தில் இருந்தாலும் கணவன் இல்லையே என்ற குறைதான். அவன் இடையில் ஒருவாரம் வந்து விட்டுப்போனான் தான். ஆனாலும் அவனும் வேலை செய்தால் தானே இந்தச் செலவுகளைச் சமாளிக்கலாம் என்பதனால் சந்தியாவினாலும் ஒன்றும் கூற முடியவில்லை.

குழந்தை பிறந்து இரண்டு மாதங்களின் பின் தான் தாயாரை இலங்கைக்கு அனுப்பிவிட்டு இவள் லண்டன் வந்தாள். குழந்தை யின் வரவு மீண்டும் இருவரின் வாழ்விலும் மகிழ்வையும் நெருக்கத்தையும் கொண்டு வந்தது. வேலை நேரம் போக மகளை தன் நெஞ்சில் தாங்கினான் முகுந்தன். பிள்ளைக்குத் தனித் தொட்டில் வாங்கவேண்டும் என்று இவள் கேட்டதற்கு அருவி பக்கத்து வீட்டுக் குழந்தையே. எங்கட பிள்ளை எங்களோட படுக் கட்டும் என்று கூறுவதைக்கேட்க இவளும் மகிழ்ந்து போனாள்.

மகளுக்குப் பத்து வயது. பொத்திப் பொத்தித்தான் வளர்க்கிறார்கள். மகளின் ஐந்து வயதுவரை இவள் வேலைக்குப் போகாமால் மக்களுடனேயே இருந்தாள். அதன்பின் அருவி

பள்ளிகூடம் போகவாரம்பிக்க இவளும் வேலைக்குப் போக ஆரம்பித்தாள். கணவன் காலை ஒன்பது தொடக்கம் ஒரு மணிவரை வேலை. காலையில் அவனே மகளைப் பள்ளியில் விடு வான். மாலையிலும் அவனே கூட்டிவருவான். சந்தியா வீட்டுக் குப் பக்கத்தில் உள்ள தரிப்பிடத்தில் பஸ் எடுத்து பள்ளிக்குச் சென்று வருபவள். காரில் செல்ல ஆசைதான். ஆனாலும் பக்கத் தில பஸ் எடுத்து பக்கத்தில போய் இறங்கிற உனக்கு கார் என்னத்துக்கு என்று லைசென்ஸ் கூட எடுக்க விடவில்லை முகுந்தன். அவளுக்கும் பஸ் பயணம் பழகிவிட்டது.

இப்ப புதிதாக ஒரு பிரச்சனை. மகளைத் தனி அறையில படுக்கவிடு என்று இவளுக்குக் கரைச்சல். உவள் சாமம் சாமமா நித்திரை கொள்ளாமல் இருக்கிறாள். எனக்கு ஒண்டும் செய்ய எலாமல் கிடக்கு என்ற புலம்பல். நீங்கள் தானே அவளைத் தொட்டிலுக்கை போட விடாமல் வச்சிருந்தியள். இப்ப மட்டும் அவள் எங்கடை பிள்ளை இல்லையே? எங்களோட படுத்துப் பழகி அவள் தனிய படுக்கிறாள் இல்லை.என்னில குற்றம் சொல்லாதேங்கோ. எல்லாம் உங்கடை பிழை. பிள்ளையிட்டை என்னைக் கெட்டவள் ஆக்கலாம் என்று பாக்கிறியளோ என்ற சந்தியாவைப் பார்த்து "நீ இப்ப நல்லாக் கெட்டுப் போனாய். தொட்டதுக்கும் பதில் சொல்லிக்கொண்டு நிக்கிறாய். பள்ளிக் கூடத்தில ஆரோ உனக்கு நல்லாச் சொல்லித்தரினம் போல" என்றவனை இடைமறித்து, "நான் என்ன பள்ளிக்கூடம் போகாத ஆளே. நான் ஒரு பட்டதாரி ஆசிரியர். உங்களளவு இல்லா விட்டாலும் கொஞ்சமாவது சுய புத்தி இருக்கும் தானே" என்ற வளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாது முகுந்தன் முழிக்க கொடுப்புக்குள் சிரித்தபடி நகர்ந்தாள் சந்தியா.

இப்ப கொஞ்ச நாட்களாக மீண்டும் அவள் கிரீம் எல்லாம் வாங்கிப் பூசத் தொடங்கிவிட்டாள். பள்ளிக்குச் செல்லும் போதும் அளவோடு தன்னை அலங்கரிக்க மறப்பதில்லை. முன்னர் திருமணமாகி வந்த காலத்தில் யாரினதும் திருமண வீடு களுக்குச் செல்லும்போது இவள் சேலையை அழகாக மடித்து

உடுப்பாள். அப்படி உடுக்கும் போது இன்னும் அழகாகவும் தெரிவாள். அங்கு காணும் யாராவது ஒருவர் நல்ல ஆழகாய் இருக்கிறீர்கள் என்றால் இவள் கண்களில் மகிழ்ச்சியும் முகுந்தனின் கண்களில் சினமும் தான் தெரியும். எல்லாருக்கும் உந்த இடுப்பைக் காட்ட வேணுமே. இனிமேல் உப்பிடி உடுக்காதையும் என்பதற்கு ஆரப்பா என்ர இடுப்பைப் பாத்தது. அப்பிடி ஆரும் பார்த்தமாதிரித் தெரியேல்லையே என்று இவள் பகிடியாகச் சொன்னாலும் என்ர மனிசியை மற்றவை பார்த்து ரசிக்கிறது எனக்குப் பிடிக்கேல்லை. உம்மடை அழகு நான் ரசிக்க மட்டும் தான் என்று கூறியதன் அர்த்தம் அவளுக்கு விளங்கிவிட அதன் பின் சேலையைச் சொரியவிட்டே கட்ட ஆரம்பித்தாள். அவளுக்கே அவளைப் பார்க்க ஐந்து வயது கூடியவளாய்த் தெரிந்தது.

கொழும்பில் இருந்த போது தலைமுடி அலங்காரம் பயின்றது இப்போது உதவுகிறது என எண்ணிக்கொண்டு ஒரு திருமணத்துக்கு அழகிய அலங்காரத்துடன் வெளிக்கிட்டவள், அவன் நிட்சயமாய்ப் பாராட்டுவான் என்று எண்ணியபடி பார்க்க அவனோ "உமக்கு நிறையத் தலைமயிர் தானே. சும்மா பின்னிக் கொண்டு வாரும்" என்றதும் மனதுள் எதோ அழுத்துவதுபோல் எழுந்த வலியத் தாங்கியபடி முடியை அவிழ்த்து சாதாரனமாகப் பின்னல் இட்டபடி வந்தவளைப் பார்த்து இப்பதான் நீர் எனக்கு வடிவாய் இருக்கிறீர் என்று சொல்பவனை எந்தவித உணர்வுமற்றுப் பார்த்தாள் சந்தியா.

***

சனிக்கிழமை அநேகமாக நேரம் செல்லத்தான் எல்லாரும் கட்டிலை விட்டு எழுவது. எப்பிடியும் ஒரு ஒன்பது மணி ஆகும். விழிப்பு வந்தாலும்கூட கதைத்துக்கொண்டு படுத்திருப்பார்கள். இடையில் இவள் போய் மூவருக்குமாகக் கோப்பி போட்டுக் கொண்டு வருவாள்.

இன்று முகுந்தனுக்கு முழிப்பு வந்து பார்த்தபோது நேரம் ஒன்பதாகி விட்டிருந்தது. சந்தியாவை என்ன செய்து நிப்பாட்டலாம் என்று யோசித்துக்கொண்டு இரவிரவாப் புரண்டு படுத்த

தில காலமை ஒரேயடியாய் அமுக்கிப் போட்டுது போல என எண்ணியபடி படுக்கை அறையை விட்டு வெளியே வந்த முகுந்தன் குளியலறைக்குச் சென்று பல்தீட்டி முகம் கழுவி விட்டு வந்தால் வீட்டில் எந்தச் சலனமும் இல்லை. குசினிக் குள்ளும் சென்று எட்டிப் பார்த்தவன், மகளையும் காணவில்லை என்றதும் பதட்டமானான். எனக்கும் சொல்லாமல் எங்க போட்டினம் என எண்ணியவன் கண்களில் உணவு மேசைமேல் இருந்த பேப்பரும் அதன் மேல் வைத்திருந்த சிறிய பொம்மையும் கண்ணில் பட அதைச் சென்று எடுத்தான்.

அன்புள்ள முகுந்தன்,

நான் மகளையும் கூட்டிக்கொண்டு பள்ளிச் சுற்றுலாவுக்குப் போறன். உங்களுக்குச் சொல்லாமல் போனது தவறுதான் எனினும் காலையில் சொன்னால் மகளின் முன்னால் நீங்கள் என்ன கூத்து எல்லாம் ஆடி என்னை நிப்பாட்ட முயல்வீர்கள் என்று தெரியும். நானும் நன்றாகப் படித்தவளாய் இருந்தும் இத்தனைநாள் படிப்பறிவற்ற பெண் எப்படிக் கணவனுக்குப் பயந்து இருப்பாளோ அப்பிடி இருந்துவிட்டேன். அதற்குக் காரணம் உண்மையில் பயம் அல்ல. ஒன்று உங்கள் மேல் உள்ள அன்பு. மற்றது குடும்பம் நின்மதி யாகப் போகவேணும் என்பதும் தான். உங்களை நான் இதுவரை எந்த விதத்தி லும் கட்டுப்படுத்தியதேல்லை. உங்களைத் திருமணம் செய்ததன் பின் என் விருப்பத்துக்குச் செய்தது என்று ஒரு விடயமாவது இருக்கா சொல்லுங்கள்? எனக்கும் விருப்பு வெறுப்புக்கள் ஆசைகள் என்று எத்தனையோ இருக்கு. இனிமேல் என் நியாயமான ஆசைகளை நான் நிறைவேற்றிக் கொள்ளத்தான் போகிறேன். நானும் மகளும் திரும்பிவர நான்கே நான்கு நாட்கள் தான். அதற்குள் தனியாக இருந்து நீங்கள் சரி பிழைகளை ஆராய்ந்து பார்த்தால் தெரியும். இப்ப மட்டுமல்ல எப்போதும் எனக்கு உங்களிடம் உள்ள அன்பும் நம்பிக்கையும் குறைந்துவிடாது. என் அம்மா சகுந்தலாவையும் நான் என்னுடன் அழைத்து வைத்திருக்கப் போகிறேன். அப்பாவும் உங்களைப் போலத்தான். அம்மாவை சுதந்திரமாக இருக்க விடாது அடிமையாகவே நடத்தினார். அம்மா இருக்கப்போகும் கொஞ்ச நாட்களாவது என்னுடன் அவரை சுதந்திரமாக வைத்திருக்கப்போகிறேன். வேறு ஒன்றில்லை.

அன்புடன் மனைவி

சிந்தியா

# மனம் என்னும் மாயம்

இரவு முழுவதும் அவள் தூங்கினாளா என்று அவளுக்கே தெரியவில்லை. ம்... கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு மூன்று மணி நேரம் தூங் கியிருப்பாளா? நீண்ட நாட்களின் பின் மன வருத்தம், மட்டற்ற மகிழ்ச்சி, எல்லையில்லா நின்மதி என மாறி மாறி அவளை அலைக்கழித்தபடிதான் அந்த இரவு நகர்ந்தது. ஆனாலும் அவளின் மனம் இத்தனை சீக்கிரம் இவ்வளவு தெளிவடையும் என்று அவளே நினைத்துப் பார்க்கவில்லை. கடந்த காலங்களை எண்ணிப்பார்த்தபோது வரிசையாய் எல்லாம் வந்து போயின.

என்னிடம் என்னதான் இல்லை என்று இவ்வளவு நாட்கள் இத்தனை கேவலப்பட்டேன் என்று எண்ணியபோது பெருமூச்சு ஒன்றும் நீண்டதாய் வந்தது. எல்லாம் விதியின் செயல் தான் அன்றி வேறென்ன என்று மனம் நின்மதி அடைந்தது. அவனுக்கும் அவளுக்குமான நெருக்கம், இல்லை நெருக்கம் என்று சொல்வதை விட இருவருக்குமான ஒரு தேவை, மனப் பகிர்வு இருவருக்குமே தேவைப்பட்டதாகவே அவள் எண்ணினாள். அவளது பயித்தியக்காரத்தனமான ஆசைகளை தானே தனக்குள் நியாயப்படுத்தியும் இருக்கிறாள். எனக்கு என் கணவன் மேல் அன்பு இருக்குத்தானே. அதனால் இது துரோகமாகாது என்று கூட எண்ணியிருக்கிறாள். அவனின் வார்த்தைகளில் மயங்கி வார்த்தைகளுக்காகவே அவனுடன் கதைக்கும் நேரங்களுக்காக

மணிக்கணக்காக காத்திருந்து தான் வீணாக்கிய நேரங்களை எண்ணினால் இப்பொழுது சிரிப்பா கவே இருக்கிறது.

நேற்று நடந்ததை எண்ண ஒருகணம் உடல் அதிர்ந்து மீண்டும் சமநிலை கொள்கிறது. கடந்த நாட்களாக அவனிட மிருந்து தொலைபேசி அழைப்பு இல்லாமல் இவள் தூக்கம் தொலைத்து பயித்தியக்காரிபோல் தான் ஆகிப் போனாள். தொலைபேசி கூட வேண்டாம். ஒரு செய்தியை எழுதி அவளை சமாதானப்படுத்தக்கூட அவன் முயலாதது அவளை எதை எதையோ எண்ண வைத்தது.

அவன் மட்டும் என்னை இப்படியே விட்டுவிட்டால் நிட்சயமாக நான் இறந்து விடுவேன் என அவள் மனம் உறுதியாக நம்பியது. மற்ற எதைப்பற்றியும் எண்ணிப்பார்க்காத அவளின் சுயநலம் கண்டு அவளுக்கே வெறுப்பும் ஏற்பட்டது. காலையில் எல்லாம் அவனுடன் இரண்டு நிமிடமாவது பேசி அவன் முகத்தைப் பார்த்த பின்னர்தான் அவளுக்கு வேலையே ஓடும். அப்படிபட்டவன் மூன்று நாட்களாக இவளுடன் பேசாது எதுவும் எழுதாது இவளை அசட்டை செய்வது இவளால் தாங்க முடியாததாகி, எத்தனை தரம் அழுதிருப்பாள் என்று எண்ண முடியாது அழுகையில் கழித்தாள்.

இவள் தன் தொலைபேசியில் செய்திகளை மன்றாட்ட மாக அனுப்பிக்கொண்டே இருந்தாள் அவனை ஒருமுறை தன்னும் தன்னுடன் கதைக்கும் படி. இனி எழுதி என்ன செய்வது. என்னை இப்படி வெறுக்கும்படி என்ன செய்தேன் என்று தானே தன்னைக் கேட்டும் பதில் கிடைக்கவில்லை. நேற்று கணவன் இவளை அவதானித்துவிட்டான். உனக்கு என்ன பிரச்சனை என்றான் முதலில். இவளுக்கு நெஞ்சு பயத்தில் திடுக்கிட்டது தான் எனினும் அவனுக்கு முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் எனக்கு என்ன பிரச்சனை வரப்போகிறது என்று அடித்து அமர்த்தி விட்டாள். அவனும் விடவில்லை. உன்னுடன் இத்தனை நாள் வாழ்கிறேன். எதையோ பறிகொடுத்தது போல் இருக்கிறாய். முகம் எல்லாம் வீங்கின மாதிரி இருக்கு. என்ன

என்று சொல்லு என்றான். ஒரு நிமிடம் எல்லாவற்றையும் கண வனிடம் கூறிவிடுவோமா என்று எழுந்த சுய பட்சாதாபத்துடன் கூடிய எண்ணத்தை மறுகணமே அடக்கிக் கொண்டாள்.

பாவம் கணவன். இப்ப எதோ சாதாரண விடயம் என்று கூறச் சொல்கிறான். நான் கூறினால் அவனால் தாங்க முடியுமா? ஒரேயடியாய் என்னை விட்டுவிட்டுப் போய் விடுவான். அதன் பின் அவளின் நிலை? ஊரெல்லாம் விடயம் தெரிந்து, அவளைப் போற்றுபவர்கள் எல்லோருமே காறித் துப்புவார்கள் என்று எண்ணியபோதே மனம் நடுங்கியதுதான். ஆனாலும் மற்ற வனைத் தூக்கிப் போட மனம் இடங்கொடுக்கவே இல்லை. இப்படி யான உறவுகள் கட்டு இல்லாத கிணற்றின் கரையில் நடப்பது போன்றது என்பதை அவள் உணரவே இல்லை. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். எங்கு பார்த்தாலும் இப்படியான விடயங் கள் கடைசியில் இரு பக்கத்திலும் பலத்த சேதாரத்தைத் தான் கொண்டுவர முடியும் என்பது தெரிந்தும் அவள் மனம் அவனிடமிருந்து மீளவே இல்லை.

அடிக்கடி தொலைபேசியை எடுத்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள். வேலை முடிய என்னுடன் கதைத்து விட்டுப் போகிறீர்களா என்று இவள் அனுப்பியிருந்த செய்திக்கு, அவன் போட்ட பதில் வெறும் ஆ என்ற வார்த்தை தான். அது அவளை அந்தரத்தில் பறக்க வைத்தது. மூன்று நாட்களின் தவிப்பு அடங்கப் போகிறது. அவனுக்கு என்மேல் கோபம் எதுவும் இல்லை என்று தன்னுக்குள் மகிழ்வடைந்தவளாக நேரத்தைப் பார்த்தாள். இன்னும் ஒரு மணிநேரம் இருக்கிறது. அவளின் வேலை நேரம் முடிவடைந்து விட்டது. அவள் பேருந்து எடுத்து வீட்டுக்குப் போய்ச் சேர ஒரு மணித்தியாலம் ஆகிவிடும். அவன் இவளுடன் பேசப்போவது வெறும் பத்தோ பதினைந்தோ நிமிடங்கள் தான். ஆனாலும் அதுவே அவளுக்கு நாள்முழுவதும் என்ன அடுத் தடுத்த நாட்களுக்கும் போதுமானதாக இருந்திருக்கிறது.

வாகன நெரிசலும் பேருந்தின் நெரிசலிலும் அவனுடன் நின்மதியாகக் கதைக்க முடியாது எனத் தோன்ற, பக்கத்தில்

இருந்த ஒரு கடைக்குள் புகுந்து அத்தனை துணிகளையும் ஒன்றும் விடாது புரட்டிப் பார்த்தாள். பெரிய கடை என்றதனால் யாரும் இவளை அசட்டை செய்யவில்லை. நேரம் குறைந்து கொண்டுவர மனம் அவன் குரல் கேட்கத் தயாரானது. இதோ அவன் அழைக்கிறான். ஸ்கைப்பில் கெட்போன் பொருத்தி தயாராக இருந்தவள் பதட்டமானாள். அவளுக்கு அவன் குரல் கேட்கவில்லை. மீண்டும் அவன் அடித்தபோதும் அதே நிலை தான். ஸ்கைப் வேலை செய்யாவிட்டால் போன் செய்யவென்று இன்னொரு தொலைபேசியும் தயாராவே வைத்திருந்தாள். அதில் அவனுக்கு போன்செய்ய அவனின் தொலைபேசி பிசி என்று கூறி இவள் இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்தது. நான் எடுக்கிறன் என்று பதில் அனுப்பினாள். அவனிடமிருந்து திங்கள் மாலை எடுக்கிறேன் என்ற வரிகளோடு செய்தி வந்தது. இன்று வெள்ளிக் கிழமை. திங்கள் என்றால் இன்னும் மூன்று நாட்களா? என்னும் பரிதவிப்பு ஏற்பட, மீண்டும் மீண்டும் அவனுடன் தொடர்பு கொண்டாள். அவன் யாருடனோ பேசிக்கொண்டிருப்பதை தொலைபேசியின் செய்தி சொல்லியது. மாறி மாறி இரு தொலை பேசிகளிலும் அடித்தும் எந்தப் பயனும் இல்லை.

என்னை வேண்டுமென்றே இவன் தவிர்கிறானா? ஒரேயடியாக என்னை கைவிட்டுவிடப் போகிறானா? அவனுக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டதா? ஏன் என்னைத் தவிர்க்க வேண்டும். இத்தனை நாட்களில் இப்படி அவன் செய்ததே இல்லையே. அவனுடன் கதைக்காது எப்படி உயிர் வாழப்போகிறேன் என்றெல்லாம் மனம் ஏதேதோ வெல்லாம் எண்ணி ஓலமிட்டுப் பேதலித்தது.

இவளுக்கு ஏமாற்றம் கோபம் எல்லாம் சேர்ந்து அழுகையை வரவழைத்தன. பொது இடம் என்றுகூடப் பார்க் காது பலத்து அழ ஆரம்பித்தாள். எங்கு நிற்கிறோம் என்ன செய் கிறோம் என்றெல்லாம் அவளுக்குப் புரியவே இல்லை. கடைச் சிப்பந்திப் பெண் வந்து இவள் தோளைத் தொட்டு உனக்கு ஏதும் வருத்தமா என்று கேட்டபோதுதான் இவளுக்குச் சுய நினைவு

வந்தது. கடகடவென கடையை விட்டு வெளியே வந்தவளுக்கு மூளை மரத்துப்போனது போல் உணர்வு ஏற்பட்டது. எங்கே போகிறோம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் வீதியில் இறங்கினாள்.

காது கிழியும் கோர்ண் சத்தங்கள். இவள் சுய நினைவு வரப்பெற்றவளாக தலையைத் திருப்பினால், பயத்தில் இதயம் வேகமாக அடிக்க மனதில் உறை நிலை அதிர்வுகள் ஏற்பட்டன. கையிலிருந்த பை அதிர்ச்சியில் கீழே விழ இன்னும் வினாடி நேரத்தில் நான் இறந்துவிடுவேன் என குரல் ஒன்று காதில் நாராசமாக ஒழிக்க அப்படியே அசைவற்று நின்றாள் அவள்.

அவளை அப்படியே பற்றி இழுத்தது ஒரு கை. அதன் பின்னரே சுய நினைவு வரப்பெற்று பார்த்தாள் அவள். ஒரு கறுப் பினப் பெண்மணி இவளை இழுத்து வீதி ஓரத்தில் விட்டு விட்டு வீதியில் விழுந்த இவளது கைப்பையை எடுத்துவந்து இவள் கைகளில் கொடுத்து என்ன மை சையில்ட். என்ன பிரச்சனை உனக்கு என்று இவளை கைகளை பிடித்து கூட்டிப் போய் அண்மையில் இருந்த பஸ்தரிப்பு நிலையத்தில் அமரவைத்தாள். அதன் பின் தான் இவள் திரும்பிப் பார்த்தாள். அரை அடி தூரத்தில் இருந்த விளக்குக் கடவையில் அந்த ஜீப் மோதி நிற்க பின்னால் வந்த இரு கார்கள் அடுக்கடுக்காய் ஒன்றுடன் ஒன்று மோதி வாகனங்கள் மூன்று இவளின் கண்மூடித்தனத்தால் நாச மாகி இருந்தன.

ஜீப்காரன் கூட அதிர்ந்துபோய் இருந்ததாகவே இவளுக்குப் பட்டது. அவர்களுக்கு ஒன்றும் நடக்கவில்லையா என்று இவள் அந்தக் கிழவியைக் கேட்டாள். நல்ல காலம் யாருக்கும் ஒன்றும் நடக்கவில்லைப் போல் தெரிகிறது. எதோ உன் அதிட்டம் உயிர் தப்பினாய் என்றுவிட்டு டேக் கேர் என்று கூறியபடி வந்த பஸ்ஸில் ஏறிச் சென்றுவிட்டாள் அவள். அவர்களில் மூன்றாவது கார்க்காரன் மட்டும் இவளைப் பார்த்து எதோ எல்லாம் திட்டி னான். இவள் எந்த உணர்வுமின்றிப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

அடுத்த பஸ் வர இன்னும் பத்து நிமிடங்கள் இருக் கின்றது என எண்ணியபடி பார்வையைத் திருப்பியவள் தனக்குப்

பக்கத்தில் அந்தக் கிழவி இருந்த இடத்தில் ஒரு SCRATCH CARD இருப்பதைக் கண்டதும் கைகளில் எடுத்துப் பார்த்தாள். அது இன்னும் சுரண்டிப் பார்க்கப்படாமல் புதிதாகவே இருந்தது. பாவம் அந்தப் கிழவியினுடையதாய்த்தான் இருக்க வேண்டும். என்னுடன் கதைத்துவிட்டுக் கைதடுமாறி வைத்துவிட்டுச் சென்று விட்டாள். நாளை வரும் போது கண்டால் கொடுப்போம் என எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டாள். அவள் இருந்த மன நிலையில் அவளுக்கு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால் போதும் என்றே இருந்தது.

வீட்டுக்கு வந்தபின் மனம் அவனால் ஏற்பட்ட ஏமாற்றத்திலிருந்தும் விபத்தினால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்தும் முற்றாக இல்லாவிட்டாலும் கொஞ்சம் சமநிலை அடைந் திருந்தது. அவன் திங்கள் போன் செய்கிறேன் என்றுதானே எழுதினான். நான் ஏன் என்னிலை மறந்து வீதிஎன்றும் பாராது அழுது என்னை நானே கேவலப்படுத்திக் கொண்டேன் என வெட்கமும் வந்தது. தொலைபேசி அடிக்க, எடுப்பதற்கு முன்னர் நின்றும் விட்டது. யார் என்று பார்ப்பதற்காக தொலைபேசியை எடுக்க, அந்த ஸ்க்ராட்ச் காட்டும் சேர்ந்து விழுந்து இவளைப் பார்த்துச் சிரித்தது. சரி வீதியில் கிடைத்தது. யாரும் உரிமை கொண்டாடலாம் தானே. அந்தக் கிழவியின் காட் தான் என்று என்ன நிட்சயம் என்று எண்ணியபடி காட்டை சில்லறைக் காசை எடுத்து சுரண்டியவளுக்கு மயக்கம் வராத குறை.

என்ன செய்வது எது செய்வது என்று மனம் படபடக்கத் தொடங்க, அவனின் இலக்கங்களைத்தான் கைகள் முதலில் அழுத்தின. அவனிடமிருந்து எந்தப் பதிலும் வராது போக, அவள் மனம் கொந்தளிப்புக்களின் வீரியத்தைத் தாங்க முடியாது தனக்கிருக் கும் ஒரே நம்பிக்கையானவன் கணவன் மட்டுமே என எண்ணி மனம் தெளிவடைய, யாரோ ஒருவனுக்காக இறந்து போயிருந் தால் என் குடும்பம் அனாதையாகி நடுத்தெருவில் நின்றிருக்குமே என எண்ணி மனதைத் துடைத்தவளாக கணவனுக்கு போன் எடுத்து தன் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டதுமன்றி மனதுள் ஒரு தெளிவான தீர்மானத்தையும் எடுத்துக்கொண்டாள்.

# விடுதலை

தாயை எண்ணிஎண்ணி நந்தாவுக்குத் தலைவலி வந்தது தான் மிச்சம். எதுவித முடிவையும் எடுக்க முடியவில்லை. இத்தனை நாள் எத்தனை துன்பத்தை அனுபவித்தாகிவிட்டது. இருந்தும் மனதில் முடிவெடுக்க முடியாத பயம் சூழ்ந்து தூக்கம் இழக்க வைத்ததுதான் மிச்சம்.

நான் ஏன் மற்றவர்களுக்குப் பயப்படுகிறேன்? அவர்கள் என்ன கூறினால் என்ன. எனக்கு ஒன்று என்றால் அவர்களா ஓடி வரப் போகிறார்கள். எனக்கோ என் குடும்பத்துக்கோ அதனால் எவ்விதப் பாதிப்பும் இல்லை என்று தெரிந்த பின்னாலும் என்ன தயக்கம் என தன்னைத்தானே கேட்டும் பயனில்லை. இத்தனை நாள் மற்றவர்கள் மனதில் என்னைப் பற்றி இருந்த பிம்பம் அழிந்துவிடுமே என்னும் எண்ணத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது மனதை அங்குமிங்கும் அலைக்கழித்தும் விடை தான் கிடைக்கவில்லை.

ஏற்கனவே அண்ணனும் அக்காவும் தீர்மானமாகச் சொல்லி விட்டனர் தான். "நாங்கள் அம்மாவுடன் இருப்ப தில்லை. வெளி நாட்டில் இருந்துகொண்டு அடிக்கடி வந்து போய்க் கொண்டும் இருக்கேலாது. உன் மனதுக்குப் பட்டதைச் செய்" என்று கூறியும் மனம் ஒரு நிலைக்கு வர முடியாமல் அல்லாடிக்கொண்டுதான் இருக்கிறது. சரி இப்பிடியே யோசிச்சுக் கொண்டு இருந்தால் ஒரு

வேலையும் நடக்காது என எண்ணியவளாய் சமைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தாள் நந்தா.

நான்கு அறைகளைக் கொண்ட பெரிய வீடு. ஒரு அறையைத் தாய்க்கு ஒதுக்கி காலை ஒன்பதிலிருந்து மாலை ஆறு மணிவரை தாயைப் பராமரிப்பதற்கும் ஒரு ஆளை ஏற்பாடு செய்து வசதியாகத்தான் தாயை வைத்திருக்கிறாள் நந்தா. பார்ப்பவர்கள் "பிறந்தால் இவளுக்கு எல்லோ தாயாகப் பிறக்க வேண்டும்" என மனதுள் நினைக்குமளவு தாயை வைத்திருக்கிறாள் தான். இப்ப இரண்டு மாதங்களாகத்தான் எல்லாம் தலை கீழாய் போய்... பெருமூச்சு ஒன்று தான் அவளிடம் இருந்து கிளம்பியது.

***

அவளின் ஆறு வயதில் தந்தை இறந்துவிட, தாய் பிள்ளைகளைப் பற்றியே கவலை கொள்ளாது கணவனின் பிரிவை எண்ணியே அழுதபடி இருக்க, பதினாறு வயதான மகள் வேறு வழியின்றிக் குடும்பப் பொறுப்பைச் சுமக்கவேண்டி ஏலெவலுடன் படிப்பை நிறுத்திவிட்டு சமையல் வேலை தொடக்கம் தம்பி தங்கையின் படிப்புத் தொடக்கம் வீட்டு வேலையும் பாத்திராவிட்டால் அன்று என்ன நடந்திருக்கும் என்று எண்ணியவளுக்கு தமக்கையை நினைத்து மனம் சிலிர்த்தது. கமலத்தின் சகோதரர்கள் பெண் ஆண் எனப் பலர் இருந்தாலும் எத்தனை நாளுக்கு என்று அவர்களும் அக்கா குடும்பத்தைப் பார்ப்பார்கள்.

அவர்கள் இரக்கப்பட்டுக் கொடுப்பதை வாங்கவே தமக்கை வேணிக்கு மனம் இருக்காது. ஆனாலும் வேறு வழி யின்றி வாங்கியவள், பதினெட்டு வயதில் நெசவடிக்கப் போய் விட்டாள். அதில் வரும் வருமானம் குடும்பத்தைக் காக்கப் போதுமானதாக இருந்தது. வீட்டில் ஒரு ஆண் இருந்தால் அந்தக் குடும்பத்துக்குக் கிடைக்கும் மரியாதையே தனிதான். தலைவன் இல்லை என்றால் எதோ தமது சொத்தைக் கேட்டதுபோல உறவுகள் நடந்து கொண்டதை இப்ப நினைத்தாலும் எதோ செய்தது நந்தாவுக்கு.

மகள் வேலைக்குச் செல்லத் தொடங்க தாய் வேறு வழியின்றி சமைத்தார் தான் ஆயினும் காலையில் வீடு கூட்டி வெளி முற்றம் கூட்டி சமையல் சாமான்கள் எல்லாம் வாங்கி... ஒரு ஆணோ அல்லது பெற்றோரோ செய்யவேண்டிய வேலை கள் எல்லாவரையுமே எந்த வித முகச் சுளிப்பும் இல்லாமல் செய்த தமக்கையை நினைக்க இப்பவும் நந்தாவுக்கு கண்ணீர் வந்தது. இப்படியும் ஒரு தாய் பொறுப்பு இல்லாமல் இருக்க முடியுமா என்று அவள் எத்தனையோ தடவை எண்ணிப்பார்த்தும் விடை கிடைக்கவில்லை.

தமையன் வளர்ந்து இருபது வயதானதும் காணியை ஈடு வைத்து வெளிநாடு அனுப்பியிராவிட்டால் இன்றும் அப்படியே தான் இருந்திருப்போம் என்று அவள் எண்ணினாள். தமையன் வந்து சிறு வயதிலேயே ஒரு பாக்டரியில் வேலை செய்து காசு அனுப்பத்தான் இவர்கள் கொஞ்சம் நிமிர்ந்தது. பாவம் அண்ணன் அவனுக்கும் படிப்புப் பெரிதாக ஏறவில்லை என எண்ணிய நந்தாவுக்கு தானும் கூடப் படிக்காமல் விளையாட்டுப் பிள்ளையாகத் திரிந்தது நினைவில் வரச் சிரிப்பு வந்தது.

ஒலெவல் படித்துக்கொண்டிருக்கும் போதே தமையன் தமக்கையையும் இவளையும் யேர்மனிக்குக் கூப்பிட இருவரும் எவ்வளவு ஆவலுடன் வந்தார்கள். தமக்கைக்கும் திருமணம் நடந்து இவளும் திருமணம் செய்தபின்பே தமையன் திருமணம் செய்து, இன்று எதோ அண்ணா வசதியாக வாழுகிறான் என எண்ணியவள் மீண்டும் தாயை நினைத்துப் பார்த்தாள்.

தாயைத் தனியே விட்டுவிட்டு வந்தது மூவருக்கும் கவலை தான் எனினும் சுற்றிவரத் தாயின் சகோதரர்கள் இருப்பது ஆறுதல் தந்தது. ஆனாலும் தாய் தானே சமைத்து உண்ணாது தங்கையின் வீட்டிலிருந்து வரும் உணவை உண்டு காலம் கழிக்க, கேட்ட இவளுக்குக் கோபம் தான் வந்தது. “என்னம்மா நீங்கள். சித்தி நான்கு பிள்ளைகளுடன் உங்களுக்கும் சேர்த்துச் சமைக் கிறதோ? ஒரு கறி என்றாலும் நீங்களே சமைத்துச் சாப்பிடுங்கோ” என்று சொல்லி சித்தியாரிடமும் ”இனிமேல் அவவுக்குச்

சமைத்துக் கொடுக்க வேண்டாம். அவவே செய்யட்டும்" என்று கடுமையாகச் சொன்ன பிறகு சித்தி சமைத்துக் கொடுப்பதை நிறுத்திவிட்டார் தான் ஆயினும் கமலம் பெரிதாக மாறவில்லை. பலநாள் சமைத்தாலும் சிலநாள் சமைக்கும் பஞ்சியில் பட்டினி கிடந்தது நந்தாவின் காதுகளுக்கு வர கோபம் தான் வந்தது. அதன் பின் தாயை நினைத்து இரக்கமும் வர ஒருவாறு தாயை தன்னுடனேயே கூப்பிட்டு வைத்து, இப்ப இருபத்தி ஐந்து ஆண்டுகளும் முடிந்துவிட்டன.

இந்த இருபத்தைந்து ஆண்டுகளிலும் தாய் சொகுசாக இருந்து உண்டகாலம் தான் அதிகமே தவிர இவளுக்குச் சமைத்துக் கொடுத்ததை விரல் விட்டு எண்ணி விடலாம்.

நான் தான் அம்மாவைப் பழுதாக்கிப் போட்டானோ என்று அடிக்கடி இவளுள்ளே கேள்வி எழுவதுதான். தாய் எல்லோ தானாக உதவ முன் வரவேண்டும். இவளாக எப்படிச் சமையுங்கோ என்று கூறுவது. தாய் இவள் வேலைக்குப் போகும் போதுதான் நித்திரையால் எழும்பிவந்து வரவேற்பறையில் தொலைக்காட்சியைப் போடுவார். இவள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு சென்று பள்ளியில் விட்டுவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டு மீண்டும் பிள்ளைகளுடன் வரும்போது தான் தாய் மதிய உணவைச் சாப்பிட ஆரம்பிப்பார்.

இவளுக்குப் பார்க்க எரிச்சல் வரும். என்னம்மா நேரத்துக்குச் சாப்பிடுவதற்கு என்ன? நீங்கள் என்ன குழந்தையோ என்று ஏசிய பின் இரண்டு நாட்கள் நேரத்துக்குச் சாப்பாடு நடக்கும். பிறகும் வழமையான கதைதான். கொஞ்சநேரம் வெளியே நடந்துவிட்டு வாங்கோ அம்மா என்றாலும் பஞ்சி. எனக்கு விருப்பம் இல்லை என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு இருப்பவரை என்ன செய்ய முடியும்.

என்றாலும் அம்மாவைத் திட்ட அவளுக்கு மனம் வருவதே இல்லை. எதோ என் பிள்ளைகளுடன் கதைத்துப் பேச வீட்டுக்கு ஒரு துணையாக அம்மா இருக்கிறார் தானே என்று மனதைச் சமாதானம் செய்தாலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக

எந்த இடத்துக்குமே விடுமுறைக்குச் சென்று வரமுடியாமல் தானும் பிள்ளைகளும் படும்பாடு கொஞ்ச நஞ்சமா என எண்ணியவள், அதற்கு முதலும் போகுமிடங்கள் எல்லாவற்றுக் கும் தாயும் அடம்பிடித்து வந்ததும், வந்த இடங்களில் எல்லாம் சமாளித்துப் போகாது தாய்க்கு என்றே தான் பலவற்றைத் தியாகம் செய்ததும், தாய்க்கு விசா கிடைக்காததால் போகாமல் நின்றதுமாக நினைக்கும் போது மனம் சூடாவதை தடுக்க முடியவில்லை நந்தாவால்.

இப்ப இரண்டு ஆண்டுகளாக வடிவாக நடக்க முடியா மல் பெரும்பாலும் படுத்துக் கிடக்கவே ஆசைப்பட்ட தாயைப் பலவந்தமாக நடத்தி எழுப்பி நடக்க வைத்தது எல்லாம் தாய் படுத்த படுக்கையாகிவிடக் கூடாது என்பதனால் தான். ஆனாலும் வயோதிகத்தையும் அதன் பால் ஏற்படும் மாற்றங் களையும் எவராலுமே தள்ளிப் போட முடியாதே.

சமையல் முடித்து தாய்க்கு உறைப்புப் போடாமல் கஞ்சி செய்து குசினியை ஒதுக்கியவள், ரொயிலட் பாத்ரூமை கழுவ ஆரம்பித்தாள். தாயின் குவிந்து கிடந்த ஆடைகளை தோய்ப் பதர்க்குப் போட்டு, நப்பிகள் சேர்ந்த பையையும்கொண்டுபோய் வெளியே உள்ள குப்பை வாளியுள் போட்ட பின்பே அவளால் நின்மதியாகக் குளிக்க முடிந்தது.

இப்போதெல்லாம் ஒரு நாளைக்கு ஆறு நப்பீஸ் கட்ட வேண்டும் தாய்க்கு. அப்படிக் கட்டினாலும் எப்படித்தான் படுக்கையும் நனைந்து போகிறதோ தெரியவில்லை. பகலில் மட்டும் தான் அம்மாவைப் பார்க்கும் பெண் நிற்பது. இரவில் அந்தப் பெண்ணை நிறுத்திவைக்க முடியாது. அதனால் தானே தான் இரவில் அலாம் வைத்து எழுந்து மாற்றுவது. அதைக்கூட மனம் கோணாமல் நந்தா செய்ததுக்கு ஒரு சுயநலமான காரணமும் இருந்ததுதான். நான் செய்வதைப் பார்த்தாவது பிள்ளைகள் எனக்குச் செய்வார்களே என்பது தான். ஆனால் இப்ப அவளுக்கே முடியவில்லை. காலையிலும் நப்பி மாற்றி விட்டுத்தான் அவள் செல்வது. அதை மாற்றிய கையுடன் தேநீர்

அருந்தவே ஒரு மாதிரி இருக்கும். இதில் எங்கே சாப்பிட மனம் வரும். டயட் செய்தால் கூட இத்தனை நிறை குறைக்க முடியாது. அவள் நிறை இழந்து பொலிவிழந்து நோயாளியைப்போல் அவளுக்கே தன்னைப் பார்க்க முடியாமல் இருந்தது.

கடந்த வாரம் தமக்கை வந்து நின்று தாய்க்கு உள்ள வேலை எல்லாம் செய்ததில் இவளுக்கு கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனது தான். அதுக்காக வேலை குடும்பம் எல்லாம் விட்டுவிட்டு தமக்கை இங்கு வரவாமுடியும்? இரண்டு மாதங்காளாகவே நினைவுகள் தப்பி, யாரையும் அடையாளம் தெரியாததாக தாய் ஆனபின், அடி மனதில் தாய்க்கு எதுவும் ஆனாலும் என்று ஒரு பயம் ஓடிக்கொண்டே இருந்தது. போன வாரம் தான் தாய் இரவில் கத்த ஆரம்பித்ததும். "அய்யோ விழுந்து போனன், ஓடி வா நந்தா" என்று கத்திய கத்தில் இவள் துடிக்கப் பதைக்க எழுந்து ஓட, மற்றவர்களும் எழுந்து ஓடி வந்து பார்த்தபோது தாய் தொடர்ந்தும் கட்டிலில் இருந்து கத்திக்கொண்டே இருந்தார். எழும்பி நடக்க முடியாதவருக்குக் கத்த மட்டும் எங்கிருந்து பலம் வருகிறது என்று நந்தாவுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

தொடர்ந்து இப்போதெல்லாம் இரவுகளில் தாயின் அலறலால் நான்குபேரின் தூக்கம் கெடுவதுடன் அயலட்டை யிலும் என்ன நினைக்கிறார்களோ என்று யோசனையாக இருந்தது. இரக்கமும் ஒரு அளவுக்குத்தான் இருக்க வேணும். அம்மா வாழ்ந்து முடிச்சிட்டா. இனி அவவுக்காவோ அல்லது மற்றவர்களுக்காகவோ பார்க்க முடியாது. நாளைக்கே அந்த முதியோர் இல்லம் சென்று விசாரிக்க வேண்டும் என்று முடிவு எடுத்தவளாய் நின்மதியாகத் தூங்கிப்போனாள் நந்தா.

காலையில் எல்லோருமே ஒருவரை ஒருவர் பார்ப்பதைத் தவிர்த்து எதோ குற்றம் செய்தவர்கள் போல் திரிய, நந்தா தாயின் உடைகளையும் அவர்கள் மேல்மிச்சமாகச் சொல்லியிருந்த வற்றையும் சூட்கேசில் அடுக்கிக் கொண்டு இருந்தாள். அவளுக்கே கூட வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது. ஆனாலும் தான் உடைந்தால் மற்றவர்களும் மனம் மாறிவிடக்

கூடும் என எண்ணி அழுகையை அடக்கியபடி ஒன்றும் நடக்காதவள் போல் அடுக்கிய சூட்கேசைப் பூட்டினாள்.

தாயைத் தூக்கிச் சென்று குளிப்பாட்டி ஆடை அணி வித்துக் கீழே கணவனும் மனைவியுமாகத் தூக்கி வந்து காரில் இருத்தியபின்னும் தாய் எந்தவித உணர்வும் அற்று விழித்துக் கொண்டு இருக்க இவளுக்குள் கேவல் எழுந்தது. நானும் இப்பிடித் தான் ஒருநாள் என்னும் நினைவே கசப்பாக மனதில் எழுந்தது.

அது ஒரு தமிழர்கள் நடத்தும் இல்லம் என்பதனால் கொஞ்சம் நின்மதியாகவும் இருந்தது. வீட்டிலிருந்து ஐந்து மைல்கள் தானே. ஒரு நாளைக்கு இரண்டுதடவைகள் வந்து தாயைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று தன் மனதுக்குச் சமாதானம் சொன்னவள், கணவனுடன் சேர்ந்து தாயைத் தூக்கி தள்ளும் நாற்காலியில் இருத்தி கொண்டுபோய் அவர்களிடம் கொடுக்க, அவர்கள் தாயின் அறைக்கு அவரைக் கொண்டு செல்ல, சோர்ந்த மனதுடன் நந்தாவும் அவர்கள் பின்னே சென்றாள். விட்டால் மனைவி எங்கே அழுது விடுவாளோ என்ற எண்ணத்தில் கணவனும் மனைவியுடன் சேர்ந்து, தாய்க்காக ஒதுக்கப்பட்ட அறையில் அவரை விடும்வரை நின்று, தாயின் உடைகளையும் அவருக்குரிய கபேட்டில் அடுக்கி முடிய "நந்தா எங்க" என்று மீண்டும் மீண்டும் அவளிடமே கேட்கும் தாயின் கைகளைத் தடவி "நான் இங்கதான் நிக்கிறன் அம்மா" என்று இவள் சொல்லியும் மீண்டும் மீண்டும் கேட்கும் தாயை அணைத்தபடி விக்கிவிக்கி அழத் தொடங்கினாள் நந்தா.

ஒருவாறு கணவன் அவளைத் தேற்றி அங்கிருந்து வீட்டுக்கு அழைத்து வந்த பின்னும் நந்தாவின் அழுகை நிற்க வில்லை. தாயின்றி வீடே வெறுமையானது போல் இருக்க, அவசரப்பட்டுவிட்டேனோ என்ற எண்ணம் தோன்ற, அதைக் கணவனிடம் வாய்விட்டே கூறினாள்.

கொஞ்சநாளைக்கு அப்பிடித்தான் இருக்கும். போகப் போகப் பழகிவிடும். கவலைப்படாதையும் என்ற கணவனை ஆறுதலுடன் பார்த்தாள். அன்று இரவு தாயின் சத்தம்

இல்லைத்தான் ஆனாலும் நந்தாவுக்குத் தூக்கம் வராது புரண்டு புரண்டு படுத்ததில் காலை விடிந்ததுகூடத் தெரியவில்லை.

தொலைபேசிச் சத்தம் வந்ததுபோல் இருக்கப் புரண்டு படுத்தவளைக் கணவன்தான் விடிஞ்சிட்டுது நந்தா எழும்புங்கோ என எழுப்பினார். இவள் பல் தீட்டி முகம் கழுவிவிட்டு வந்தபின் தான் கணவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தவள், இருண்டுபோய் இருந்த முகத்தைப் பார்த்து என்னப்பா என்றாள். "மாமி காலையில இறந்திட்டாவாம். இப்பதான் போன்செய்தவை" என்று கணவன் கூறி முடிக்கும் முன் "அய்யோ அம்மா நான் உங்களைச் சாக்காட்டிப் போட்டனே" என்று கூறியபடி தலை யிலடித்து அழும் நந்தாவை, எது சொல்லியும் தேற்ற முடியாமல் தானும் குற்றவாளியானதான உணர்வுடன் பார்த்துக்கொண்டு நிற்கத்தான் கணவரால் முடிந்தது.



இணுவில் என்னும் ஊரில் பிறந்து தன் பதின்ம வயதில் பெற்றோருடன் யேர்மனிக்குப் புலம்பெயர்ந்து பதினெட்டு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் பிரித்தானியாவுக்கு இடம்பெயர்ந்து பதினைந்து ஆண்டுகளாக அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி நிவேதா உதயராயனின் வரலாற்றைத் தொலைத்த தமிழர் - ஆய்வு நூல், நிறம் மாறும் உறவுகள் - சிறுகதைகள், நினைவுகளின் அலைதல் - கவிதைத் தொகுதி ஆகியவற்றோடு நான்காவது நூலாக "உணர்வுகள் கொன்றுவிடு" சிறுகதைத் தொகுப்பும் இடம்பெறுகிறது.

புலம்பெயர் தமிழ் சிறார்களுக்காகத் தமிழ்ப்பள்ளி ஒன்றை கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தி வரும் இவர் புலம்பெயர் தேசத்தில் தமிழ் அழிந்து விடாதிருக்க தம்மாலான முயற்சிகளை செய்கிறார். கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பட்டறை ஆசிரியராக, ஒலிபரப்பாளராக, நாடகங்களை எழுதி நெறிப்படுத்தும் ஒருவராக, கவிதை, கட்டுரை, அரங்க நிகழ்வு போன்றவற்றினூடு தன் திறமைகளை வெளிக்காட்டி வருகிறார்.

ISBN 978-955-4676-91-6

9 789554 676916